வாரப் பதிப்பு விலை சதம் 25

...த் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

முக்கிய அறிவித்தல்

மில்க் வைற் நீல சோப்

தற்பொழுது புதிய ரசாயன பொருட்கள் சேர்க்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்

கூடிய உடுப்புகளை சலவை செய்யலாம். இன்றே வாங்கி பரீட்சித்து பாருங்கள்.

புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 ஆவணி திங்கள் 20-ம் நாள் (5—9—1965) ஞாயிற்றுக்கிழமை ஐ.அல் 8 | இதழ் 15

# தொழில் வளர்ச்சிக்கு உதவி

## டாக்டர் நாகநாதன் கொணர்ந்த திட்டம்

### அமைச்சர்களிடம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

"சுவிட்சர்லாந்து நாட்டில் மிகச் சிறிய விகிதாசார மொழியைப் பேசும் இனத்திற்கும், பெரும்பான்மை இனத்தவர்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. சமஷ்டி ஆட்சி முறையை அனுசரிப்பதனாலேயே இந்நாடு சுபீட்சமுடன் வாழ்கிறது.

"இலங்கைக்கு பொருளாதார உதவிகள் அனைத்தையும் செய்ய பிரான்ஸ் போன்ற நாடுகள் காத்துக்கொண்டிருக்கின்றன. சுவிஸ் வங்கியும் இந்நாட்டுக்கு உதவுவதற்கு அவாவுடனிருக்கிறது. கைத்தொழில் பொருளாதார முன்னேற்றத்துக்கான பல அரிய ஆலோசனைகளைப் பெற்று வந்திருக்கிறேன். தமிழரசுக் கட்சி தலைவர்களுடன் கலந்தாலோசித்துவிட்டு இவ்வாலோசனைகளை அமைச்சர்களிடம் சமர்ப்பிக்கப்போகிறேன்." என்று லண்டனில் சிகிச்சை பெற்று சென்ற வியாழக்கிழமை தாயகம் திரும்பிய டாக்டர் இ. மூ. வி. நாகநாதன் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

இலண்டனிலுள்ள 'கை' மருத்துவவிடுதியில் சிகிச்சை பெறுவதற்காக கடந்த மே மாத மத்தியில் சென்ற நல்லூர் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சித் தலைவர்களுள் ஒருவருமான டாக்டர் இ. மூ. வி. நாகநாதன் வியாழக்கிழமை பகல் 2 மணிக்கு இந்திய விமானத்தில் கொழும்பை வந்தடைந்தார்.

விமானத்துறையில் திரண்டிருந்த தமிழ் பேசும் மக்கள் மத்தியில், புதிய உத்வேகத்துடனும் புத்துணர்ச்சியுடனும் டாக்டர் நாகநாதன் கலந்துரையாடக் காணப்பட்ட பொழுது அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

'வாழ்வே அஸ்தமித்துவிட்டதோ என்று இந்நாட்டை விட்டுச் செல்லும் போது கருதினேன். 'தமிழ் பேசும் மக்களுக்கு நீ ஆற்ற வேண்டிய தொண்டு இன்னும் இருக்கிறது. போய் அவர்களுக்கு இன்னும் சேவை செய்துகொண்டிரு' என்று ஆண்டவன் கட்டளை பிறப்பித்து தமிழ் பேசும் மக்களிடம் என்னை மீண்டும் அனுப்பிவிட்டான்' என்று டாக்டர் உணர்ச்சி ததும்ப சுதந்திரன் நிருபரிடம் கூறினார். அவருடைய கண்கள் அப்போது பனித்திருந்தன.

'ஒரு தேசிய இனத்தின் விடுதலைக்காகப் பாடுபடும் தன்மான வீரனுக்கு எதுவித மான கட்டணமும் இன்றி சேவை புரிவோம்' என்று கூறிக் கொண்டே பிரபல டாக்டர்களுள் ஒருவரான டாக்டர் மக்கிவின் டாக்டர் நாகநாதனுக்குச் சிகிச்சை அளித்தாராம். முற்றிலும் புதிய விஞ்ஞான முறையில் தமக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாக டாக்டர் கூறினார்.




கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தில் வியாழக்கிழமை வந்திறங்கிய டாக்டர் இ. மூ. வி. நாகநாதனுக்கும் திருமதி நாகநாதனுக்கும் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு, திருமதி சி. எக்ஸ். மார்டின் முதலானோர் படத்தில் காணப்படுகின்றனர்.

1956ம் ஆண்டு ஜூன் 5ம் திகதி காலி முகத்திடலில் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து தமிழரசுக்கட்சி நடாத்திய சத்தியாக்கிரகத்தின் போது டாக்டர் நாகநாதன் காடையர்களினால் நையப்புடைக்கப்பட்டவர். 1961 ம் ஆண்டு பெப்பரவரி மாதத்தில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான சத்தியாக்கிரக இயக்கத்திலும் பொலீசாரின் குண்டாந்தடிக்கு டாக்டர் இரையாக்கப்பட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## காந்திஜியின் பேரன் வந்துள்ளார்



காந்தி அடிகளினதும் ராஜாஜி அவர்களினதும் பேரனான திரு. ராஜ்மோகன் காந்தி வியாழக்கிழமை பகல் விமான மூலம் கொழும்பு வந்து சேர்ந்தார். தார்மீகப்புனருத்தாரண இயக்கப் பணிகளில் அவருடன் ஈடுபடும் வேறு பல நாட்டு இளைஞர்களும் வந்துள்ளனர். தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்களை தாம் இலங்கையை விட்டுச்செல்லு முன்னர் ஒருதடவை காணவேண்டும் என்று நமது நிருபரிடம் கூறினார். திரு. செல்வநாயகம் யாழ்ப்பாணத்திலிருப்பதால் ஞாயிறு காலையில் இருவரும் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அருத எண்ணெய்

அதிர்ஷ்டப் பரிசு

அஞ்சலட்டைகள்

முடிவுத் திகதி 31-12-65 வரை நீடிக்கப்பட்டுள்ளது!

காரணம்

வெற்றுப் போத்தலை திருப்பிக் கொடுத்து அஞ்சலட்டைதனைப் பெற்றுக் கொள்வதற்கு அளிக்கப்பட்ட அவகாசம் போதவில்லையென கோபித்துக்கொண்ட ஆயிரமாயிரம் பாவனையாளர்களுக்கும், வியாபார நண்பர்களுக்கும் மற்றேனைய ஏஜண்டுத் தோழர்களுக்கும் ஆறுதலளிக்கு முகமாகவே மேற்படி முடிவுத் திகதியை 31-12-65 வரை நீடித்துள்ளோம். தவிரவும்.........

பரிசுத் தொகையை ரூ. 600-00 ஆக உயர்த்தியுள்ளோம்!

ஆகவே

பல்லாயிரக்கணக்கான அருத எண்ணெய் பாவனையாளர்கள் புதிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பரிசுத் திட்டத்தில் பங்கெடுத்துக்கொள்வார்களாக!

இப்படிக்கு,
தயாரிப்பாளர்
பி. எம். திசாநாயக்க

அருத எண்ணெய் தொழிலகம்,
கம்பளை.

போன் : 454.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘தத்துவ விசாரணை-அழகுணர்ச்சி எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு என் கணவர் சென்று விட்டார். வெறுமனே இப்படி உட்கார்ந்து கொண்டு, அங்கொன்றும் இங்கொன்றுமாக அவருடைய நினைவுகளைத் தெளிவில்லாமல் எண்ணிப் பார்ப்பதில் எந்த வித அர்த்தமும் இல்லை. இப்படித் தெளிவில்லாமல் எண்ணுவதே அவருக்குப் பிடியாத ஒன்று. எதையும் வெளியரங்கமாகச் சொல்லி விட வேண்டும் என்பது அவர் தத்துவம். அவரைப் பூஜிப்பதாகச் சொல்லிக் கொள்ளும் நான் இன்னமும் கால விரயத்தில் இறங்காமல், அவர் என்னுள்ளத்தில் எழுதி விட்டுச் சென்ற நாட் குறிப்பைப் பகிரங்கமாக உங்கள் முன் விரித்து வைக்கின்றேன். இந்த நாட் குறிப்பில் கண்டிருக்கும் ‘கதையைப் படித்துவிட்டு உங்களில் யாராவது, ‘இது கணேசனின் நாட் குறிப்பா? அல்லது நம்முடைய நாட் குறிப்பா?’ என்று குழப்பமடைந்தால் போதும்! என் கணவருடைய சித்தாந்தம் வலுப் பெறுகின்றது என்பதுதான் அந்தக் குழப்பத்தின் பொருள். இதோ உங்கள் முன் விரிந்துகிடக்கும் என் கணவருடைய நாட் குறிப்புப் புத்தகத்தைக் ‘கட கட’ வென்று புரட்டிக் கொண்டு செல்லும்படி பணிவோடு உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.’

நான், என்னுடைய கணவர் என்னிடம் சொல்லிவிட்டுச் சென்ற கதையை உங்களுக்குச் சொல்லத் தொடங்கிய ஆரம்பத்தில் இவ் வண்ணம் குறிப்பிட்டிருந்தேன். என் அன்பான வேண்டுகோள் வீண் போகவில்லை யென்பது நீங்கள் இதுவரை, என் கணவருடைய கதையைப் படிப்பதில் காட்டிய அபரிமித ஆர்வத்திலிருந்து நன்கு புலனாகி விட்டது! உங்கள் அனைவருக்கும் என் இதயம் செறிந்த நன்றியைக் கூறிக் கொண்டு, சொற்பமுள்ள என் கணவரின் மீதிக் கதையையும் இதோ சொல்லி முடித்துவிடுகிறேன்.

அன்று அந்த மதுக் கடையில் என் கணவரும், அவருடைய நண்பர் குமரனும் மதுவை அருந்திக் கொண்டிருந்த போது, தாமரை குமாரியின் பெயரை அவருடைய நண்பர் குறிப்பிட்டதும், உளம் சிலிர்த்துச் சன்னதம் கொண்ட என் கணவரின் நிலை அவருடைய நண்பரை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. அப்படி அவர் உணர்ச்சி வசப்பட்டு தம்மையே இழந்துவிட்ட பலவீன நிலையை அதற்கு முன் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவருடைய நண்பர் காணவில்லையாதலால், தாமரைகுமாரி எந்த அளவில் அவருடைய உள்ளத்தை ஆட் கொண்டிருக்கின்றாள் என்பதைப் புரிந்து கொள்வதில் அதிகமான சிரமம் ஏற்படவில்லை அவருடைய நண்பருக்கு!

அந்த சன்னத நிலையோடு கோட்டலை விட்டு வெளியேறிய என் கணவரை அழைத்துக்கொண்டு நேரே ஊர் வந்து சேர்ந்தார் அவருடைய நண்பர். குமரனும், அவரும் ஊர் வந்து சேர்ந்து விட்டனர் என்பதைக் கேள்வியுற்றதும் நான் அடைந்த மகிழ்வுக்கும், குதூகலத்துக்கும், எல்லை இல்லை. நேரே அவருடைய இல்லம் சென்று, மலையகச் சுவாத்தியத்தில் அவர் உடல் பெற்றிருந்த புது மெருகை என் கண்கள் இரண்டினாலும் தாபம் தீரும் மட்டும் பார்த்துக் களித்தேன். நண்பர்கள் இருவரும் ஒருத்தர் மாறி ஒருத்தராக மலை நாட்டின் செழிப்பை ‘ஓஹோ’ என்று பாராட்டி என் ஆவலைத் தூண்டிக் கொண்டிருந்தனர். அதன் பிறகு காரியங்கள் அதிகம் தாமதப்படையவில்லை. மலையகத்திலிருந்து ஊருக்கு வருவதற்கு அவர் காலடி எடுத்து வைத்த தருணம் மங்கள கரமானதாக அமைந்ததால் என் கழுத்திலும் மங்கள நாண் ஏறுவதில் சுணக்கம் ஏற்படவில்லை.

இக்கதையின் ஆரம்பத்தில் நான் கூறியதுபோல் என்னை அவர் கைப்பிடித்த அன்று—என்னைக் கைபிடிக்கும்வரை அந்தக்கேள்வியைக் கட்டிக் காத்து வந்ததுபோல்—அந்தக் கேள்வியைக் கேட்க, அதற்குக்கிடைத்த பதிலும், அதிலிருந்து வெடித்த பல உண்மைகளும் அவரின் மனப் பெட்டகத்தை மட்டும் திறந்துவிடும் ‘சாவி’ யாக மட்டும் மாறிவிடாமல், என் வாழ்வில் ஊமைப்பிறவி யெடுத்திருந்த அந்த ‘உண்மை’யினையும் கெல்லிவெளிப்படுத்தும் கருவியாகவும் அது மாறியிருந்தது.

என்னைக் கைப்பிடித்த அன்று அவர் கேட்டார். ‘சரோ! என்னைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?’ என்று

அவருடைய இந்தத் திடீர்க் கேள்வியால் நாணமுற்ற என்னை அவர் தம்முடைய வாதத்திறத்தால் மடக்கி, எனக்குத் தைரிய மூட்டியதைத் தொடர்ந்து—மறைமுகமாக என்னை நிர்ப்பந்தித்ததைத் தொடர்ந்து — நான் கூறினேன்; ‘நான் கனவுகண்டு பெருமூச்சு விட்டது வீண்போகவில்லை!’ என்று

என்னுடைய இந்தப் பதிலைக் கேட்டு அவர் வெகுவும் என்னைப் பாராட்டவேபெருமிதத்தால் என் கண்கள் பனிக்கத் தொடங்கின.

என் கண்களில் பனித்த நீர் முத்துக்களைத் திருமணக் கோலத்திலிருந்த என் கணவர், தம்முடைய பட்டுச்சால்வையால் வாஞ்சையோடு ஒற்றிவிட்டுக் கூறிய வார்த்தைகள் என் உடலில் மின்னைப் பாய்ச்சி என்னைத் திணறடிக்க வைத்துவிட்டன. சாமர்த்தியமான அவருடைய வாதத்திறனும், சத்திய இழையோடும் அவருடைய கருத்துக்களும், சமூகக் கோட்பாடு என்ற வட்டத்துள் நின்று பழக்கப்பட்டு விட்ட எனக்குச் சற்று வியப்பைத்தந்தன. எனினும் அவருடைய வார்த்தையால் விரவிக்கிடந்த யதார்த்தம் எனக்குள்ளிருந்த அச்ச உணர்வையும், நடுக்கப் பாங்கையும் விரட்டியடித்து எனக்குத் தைரியத்தைத்

## 32. சரோஜா பேசுகிறாள்....

தந்தன; கொஞ்சமும் கூச்சமின்றி என் மனச்சாட்சியை நெருங்குவதற்கு அவருடைய கம்பீரமான உபதேசங்கள் எனக்குத் தைரியம் தந்தன.

விளங்கும் தோரணையிலும், விளங்காத தோரணையிலும் ஏதேதோ வெல்லாம் சொல்லிக் கொண்டு வந்த என் கணவர் திடீரென்று என்னிடம் ‘பச்சை’யாக அன்று கேட்ட அந்தக்கேள்வியும் அதற்கு நான் தயங்கிய தயக்கமும், அடைந்த பதட்டமும்; அந்தத் தயக்கத்தையும், பதட்டத்தையும் மரிக்கப்பண்ணும் பாங்கினில் அவர் கூறிய சத்திய வார்த்தைகளும் என்றுமே என் மனத்தைவிட்டு அகலப் போவதில்லை.

‘என்னைப்பற்றிய சங்கதி இருக்கட்டும்; உன் விடயத்துக்கு வருவோம் சரோ! நீ எப்போதாவது உன் மனச்சாட்சியைநெருங்கி ஊமைப் பிறவி எடுத்துள்ள பல உண்மைகளை அதன் வாயாலேயே கேட்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றதா?’

என் கணவருடைய இந்தக் கேள்வியால் அஞ்சி நடுநடுங்கிய, எனக்குத் தைரிய மூட்டும் பாங்கினில் அவர் சொன்னார்: ‘இதில் அஞ்சுவதற்கு எதுவுமே இல்லை சரோ! இப்படி அஞ்சித்தான் மனிதர்களெல்லாம் நடிகர்களாக மாறிப்போனார்கள். உண்மையான அன்பு மடிந்து போலித்தன்மை தலைதூக்கி நிற்கின்றது. ஒருவரை ஒருவர் ஏமாற்றி வாழ்வதன் மூலம், பணத்தைப் பெருக்க முயல்கின்றனர். ஒவ்வொருவரும் சந்தர்ப்பம் இல்லாத காரணத்தால் சன்மார்க்கம் பற்றியும்; பண்பு—ஒழுக்கம் பற்றியும் ஏதேதோ பேசி மனச்சாட்சிக்கு வெட்டுவைக்கின்றனர். சமுதாயத்தைப் பற்றியுள்ள இந்தக் கொடுமைக்கு எப்போ விடுதலை கிடைக்கின்றதோ; அன்றுதான் சமுதாயத்தில் நாகரிகம் பிறக்க வழிதோன்றும். இப்பொழுது உன்னைப் பற்றியுள்ள இந்த அச்ச உணர்வுக்கு இதுவரை நீ வாழ்ந்த சமுதாய ஒழுங்குதான் காரணம், தம்மைத்தாமே ஏமாற்றும் இந்தப் போலி ஒழுங்கு நமக்கு வேண்டாம். அச்சம் சிறிதுமின்றி உன் மனதை எனக்குத் திறந்து காட்டு!’

இந்தச் சத்திய ஆணை என்னை உலுக்கி விட்டது. அந்த ஆணையில் கட்டுண்ட நான், சந்தர்ப்ப சூழ்நிலையாலோ; அன்றி வேண்டுமென்றோ என் வாழ்வில் நேர்ந்த அந்த உண்மையை-விபத்தை—அவரிடம் ஒன்று விடாமல் கூறிமுடித்தேன்.

அந்த உண்மையைக் கேட்ட அவர், அப்படியே கூனிக்குறுகி விடுவதற்குப் பதில் குன்றென உயர்ந்து நின்று வாழ்வில்தைரியத்தையும், நம்பிக்கையையும்—ஏன்; ஒழுக்கத்தையும் கற்பித்த பாங்கு இன்றும் என் நினைவிலிருந்து அகலவில்லை. அவர் சென்று விட்டகையோடு இன்று என்வாழ்வில் தோன்றியுள்ள ஒரு பெரிய நெருக்கடியைத்

(10-ம் பக்கம் பார்க்க)

## 33. ‘மேல்கழுவிய’ குமரன்!

என் கணவருடைய திரத்துக்கு ஓர் உரைக் கல்லாக அமைந்த அந்த உண்மை இதுதான்.

ஆசிரிய கலாசாலையில் என் கணவரோடும், அவருடைய நண்பர் குமரனோடும் நான் பயின்றுகொண்டிருந்த போது அவர்களுக்குள் ஒரு முறை நடைபெற்ற சம்பாசணையை இருவருமாகவே என்னிடம் வந்து ஒருநாள் கூறி மகிழ்ந்தனர். அந்தச் சம்பாசணையின் சாரம் என்னையே உயர்த்துவதாகவும் அமைந்ததால் மிகுந்த ஆர்வத்தோடு அந்தச் சம்பாசணைக்குச் செவி மடுத்தேன் நான். கலாசாலையில் பயின்ற மூன்று தலை முறைப் பெண்களிலும் என்னையே மிகுந்த அழகியெனத் தேர்ந்தெடுத்திருக்கின்றார் என் கணவர். அப்படித் தேர்ந்தெடுத்தவர் சும்மா இராமல் தமமுடைய நண்பரான குமரனிடம் என்னைக் காண்பித்து, ‘எப்படியடா நம்ம செலக்சன்?’ என்று கேட்டிருக்கின்றார். நண்பரும் அதற்கு விட்டுக் கொடுக்காமல், கணேசா! வீட்டில் உன் சொந்தத்தில் யாராவது பெண்இருந்து, அந்தப் பெண்ணின் தகப்பனாருடைய பணத்தில் நீ படித்துக் கொண்டிருப்பாயும் அந்தப் பெண்ணையே கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தம் உனக்கு இருந்தால் உடனே நீ அதைச் செய்! நான் இவளைக் கவனித்துக் கொள்ளுகின்றேன்’ என்று கூறி அன்றையச் சம்பாசணையைக் கலகலப்புக்குள்ளாக்கியிருக்கின்றார். இந்தச் சம்பாசணை மிகமிகச் சாதாரண முறையில் நடைபெற்றாலும் ஒரு கணப்பொழுது என்னைச் சற்றுத்தலைக்கனம் கொள்ளவைத்தது என்பதையும் சொல்ல வேண்டும்!

இது நடந்து பல மாதங்களின் பின் நாங்கள் கலாசாலையிலிருந்து வெளியேறி ஆசிரியப் பணியை மேற்கொண்டதன் பிற்பாடு என் கணவரும் மலையகத்துக்கு முதல் நியமனம் பெற்றுக் கொண்டு சென்றதன் பின்னர்-அடிக்கடி என் கணவரின் செய்திகளைச் சுமந்து கொண்டு அவருடைய நண்பர் குமரன் என்னை வந்து காண்பார். அப்படி வரும் குமரன் ஒரு நாள் என்னிடத்தில் ஒரு கவிதையை நீட்டி அதைப் படித்துப் பார்க்கும் படி சொன்னார்! கவிதையை வாங்கி நான் படித்துப் பார்த்தேன்.

‘ஆங்கிலத்துச் ‘ஒ’
எழுத்தை
அழகுறவே சரித்து
வைத்த
பாங்குடனே திகழுகின்ற
பழுதற்ற இனிய நுதல்!

இனிய நுதல் கீழிருக்கும்
இறகொத்த இரு புருவம்
சனியன் போல் பற்றி
சாகடிக்கும்
உயிர் பறிக்கும்!

உயிர் பறிக்கும்
இரு விழிகள்
உணர் வழிக்கும்
இரு இதழ்கள்
கருவளிக்கும் கன்னல்
மொழி
உருவளிக்கும்
உப்பு மூலை!...’

கவிதையைப் படித்து முடித்த எனக்கு குமரனின் முகத்தை நேருக்கு நேர் பார்க்கவே கூச்சமாக இருந்தது.

‘கவிதை எப்படி இருக்கின்றது?’ குமரனே பேச்சை ஆரம்பித்தார்.

‘கவிதைக்குரிய யாப்பு, அணி என்பன எனக்குச் சூனியமாதலால் இந்தக் கவிதை பற்றி நான் எதுவும் கூறுவதற்கில்லை’ என்றேன் நான்.

(14-ம் பக்கம் பார்க்க)




“இதழுடைத்துச் சிரிப்புதிர்த்தாள் முல்லையாச்சு
இடைநுடக்கி நடை பயின்றாள் கொடிகளாச்சு
கதை பெருக்கிச் சுவை வளர்த்தாள் தேனுமாச்சு
கை விரல்கள் சுண்டி நின்றாள் வெண்டியாச்சு!”

“மருத மைந்தன்”

“காலை மலரிற் கருவண்டு தேனெடுக்க
நிலக் குயிலுமென் நெஞ்சில் கனல் சொரிய
நாயகனை எண்ணி நலிகின்றேன்! இவ்வூரார்
தியில் அலரெண்ணெய் ஊற்றுகிறார்! நானவரின்
பாத மலர்சேரப் பசியால் அலைகின்றேன்!
சோதனையோ செய்கின்றார்? சொல்வார் எனக்கில்லை!
மாலை இருளில் மடிகின்றேன்! மன்னவரின்
கோலம் விழியிற் குவிகிறது! அன்புவண்டி!
உன்னைத்தான் தேடுகிறேன் ஓடிவர மாட்டாயோ
இன்னும் சுணங்கி எனைவருத்திக் கொல்லாதே!”

—சடாட்சரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோ. குணரத்தினம்,
பட்டுமுல்லை.

கே: யாழ்ப்பாண நகரில் ஆண்கள் குறைவாகவும் இளம் பெண்கள் கூடுதலாகவும் நடமாடுகிறார்களே என்ன காரணம்?

ப: அப்படியா? ஆண்கள் இனி 'டபிள்டெக்கரில்' பிரயாணம் செய்யலாமே! (யாழ்ப்பாணத்துக்கு டபிள் டெக்கர் பஸ் வந்திருக்கிறதல்லவா?)

ஃ

நவயுவன்,
புதுவட்டகொடை.

கே: திருமணம் மோட்சத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்கிறார்களே, அப்படியென்றால் விவாகரத்து?......

ப: நீதிமன்றத்தில்.

கே: தோல்வி பல கண்டும் என் நண்பர் ஒருவர் பெண்களையே வளைய வளைய வருகிறாரே அவரின் எதிர்காலம்! எப்படி இருக்கும்?

ப: இறுதி வெற்றி அவருக்கே! தோல்வி வெற்றிக்கு வழிவகுக்கும். தோல்வி கண்டு அஞ்சாது மீண்டும் மீண்டும் முயன்றால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்!

ஃ

கே. ஏ. ஊழியன்,
திருகோணமலை.

கே: தேசீய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் திருமலைத் துறைமுகத் தொழிலாளரை ஒரு சில கப்பல் கம்பனி முதலாளிகள் வேலை நீக்கம் செய்யவும் எத்தனிக்கிறார்களே?

ப: அரசாங்கம் தனியார் துறைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதால் அவர்களுக்கு இத்துணிவு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் நீங்கள் உங்களின் தொழிற் சங்கம் மூலம் நடவடிக்கை எடுத்தால் அரசாங்கம் உங்கள் பக்கமே இருக்கும்.

ஃ

வே. வை. தெய்வநாயகம்,
அக்கரைப்பற்று-7.

கே: அடுத்த சுவீப்பில் பென்ஸ் கார் உங்களுக்குத் தானென்று பலர் கூறுகின்றனரே?

ப: சுவீப்டிக்கட் வாங்காதவர்களுக்கு பென்ஸ்கார் விழுவதானால் நிச்சயம் எனக்கும் விழும்.

ஃ

அ. தவராசா,
ஊர்காவற்துறை.

கே! சமஷ்டி ஆட்சியால் ஏற்படும் நன்மையை அறியாத காங்கிரஸ் காரர்களுக்கு என்ன விதத்தில் புத்தி புகட்டலாம்?

ப: சமஷ்டி ஆட்சியை நிறுவுவதின் மூலம்.

ஃ

பிறேம்,
பரந்தன்-3.

கே: நீர் ஒரு மடையன் என்று என் நண்பன் சொல்லிக் கொண்டு வருகிறான். நான் என்னத்தை சொல்லி அழ?

ப: பாம்பின் காலை பாம்பே அறியும். அம்மாதிரி மடையனே மடையனை அறிவான் என்று சொல்லி அழுங்கள்.

ஃ

ஏ. எஸ். கணபதிப்பிள்ளை,
மூதூர்.

கே: தமிழரசு எம். பிக்கள் அனைவரும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்துடன் கூட்டாக, காங்கிரஸ் எம். பிக்களாக மாறி நின்றால் ஒரே நாளில் தமிழினத்தின் பிரச்சினை தீர்ந்து விடுமல்லவா?

ப: நிச்சயம் தீராது. எத்தனை ஆண்டுகளானாலும் தீராது. தமிழ் எம். பிகள் அவருடன் சேர்ந்து நின்ற போதெல்லாம் என்ன செய்தார் என்பதைச் சற்று நினைத்துப் பார்த்தால் நான் கூறுவதின் உண்மைபுலப்படும்.

ஃ

சி. பொ. ஈழத்துமணி,
யாழ்ப்பாணம்.

கே: யாழ்ப்பாணம் புதிய செயலகம் திறப்பு விழாவில் த. பெ. தலைவர் தமிழில் பேசாமல் ஆங்கிலத்தில் மட்டும் பேசிவிட்டு அமர்ந்து விட்டாரே, இது எதைக் காட்டுகிறது குயுக்தியாரே?

ப: அவரும் ஆங்கிலம் படித்திருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

ஃ

த. புஸ்பராசா,
கைதடிச்சந்தி.

கே: திரு. பொன்னம்பலம் ஐ. நா. வுக்குச் சென்றுள்ளாரே இதனால் தமிழ் மக்களுக்கு நன்மையாகக் கூடுமா?

ப: ஐ. நா. வில் தமிழர் பிரச்சினைப் பற்றி பேசப் போவதாக அவர் ஒரு கூட்டத்தில் கூறினாரென ஒரு தமிழ்த் தினசரி செய்தி பிரசுரித்தது. தான் அப்படிப் பேசவில்லை. என்று அவர் அப்பத்திரிகைக்கு மறுப்புக் கடிதம் எழுதினாராம். உங்களின் கேள்விக்கு விடை இதில் இருக்கிறது.

ஃ

குமாரச்செல்வன்,
ஏழாலை மேற்கு.

கே: பத்திரிகைச் சுதந்திரத்தைப் பற்றி பந்தி பந்தியாக எழுதிக்குவித்த பத்திரிகைகள், பல செய்திகளைப் பூசிமெழுகுகின்றன. தேசியப் பத்திரிகையின் லட்சணம் இதுதானா?

ப: பூசிமெழுகுவதற்கும் சனநாயகத்தில் பூரண சுதந்திரம் உண்டென்பதை மறந்துவிடாதீர்.

ஃ

ஒற்றுமைப்பிரியன்,
ஏழாலை மேற்கு.

கே: வரவு செலவுத்திட்ட விவாதத்தில் அரசாங்கத் திற்கு சாதகமாக பேசிய [illegible] அரசாங்கத்தை [illegible] எதிர்த்து வாக்களித்தார்?

ப: சில்வாவை சொய்சா பின்பற்றினர்—சொய்சாவைச் சாலி பின்பற்றினர்—சாலியை மஜீத் பின்பற்றுவார் இப்பொழுது தான் ஆதரித்துப் பேசத் தொடங்கியுள்ளார். வெகுவிரைவில் கட்சி மாறுவதை எதிர் பார்க்கலாம்.

ஃ

ரமணி, கொழும்பு-7

கே: எனது காதலர் சிரிக்க மறுக்கிறாரே என்ன செய்யலாம்.

ப: பல் கட்டிக்கொள்ளும் படி அவரை வற்புறுத்துங்கள் பல் கட்டியதும் தாராளமாகச் சிரிக்கத் தொடங்கி விடுவார்.

ஃ

எம். எஸ். அப்துல் ரகுமான்,
வேருவளை

கே: இப்போதெல்லாம் பத்திரிகைகளில் வரும் செய்திகளை செய்திகளென்று கூற முடியுமா?

ப: செய்திகளும் உண்டு—செய்திகளில்லாதவைகளும் உண்டு. நாய் மனிதனைக் கடித்தால் அது செய்தியல்ல. இதனைச் செய்தியாய்ப் பிரசுரிப்பதும் தவறு. ஆனால் மனிதன் நாயைக் கடித்துவிட்டால் அது மதிப்புள்ள செய்தியாகும்.

ஃ

டி. குருசாமி, பதுளை

கே: மேல் நாட்டு நாகரிகம் சிறந்ததா? கீழ் நாட்டு நாகரிகம் சிறந்ததா?

ப: இரண்டும் சிறந்தவைதான். முன்னையது உல்லாசத்துக்குத் தேவை. பின்னையது உற்பத்திக்குத் தேவை.

ஃ

ஆர். கருப்பையா, கண்டி

கே: மாத்தளையில் நடந்த இ. தொ. காங்கிரஸ் மாநாட்டில் திரு. தொண்டமான் தனது தலைமையுரையில், 'சிறிமா-சாத்திரி ஒப்பந்தம்' உண்மை நிலைக்கு முரணானதும் நடைமுறைக்கு ஒவ்வாததும் நீதிக்குப் புறம்பானதுமான ஒப்பந்தம் என்று] கூறியிருக்கிறாரே!

ப: ஆம்—ஆனால் நூரளையில் நடைபெற்ற ஒரு வரவேற்பில் சிறிமா-சாத்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்த இ. தொ. கா. மனப்பூர்வமான ஒத்துழைப்பு அளிக்குமென்று இதே திரு. தொண்டமான் திருவாய்மலர்ந்தருளியதாகப் பத்திரிகைகள் முறையிடுகின்றனவே!

ஃ

ஆர். வி. குமாரசாமி,
கொழும்பு-13

கே: நிதி மந்திரியின் பட்ஜெட் பிரசங்கத்தில் 'சோஷலிஸம்' என்ற சொல் இடம் பெறவில்லையென எதிர்க் கட்சியினர் அங்கலாய்க்கிறார்களே!

ப: அச்சொல் இடம் பெறாததற்கு இரு காரணங்கள் உண்டு. (1) இது ஒரு சோஷலிஸ்ட் பட்ஜெட்டாக இல்லாதிருப்பது. (2) 'சோஷலிஸம்' என்ற சொல்லையே மக்கள் இன்று வெறுத்து ஒதுக்குவது.

ஃ

இதயசூரியன்', இறக்வான

கே: ஒரு தமிழ் வார ஏடு நடத்தும் 'மலைநாட்டு இலட்சுமி' போட்டியைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: இப்பத்திரிகை ஒரு சிங்கள நிறுவனத்தைச் சேர்ந்தது. அதன் சிங்களப் பத்திரிகை தமிழர் மீது அடிக்கடி வசைபாடுகிறது. அந்த நிறுவனத்தைச் சேர்ந்த சிங்கள மாலைத் தினசரி அழகு ராணிப் போட்டிகளையும், அரை நிர்வாண நீச்சல் அழகிப் போட்டிகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறது. 'காமக் களியாட்ட ஏடு' எனக் கூறி அநேக சிங்களவர்கள் அதனைக் கையாலும் தொடுவதில்லை. தமிழ்ப் பெண்களிடையே அழகு ராணிப் போட்டிகளை நடத்துவது தமிழ்ப் பண்பாட்டுக்கு உகந்ததன்று. கீழ்த்தர உணர்ச்சிகளை கிளறிவிட்டு மலைநாட்டில் விற்பனையைக் கூட்டிக்கொள்ள இப்பத்திரிகை முயற்சி செய்கிறது போலும்!


ஃ

எம். தனலெட்சுமி,
களுத்துறை

கே: காதலுக்கும் கலியாணத்துக்குமுள்ள சம்பந்தமென்ன?

ப: சிறுகதைக்கும் தொடர்கதைக்குமுள்ள சம்பந்தம்தான்.

---



கஞ்சா-காப்பு

ஆம்புறுப்பிட்டியா என்னும் இடத்திலுள்ள காடுகளில் 100 ஏக்கர் காணியில் கஞ்சா பயிரிடப்படுகிறது. இக்காணியை ஆயுதம் தரித்த காவலாளிகள் காவல் புரிகின்றனர்.

—செய்தி

ஆயுதப் பாதுகாப்பு எதற்காக வழங்கப்பட வேண்டும் என்பதனை இச் செய்தி எடுத்துக்காட்டுகிறது. அகில உலகத்திலிருந்தும் இந்த விசித்திரத்தைப் பார்வையிட உல்லாச யாத்திரீகர்களைத் தருவித்தால், நிச்சயம் அந்நியச் செலாவணி அதிகரிக்கும்,என்று ஒரு பிரமுகர் நிதி அமைச்சருக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்.

அளவிலா ஆசை

தொடர்ந்து 8 நாட்கள் விண்வெளியில் சஞ்சரித்து, உலகினை 121 முறை வலம்வந்த அமெரிக்க விண்வெளி வீரர்களான கூப்பரும், கோனாரும் உலகெங்கும் சுற்றிவர [illegible]கின்றனர்.

—செய்தி

'ஆசைக்கோர் அளவில்லை' என்று அக்காலத்தில் பாடிவைத்த நம்மவர்கள் எவ்வளவு தீர்க்கதரிசிகள், என்று ஒரு வைதீகர் பிரலாபிக்கிறார். பூமியை ஆகாயத்திலிருந்தே வலம் வந்தது போதாதா? மேலும் பூப்பிரதட்சணம் பண்ணுவதற்கு இவர்களுக்கு ஆசை வந்துவிட்டதே என்று அவர்மேலும் அங்கலாய்க்கிறார்.

பயணம்
நெருங்குகிறது

சந்திர மண்டலத்துக்குச் செல்ல பாதை திறந்தாகிவிட்டது.

—ஒரு மே. ஜர்மன்
விஞ்ஞானி

பயணச் சீட்டுகள் அச்சில் உள்ளன போலும்.

செல்வர் சொல்லு

சொல்லின் செல்வர் பொன்னம்பலம் அமெரிக்காவுக்குப் புறப்படுகிறார்.

—ஒரு தினசரி

'சொல்லைச் சொல்லச் சொல்லுவாரா, சென்று செல்லச் சொல்லைச் சொல்லுவாரா' என்று விடாக்கண்டர் சொல்லம்பு செலுத்துகிறார்.

காரணம்

திருமதி சிறிமாவோ பிரதமராகவிருந்தபோது அலரி மாளிகையில் கருவாடு மாநாடு நடைபெற்றது.

—எஸ். டி. சேனநாயக்கா

கருவாட்டுப் பிரச்சினை இந்நாட்டையே அலற வைத்ததற்கு இதுவும் ஒரு காரணமாக விருக்கலாம்.

முன்னெச்சரிக்கை

குதிரைப் பந்தய மைதானத்தில் பல்கலைக் கழகக் கலைப்பகுதி வகுப்புகள் நடாத்தப்படும்.

மாணவ மாணவிகள் ஓட்டப் பந்தயங்கள் நடத்தாமல் இருக்க முன்னதாகவே பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுமாம்.

---

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

---



# ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்.

ரிஷிபடம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச் சிக்கலுக்கும், மூல வியாதிக்கும், மூல முளைகள் இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள், மூலம், பௌத்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சு வலி, புற்றுகள், கண் கை கால் திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

குறிப்பு:
அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சினப்பள்ளி குரு மருந்துகளும் கேசவர்த்தனி எண்ணையும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைககளும் கிடைக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனாம்

15 நாள் டின் ரூபா 3-50
30 நாள் டின் ரூபா 6-50

தபால் செலவு -/95

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாசிக் கட்சியின் வழியில் பொன்னம்பலம் கட்சியினர்

பச்சைப் பொய், பயங்கரப் பித்தலாட்டம், வார்த்தெடுத்த வஞ்சம், வடித்தெடுத்த ஏமாற்று இத்தனைக்கும் பெயர் பெற்று விளங்குகின்றது பொன்னம்பலம் கட்சி. எத்தனை பொய்களைக் கூறி, ஏமாற்று நாடகங்களை ஆடி தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைச் சிதறடிக்கலாம் என்பதே இன்று அவர்களின் தலையாய இலட்சியமாக இருக்கிறது.

### சர்ச்சையை வளர்ப்பவர்கள்

மேடைகளில் நின்று ஐக்கியம் ஒற்றுமை என்று ஓங்கிக் குரலெழுப்பி விட்டு; அதே வேகத்தில் ஒற்றுமைக்கு விரோதமான நடவடிக்கைகளில் இறங்குபவர்களும் பொன்னம்பலம் கட்சியினரே. அரசியற் சர்ச்சையை வளர்க்க வேண்டாம் என்று ஒருபுறத்தில் கூறிகொண்டு மறுபுறத்தில் அரசியற் சர்ச்சையை வளர்ப்பவர்களும் அவர்கள் என்பதைப் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறோம். திரு. பொன்னம்பலமே தமிழரசுக் கட்சியை பலமாகத் தாக்குகிறார் என்பதற்கு திரு. பீலிக்ஸ் டயஸ் கடந்த வாரம் பாராளுமன்றத்திற் கூறியது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். 'திரு. செல்வநாயகத்தையும் த. அ. கட்சியையும் தாக்குவது போல் அமெரிக்காவை ஐ. நா. சபையில் திரு. பொன்னம்பலம் தாக்குவாரா' என்று திரு. பீலிக்ஸ் டயஸ் பிரதமரிடம் கேட்டிருக்கிறார்.

ஐக்கிய முன்னணி பற்றி எந்த வேகத்தில் உரத்துக் கூறினார்களோ பொன்னம்பலம் கட்சியினர்—அதே வேகத்தில் கனவான் உடன்படிக்கையையும் முறித்து விட்டு யாழ். நகர முதல்வர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தார்கள். அத்துடன் நின்றார்களா என்றால் இல்லவே இல்லை.

### ஒற்றுமையைக் கெடுப்பவர்கள்

அரசியல் வேறுபாட்டிற்கு அப்பால் ஒன்றுபட்டு நிற்கின்ற தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் ஒற்றுமைக்கும் வேட்டு வைக்க முயன்றிருக்கிறார்கள். தேசிய தொழிற் சங்கங்கள் வகுப்புவாத ரீதியிற் செயற்படத் தொடங்கியதும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் கட்சி வேறுபாடுகள் அனைத்தையும் தூர வீசிவிட்டு ஒன்றுபட்டு இயக்கம் அமைத்தார்கள். மொழி வழி பிரிந்து தனி இயக்கம் கண்ட தமிழ் அரசாங்க ஊழியர்கள் கடந்த அரசாங்கத்தின் இடர்பாடுகளை எதிர்த்து நடத்திய இயக்கங்களும் போராட்டங்களும் பலப்பல.

மொழிவழித் தொழிற் சங்கங்கள் போராட்டம் நடாத்துங்கால் உதவியவர்கள் யார்? சம்பள உயர்வையும், பதவி உயர்வையும் இழந்து ஈற்றில் பதவியிழப்பையும் நெருங்குங்கால் உதவியவர்கள் யார்? கோடீசுவரன் வழக்கு நடைபெறும் நாளில், இன்று புதிய தொழிற் சங்கம் காண விழையும் பெரிய வழக்கறிஞர்கள் எங்கே போனார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறோம்?

### அன்று எங்கே போனார்கள்?

இத்தனை இன்னல்களையும் அனுபவித்து விட்டு ஓரளவு புதிய ஒரு சூழ் நிலைக்கு அரசாங்க ஊழியர்கள் தள்ளப்படும் நேரத்தில் முந்திக் கொண்டு வருகிறார்கள் பொன்னம்பலம் கட்சியினர். தமிழ் அரசாங்க ஊழியர்களின் ஒற்றுமைக்கு வேட்டு வைத்து புதிய தொழிற் சங்கம் காண விழையும் பொன்னம்பலம் கட்சியினரதும் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலத்தினதும் நிலையை எண்ணிப் பார்க்கையில் 'வாழ வழியின்றி வாடிய தெருப் போக்கிக்கு சுவீப்பில் பரிசு கிடைத்ததும் மாமா முறை கொண்டாடியவரின்' கதைதான் நினைவுக்கு வருகிறது.

கடந்த அரசாங்க காலத்தில் தமிழ் அரசு ஊழியர்கள் இன்னல்களை அனுபவிக்கும் பொழுது எட்டியும் பாராது குட்டிச் சுவருக்குள் மறைந்திருந்தது திரு. பொன்னம்பலம் இன்று தானும் தொழிற் சங்கம் அமைக்கப் போகிறாராம்.

### அரச ஊழியர் பொறுப்பு

எத்தகைய வருமானத்தையும் எதிர்பாராது-'இது எனது கடமை' என்ற எண்ணத்துடன் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிறந்த வழக்கறிஞர்கள் கோடீசுவரன் வழக்கில் உதவினார்கள். இன்றைய அமைச்சர் திரு. திருச்செல்வம் பெரும் பகுதியான நேரத்தை கோடீசுவரன் வழக்குக்காக செலவழித்துள்ளார். இவர்கள் எல்லாம் தமிழ் அரசாங்க ஊழியர்கள் மீது உரிமை கொண்டாட முற்படவில்லை. தமிழரசுக் கட்சி தனது ஆதிக்கத்தின் கீழ் எழுதுவினைஞர் சங்கத்தைக் கொண்டுவர முயற்சிக்கவில்லை.

**பூங்குன்றன்**

ஆனால், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்திற்கு மட்டும் ஒரு தனித் தொழிற் சங்கம் வேண்டுமாம். தாமும் அரசாங்க ஊழியர் மீது உரிமை கொண்டாடப் போகிறாராம். இதை எந்த அரசாங்க ஊழியனும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. நிச்சயமாக தமிழ் அரசாங்க ஊழியர்கள் திரு. பொன்னம்பலத்திற்கு நல்ல பாடம் படிப்பிப்பார்கள்.

### சிங்களத்தை யார் படிப்பது?

திரு. பொன்னம்பலம் எதற்காக இந்த முயற்சியில் ஈடுபட்டார் என்பதும் அவரது பேச்சிலிருந்து துலாம்பரமாகத் தெரிகிறது. தமிழ் அரசாங்க ஊழியர்கள் மாவட்ட சபைத் திட்டத்தை எதிர்க்க வேண்டுமாம். ஒரு அரசாங்கக்கட்சி முன்வரிசைப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களில் ஒன்றான மாவட்ட சபை அமைப்பை எதிர்க்க வேண்டுமென்று அரசாங்க ஊழியர்களுக்கு புத்தி கூறியுள்ளார். இதுதான் திரு. பொன்னம்பலம் கூறும் சனநாயகமா? இதுதான் திரு. பொன்னம்பலம் தேசிய அரசாங்கத்திற்குச்செய்யும் நன்மையா? இதுதான் திரு. பொன்னம்பலம் தமிழ் பேசும் மக்களுக்குச் செய்யும் நன்மையா? இதுதான் திரு. பொன்னம்பலம் அரசாங்க ஊழியர்களுக்குக் காட்டும் வழியா?

புதிய தொழிற் சங்கம் காண நடைபெற்ற கூட்டத்தில் மேலும் திரு. பொன்னம்பலம் பேசுகையில் தமிழ் அரசாங்க ஊழியர்களைச் சிங்களம் படிக்கும் படியும் கூறினாராம். தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தைப் படிப்பதற்கு சம்மதித்திருந்தால் தேசிய தொழிற் சங்கத்திலிருந்து விலகியிருக்கத் தேவையில்லை—மொழிவழித் தொழிற் சங்கத்தை உருவாக்கியிருக்கத் தேவையில்லை—சம்பள உயர்வையும், பதவி உயர்வையும் இழந்திருக்கத் தேவையில்லை —வேலையிழப்பைப் பற்றி [illegible] கோடீசுவரன் வழக்கையும் நடாத்தியிருக்கத் தேவையில்லை. இந்தச் சிறிய உண்மைகூட திரு. பொன்னம்பலத்திற்குத் தெரியவில்லையா?

### கோயபல்சு வழி

சிங்களத்தைப் படியுங்கள் என்றும் கூறிவிட்டு, தமிழ் அரசாங்க ஊழியர்களின் உரிமைகளைப் பெறுவதற்காகவும் உழைப்பேன் என்றும் திரு. பொன்னம்பலம் கூறியிருக்கிறார். சிங்களத்தை தமிழ் ஊழியர்கள் கற்கச் சம்மதித்தால் அதன் பின்னர் அவர்களின் உரிமையைக் காப்பாற்ற திரு. பொன்னம்பலம் எதற்கு? இதைத்தான் கூறுவது 'கோயபல்சு வழி' என்று.

பொதுத் தேர்தல் முடிந்து தேசிய அரசாங்கம் தோன்றிய பின்னர் இவர்களின் கோயபல்சுவழிப் பிரசாரம் தீவிரமடைந்ததேயன்றிக் குறைந்தது அல்ல. உதாரணத்திற்கு அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தையே எடுத்துக் காட்டலாம்.

யாழ்ப்பாணத்திலும் ஒரு பல்கலைக் கழகக்கிளை நிறுவப்படும் என்று பலமாகப் பேச்சடிபட்ட நேரத்தில் கோண்டாவிலில் ஒரு கூட்டத்தில் பேச திரு. பொன்னம்பலத்திற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அக் கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் '......எனது இக் கோரிக்கையை தேசிய அரசாங்கம் ஏற்க மறுக்குமேயானால் நிச்சயமாக நான் அதனை எதிர்க்கத் தயங்க மாட்டேன்' என்று கூறினார். இன்று யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகக்கிளை இல்லையென்று முடிவாகி விட்டது. ஆனால் திரு. பொன்னம்பலம் தேசிய அரசாங்கத்தை எதிர்க்கவில்லை.

### மக்கள் மந்தைக் கூட்டமாம்

இட்லருடைய நாசிக்கட்சியின் பாணியை முழுக்க முழுக்க பொன்னம்பலம் கட்சியினரும் பின் பற்றுகிறார்கள் என்பதை அரசியல் அறிந்த எவரும் மறுக்க மாட்டார்கள்.

'மக்களென்ன மக்கள்—அவர்கள் வெறும் மந்தைக் கூட்டங்கள்' என்று எண்ணி நடந்து மட்டுமல்ல எழுதியும் வைத்திருக்கிறான் இட்லர். திரு. பொன்னம்பலமும் அவர் கட்சியினரும் மக்களை எப்பொழுதும் மந்தைக் கூட்டமாக மதித்து தாங்கள் அந்த மந்தை கூட்டத்தின் மேய்ப்பர்கள் என்றே எண்ணுகிறார்கள். இதற்கு ஒரு உதாரணம்; திரு. பொன்னம்பலம் எப்பொழுதும் 'எனது தமிழ்ச் சாதி...' என்று கூறுவது.

### ஐ. நா. வில் தமிழர் பிரச்சினை

கொள்கைகளைக் கொள்கையளவில் எதிர்க்காது பெரிய பொய்களை தயங்காது மேடைகளில்கூறுவதும் நாசிக் கட்சியின் பணியாகும். அண்மையும் யாழ். நகரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் 'ஐ. நா. சபையில் தமிழர் பிரச்சினை பற்றிக் குரல் எழுப்புவேன்' என்று திரு. பொன்னம்பலம் பேசியது நல்ல உதாரணமாகும். [ஒரு தினசரி மட்டுமே இச் செய்தியைப் பிரசுரித்தது. இச் செய்தியை மறுத்து திரு. பொன்னம்பலம் அனுப்பிய விளக்கத்தை அப் பத்திரிகை ஏற்க மறுத்ததுடன், திரு. பொன்னம்பலம் மேற்குறிப்பிட்டவாறு பேசியதாகவும் உறுதிப்படுத்தியிருப்பதாக அறியப்படுகிறது.]

ஆரவாரமான முறையிலும், அலங்காரமான வகையிலும் கூட்டங்களைக் கூட்டும் நாசிக் கட்சியின் பாணியை பொன்னம்பலம் கட்சியினர் சிறிதும் மாற்றமின்றிப் பின்பற்றி வருவது மக்கள் அறிந்ததே.

### நாசிக் கட்சியும் பொ. கட்சியும்

இட்லரின் 'மெயின் கம்ப்' என்ற நூலில் உள்ள சில தத்துவங்கள் பொன்னம்பலம் கட்சியினருக்கும் அப்படியே சிறிதும் மாற்றமின்றி பொருந்துகிறது. அவையாவன:

1. "தலைவன் என்ன சொல்கிறானோ அதுவே சட்டம். அவனைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்ற வேண்டியதே தொண்டர்களின் கடமை.'

2. 'எனக்குச் சமமாகப் போட்டியிடக்கூடிய எவனையும் நான் விட்டு வைக்க மாட்டேன்.'

3. 'மக்களை அடிமையாக்கும் திறமை எவனுக்கிருக்கிறதோ, அவனே தலைவனாகத் தகுதியுடையவன்.'

4. 'பேசுவதில் உள்ள கருத்தல்ல முக்கியம்; எந்தக் கருத்தைச் சொன்னால் மக்கள் சேர்வார்கள் என்பதே முக்கியம்.'

5. 'மக்கள் வெறும் மந்தைக் கூட்டம்.'

நாசிக் கட்சியின் வழியைப் பின்பற்றும் பொன்னம்பலம் கட்சியினரால் தம்மவர்க்கு மட்டுமல்ல நாட்டுக்கே நாசம்தான் இதை ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## அறிஞர் அண்ணா விழா

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணாவின் 57வது பிறந்த நாள் விழாவைச் சிறப்பான முறையில் தலைநகரில் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு இவ்விழாவைக் கொண்டாடிய திருவாளர்கள் வேலணை நா. வீரசிங்கம், ஆ. நடராசா, அ. பொ. செல்லையா, ஏ. எஸ். மணவைத்தம்பி, கலையன்பன், கே. எஸ். இராசன், கம்பளை தாசன், எஸ். மயில்வாகனம், மலைத்தம்பி ஆகியோரே இம்முறையும் விழாவுக்கான ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார்கள்.

இவ்விழாவை யொட்டி 'அண்ணாமலர்' என்ற பெயரில் சிறப்பிதழ் ஒன்றையும் விழாக் குழு வெளியிட முடிவு செய்துள்ளது. இம்மலருக்கு கட்டுரை எழுத விரும்புகிறவர்களை 176, யம்பட்டாத் தெரு, கொழும்பு-13 முகவரியுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கேட்கப்படுகின்றனர்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா SEA STREET, COLOMBO-11

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கட்சி மீது சிங்களே பாய்ச்சல்

## சிங்கள பௌத்தர்களை நசுக்குவது நோக்கமாம்

"வகுப்புவாதத்தைத் தூண்டிவிடும் செயல்களை நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு தமிழரசுக் கட்சி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. அதாவது, சிங்கள இனம், சிங்கள நாடு, சிங்கள மொழி ஆகியவை பற்றி பேசுவதைச் சட்டத்தால் தடுத்து, இந்நாட்டை தங்களுக்குத் தேவையானபடி நாம் தமிழர் இயக்கம் விழுங்கிக்கொள்வதற்கான ஏற்பாடு செய்வதே தமிழரசாரின் முயற்சியாகும்- சிங்கள பௌத்தர்களுக்கு வாய்ப் பூட்டு போட்டு, அவர்களின் கை கால்களையும் கட்டிப் போடுவதே தமிழரசுக் கட்சியின் கருத்து என்பது அவர்கள் பேசும் வகுப்பு வாதம் பற்றிய பேச்சிலிருந்து தெரிகிறது." இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பத்திரிகையான "சிங்களே"29-8-65-ந் திகதி இதழில் எழுதியுள்ளது.

'இந்தியர்கள் இலங்கையில் வந்து குவியும் போதும்,நாம் தமிழர் இயக்கம் சிங்கள மக்களை பயமுறுத்தும் போதும் சிங்கள மக்கள் தலைகுனிந்து சும்மாயிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கு எதிராகப் பேசுகிறவர்கள்' 'வகுப்புவாதிகள்' எனப்பட்டம் கட்டப்படுவார்கள். ஆட்சிபீடமேறிய சுயநலமிகள் இனத்தையும் சமயத்தையும் பலியிட்டு, பணப்பையை மட்டும் பாதுகாத்துக் கொள்ள எண்ணுகின்ற என்று 'சிங்களே' மேலும் எழுதுகிறது.

'ஜனதின' 1-9-65ந் திகதி எழுதியுள்ள தலையங்கத்தில் 'சிங்களத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டு தமிழ் மொழிக்கு நியாயமான அந்தஸ்து வழங்குவதை நாங்கள்' ஒரே குரலில் ஏற்றுக்கொள்கிறோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தலையங்கம் கூறுவதாவது:—

## சிங்கள இதழ்களில்...

னர். ஆயினும் உயிர்த்தியாகங்கள் செய்து 2500 ஆண்டுகளாகப் பாதுகாத்து வந்த இனத்தையும், மொழியையும்,பௌத்த சமயத்தையும் நாசமாக்க இடமளித்து சும்மா பார்த்துக் கொண்டிருக்க சிங்கள பௌத்தர்களால் முடியாது. சிங்கள பௌத்தர்களை மிரட்டல்களாலும் சட்டங்களாலும் பயமுறுத்த இடம் கிடைக்காது என்பதை அனைவருக்கும் நினைவூட்டுகிறோம்'

'வகுப்புவாதத்தைத்தூண்டும் பத்திரிகைகள், பிரசுரங்கள், கட்டுரைகள் முதலியவற்றைத் தடை செய்வதற்காகவும் வகுப்பு வாத நடவடிக்கைகளுக்குத் தண்டனை அளிப்பதற்காகவும் சட்டம் இயற்றப் போவதாக ஒரு செய்தி கூறுகிறது.

வகுப்புவாதத்தை நாம் கடுமையாகக் கண்டிக்கிறோம். அதே சமயத்தில் அந்தச்சட்டத்துள் மறைந்து ஒவ்வொரு இனத்தின் நியாயமான உரிமைகளை இதர இனங்களுக்குக் காட்டிக் கொடுப்பதைக் கண்டிப்பதில் முன்னணி தாங்குவோம்.

பௌத்த சமயத்துக்கு முதலிடம் அளித்து ஏனைய மத அனுஷ்டானங்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்குவதற்காக சகலமுயற்சிகளையும் செய்வோம்.

டட்லியின் அரசாங்கம் தயாரிப்பதாகக் கூறப்படும் இந்த வகுப்புவாத—எதிர்ப்புச் சட்டததின் கீழ் தமிழரசுக் கட்சி, தொண்டமானின் காங்கிரஸ், கத்தோலிக்க நடவடிக்கை ஸ்தாபனம், எக்கினுஸ் தொழில் தேடும் அலுவலகம் ஆகியவைகளும் தடைசெய்யப்படுமா என்று கேட்கின்றோம்.

நாம் என்றும் கூறுவதைப் போல வகுப்பு வாதத்தைத் தூண்டி விடுபவர்கள் டட்லியின் கூட்டணியே. பெரும்பான்மையோரின் நியாயமான உரிமைகள் இரகசியமாக சிறு பான்மை யோரிடையே பங்கிடப்படுகின்றன. இது விடயம் ... லத்துக்கு வந்தால் ... மொழிமோதுதல் ஏற்படுவதுதர்க்கனுகூல முடிவாகும்.

... எழும் உரிமைக்கும் தடை ஏற்பட இடமுண்டு.

### புதிய சட்டம்

'தமிழரசு- கத்தோலிக்க வேண்டுகோளின் மீது பெரும்பான்மை இனத்துக்கு வாய்ப்பூட்டு' என்ற தலைப்பில் கீழ்க்காணும் செய்தியை ஜனதின (1-9-65)பிரசுரித்துள்ளது.

'யு. என். பி.—பெடரல் கூட்டரசாங்கத்தைக் கண்டிக்கும் பத்திரிகைகளுக்கு வகுப்புவாதப் போர்வையில் வாய்ப்பூட்டு போட இப்பொழுது ஏற்பாடு செய்யப்படுவதாக அறியப்படுகிறது. முதலாளிப் பத்திரிகைகளின் முதலாளிகளின் தூண்டுதலின் மீது இயற்றுவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ள சட்டத்தின் கீழ் 'ஜனதின' உட்பட ஏனைய முற்போக்குப் பத்திரிகைகளையும், அரசாங்கத்தைக் கண்டிக்கும் பிரசுரங்கள் புத்தகங்கள் முதலியவற்றைத் தயாரிப்பவர்களையும் அடக்குவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.'

# சைவம் தழைக்க சேவை செய்த சேர். கந்தையா வைத்தியநாதன்

திருக்கேதீச்சரம் என்றதும் எம்மனக் கண்முன்னே கேதீச்சரப் பெருமானுக்கு அடுத்து தோன்றும் உருவம் இன்று இல்லை. ஆம்! சேர் கந்தையா வைத்தியநாதன் தனது பொய்யுடம்பைநீத்துகேதீச்சர நாதனிடம் தன் ஆன்மாவை அர்ப்பணித்து விட்டார்.

அவரது ஆன்மா சாந்தியடைய செய்யவேண்டிய பெருஞ்சேவை, அவர் அல்லும்பகலும் எதற்காக அயராது பாடுபட்டாரோ அதே திருப்பணியை சைவமக்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து செய்து முடிப்பதே.

மாதோட்ட நந்நகரில், பாலாவியின் கரை மேல் கேதிச்சர நாதன் இருக்கும் வரை சைவமக்கள் உள்ளங்களில் எல்லாம் வைத்தியநாதன் வாழ்ந்து கொண்டே

### தி. சி. கணேசலிங்கம்

இருப்பார். அவர் எந்த இடத்தை நல்ல முறையில் நிர்மாணிக்க உத்தேசித்து, அயராது உழைத்தாரோ அதே ஆண்டவன் முன்னிலையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது மிகவும் வியக்கத்தக்கது.

ஈழத்தில், சமயகுரவர்களால் பாடல் பெற்ற தலங்கள் இரண்டு உள. ஒன்று திருக்கேதீஸ்வரம். மற்றயது திருக்கோணேஸ்வரம். பழமை வாய்ந்த இவ்விரு கோவில்களும் டச்சுக்காரர்களால் அழிக்கப்பட்டன. புனருத்தாரணம் செய்ய வென அவதரித்தனர் இருவர். கோணேசப் பெருமான் உறையும் கோயிலை புனருத்தாரணம் செய்யத் தோன்றியவர் திருமலை தந்த திரு. இராசவரோதயர். கேதீசநாதருடைய கோயிலை புனர் நிர்மாணிக்கத் தோன்றியவர் சேர் வைத்திய நாதன்.

#### மணிவாசகர் வழியில்.........

இருவரும் மந்திரி மாணிக்கவாசகரின் அடிச்சுவட்டைப் பின் பற்றி அரசாங்க ஊழியராயும், பின் அரசியல் வாதிகளாயும் இருந்து கொண்டு சமயத் தொண்டு செய்ய முயன்றனர். திருக்கோணேஸ்வர ஆலய கும்பாபிசேகம் நடைபெற்று முடிந்து சில மாதங்களுடன் தன் கடமை முடிந்து விட்டதாக எண்ணி,இறைவனடி சேர்ந்து விட்டார் இராசவரோதயர்.

சேர் கந்தையா வைத்தியநாதன் தான் போட்டு தொடங்கிய திட்டத்தை கூடிய கெதியில் முடிக்க அயராது பாடுபட்டுக் கொண்டிருந்தார். 'நீர் எனக்கு செய்த சேவை போதும். மற்றவர்களும் தம்மாலானதை செய்ய வழிவிட்டு வாரும் என்னடிக்கு' என்று,எந்த நாளில் கோணேஸ்வர நாதன் வரோதயரை அழைத்தானோ, அதே நாளில் திருக்கேதீச்சரத்தானும் வைத்திய நாதனை அழைத்துக் கொண்டான்.

#### தமிழுரிமை காக்க......

1956-ம் ஆண்டு ஈழத்து அரசியல் வானில் கொந்தளிப்பு ஏற்பட்ட பொழுது அரசியல் வாழ்வைவெறுத்து 'அரசியல் தொண்டு செய்ய பலர் இருக்கின்றனர். ஆண்டவன் திருப்பணி செய்யப் போகிறேன்' என்று கூறிக் கொண்டு திருக்கேதீச்சர நாதன் திருப்பணியை ஆரம்பித்து தமது இறுதி நாள் வரை நடத்திக்கொண்டேயிருந்தார். அரசியலை விட்டொதுங்கி விட்டாலும் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் சேர்ந்து எழுப்பிய உரிமைக்குரலுக்குச் செவி மடுக்காதிருக்கவில்லை.

1956-ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பாதயாத்திரையை தொடர்ந்து திருமலையில் நடைபெற்ற தேசியமாநாட்டில் கலந்துகொண்டு சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தினர். பின் 1961-ம் ஆண்டு ஈழம் வாழ் தமிழ் பேசுமினமே ஒன்று சேர்ந்து வட, கிழக்கு மாகாணமெங்கணும்,அன்றைய அரசு ஆட்சி செலுத்த முடியாதவாறு சத்தியாக்கிரகம் செய்து கொண்டு இருந்த வேளை, அவர்களுடன் தானும் ஒருவனய்ச் சேர்ந்து, பலவழிகளிகளிலும் உதவி செய்து, மன்னர் மாவட்டத்தில் சத்தியாக்கிரகம் சிறப்பாக நடைபெற உதவினர்.

#### தடுப்புக்காவலில்......

இதன் பயனாக அன்றைய அரசாங்கத்தின் விருந்தினராக மற்றும் தமிழ்த்தலைவர்களுடன் பனாகொடை இராணுவ முகாமில் சிறை இருந்தார். ஒருமாத காலத்துக்கு மேல் அங்கு இருக்க திருக்கேதீஸ்வரநாதன் விடவில்லை. தனது தொண்டைத் தொடர விடுதலையாக்கி விட்டான். கைதியாக இருக்கும் பொழுது உண்மைத் தொண்டனாக, எந்நேரமும் இறைவனை வேண்டிக் கொண்டு கேதீச்சரநாதனைப் பற்றியே பேசிக்கொண்டும் இருந்ததாக அவருடன் கூட இருந்தவர்கள் கூறக்கேட்டோம்.


சேர் கந்தையாவின் உதவியுடனும் ஆலோசனைகளுடனும் இயங்கிவந்த கழகங்கள் சங்கங்கள் பல. அவற்றுள் முக்கியமானது, கொழும்பு இந்து வாலிபர் சங்கம். அச்சங்கத்துக்கு அவர் ஆற்றிய சேவைகள் அளவிடற்கரிது. அவரது மரணம் சைவ உலகத்திற்கு மட்டும் அல்லாது தமிழ் கூறும் நல்லுலகெங்குமே ஓர் பேரிழப்பாக முடிந்து விட்டது.

சர் கந்தையா வைத்தியநாதன் அவர்களால் காலியாகிவிட்ட இடம் இலகுவில் யாராலும் நிரப்பக் கூடியதல்ல. அவரது ஆன்மா சாந்தியடைய அவர் விட்ட பணியை தொடர்வோமாக.

வாழ்க வைத்திய நாதன் நாமம். வளர்க அவர் தொண்டு.


மங்கையர் விரும்பும்
மகோன்னத
'மினேர்வா'

சிறப்பும் வனப்பும் மிக்க சிறந்த
தையல் மெஷின்
இப்பொழுது வெகு சுலபமான மாதாந்த கட்டுப் பணத்திற்கு உங்களுக்குக் கிடைக்கும்



Minerva 126

நுண்ணிய தயாரிப்பு, நாசுக்காக எவ்வித தையலையும் சுலபமாகவும், அழகாகவும் தைத்துக் கொள்ளலாம்.

புதிய வரி விகிதத்தின் பின் எதுவித விலை உயர்வும் சுமத்தப்படவில்லை.

சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
516, ஸ்கின்னர்ஸ் ரோடு, தெற்கு,
கொழும்பு-10.
டெலிபோன் : 4261-2, 3.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அரசமரத்துப் பேய்

எங்கள் வீட்டுக்கு சற்றுத் தொலைவில் ஒரு சுடுகாடு இருந்தது. அங்கே ஓர் அரசமரமும் உண்டு. இம்மரத்தில் பேய் நடமாட்டம் இருப்பதாகக் கூறப்படுகிறது. மாலையானாலே அப்பக்கம் செல்லுவதற்கு எல்லாரும் பயப்படுவார்கள். என்பாட்டி என்னை அப்பக்கம் செல்ல அனுமதிப்பதேயில்லை.

இரவு வேளைகளில் அப்பக்கம் தனியே யாராவது சென்றால் அவர்களின் பெயரைச் சொல்லி அப்பேய் அழைக்குமாம். விடயமறியாமல் அப்பேயின் அழைப்புக்கு பதிலிறுத்தவர்கள் அப்பேய்க்கு இரையாகியுள்ளனர் என்றும் கதைகள் அடிபடுகின்றன.

அன்றொரு நாள் இரவுக் காட்சி சினிமா பார்க்கச் சென்றுவிட்டேன். என்னுடன் வருவதாகக் கூறிய நண்பர்கள் அன்று வராமையினால் காட்சி முடிந்த பின்னர் தனியாகவே வீடு வர வேண்டியிருந்தது. நான் பார்த்த படமும் பேய் பிசாசுகள் சம்பந்தப்பட்ட படம்தான். ஓர் இருண்ட காட்டில் பேய்கள் இருந்து கொண்டு போவோர் வருவோரைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது போன்ற கட்டங்களும் படத்தில் வந்தன. நான் வீடு நோக்கித் தனியே திரும்புகையில் பாட்டி கூறிய கதைகள் எல்லாம் என்னை ஆட்டி வைத்தன.

**நிமிடக் கதை**

தொலைவில் தீப்பிளம்பு தெரிந்தது. அருகே வந்தபோதுதான், அதுவும் சுடுகாட்டில் ஒரு பிரேதம் எரிவதனால் தோன்றிய தீப்பிளம்பு என்பதும் தெரிந்தது. உள்ளத்தில் பயம் அதிகரிக்க நடையை வேகமாக்கினேன்.

என்னை அறியாமல் பின்புறமாக என்பார்வை திரும்பியது. என்னைத் தொடர்ந்து ஓர் உருவம் வந்துகொண்டிருந்தது. என் அங்கங்கள் எல்லாம் வெடவெடத்து நடுங்கின. கால்களும் நடக்க மறுத்து விட்டன. எப்படியோ விரைவாக நடக்க முயன்றேன். ஓடவும் தொடங்கினேன்.

'பாலா' என்று என் பெயரைச் சொல்லி அழைத்தது அவ்வுருவம். 'தொலைந்தது' என்று எண்ணி மேலும் என் நடையை விரைவுபடுத்தினேன். மீண்டும் மீண்டும் என் பெயரை அழைத்தது. என் உயிரே நின்று விடும் போலிருந்தது.

ஓடினேன். என் ஓட்டத்தையே முந்திக் கொண்டு என்னருகில் அவ்வுருவம் வந்துவிட்டது. என் தோளையும் தொட்டு விட்டது. என் ஆவி பிரிவது போன்ற உணர்வு. உடல் வியர்த்துக் கொட்டியது.

'படம் பார்த்து விட்டு தனியே வீடு செல்லுவது எப்படி என்று ஏங்கி வந்து கொண்டிருந்த போது உன்னைக் கண்டேன். உன்னுடனேயே சேர்ந்து வீடு செல்லலாம் என்று தொடர்ந்து வந்தால், உன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டாலும்—என்னை விட்டு ஓடுகிறாயே?' என்று பதட்டத்துடன் கேட்டான் பக்கத்து வீட்டுக் கமலன். உண்மையை அவனிடம் மறைக்க முயன்றாலும், தெருவிளக்கு என் முகத்தில் உள்ள பேயாட்டத்தை, அவனுக்குக் காட்டிக் கொடுக்காமல் விட்டுவிடுமா? உண்மையைக்கூறி இருவரும் சிரித்தபடி வீட்டை அடைந்தோம்.

—மட்டுநகர் மூர்த்தி



# மங்கையர் சங்கம்

**கருத்துமேடை**

## ஆசாபாசங்கள் வளரவே கூட்டுக்கல்வி உதவுகிறது

**கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதா? [9]**

நாகரீகம் பரவிக்கொண்டு வருகின்றது. இவ்வேளையில் இப் பிரச்சினை ஏற்பட்டிருப்பது பலருக்கு வேடிக்கையளிக்கலாம்.

கலை, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றில் நாம் மேல் நாட்டவர்களோடு சரி நிகராகவாழ நினைப்பது மடமையாகும். அவர்களுடைய சூழல்வேறு. நம் சூழல்வேறு. சூழலேஒருவனின் வாழ்க்கை முறையை மாற்றியமைக்கிறது.

அவர்கள் கற்பைப் பேணுவதில்லை. ஒரு பெண்ணோ, ஆணோ எத்தனை தடவையாவது விவாகரத்துச் செய்து கொண்டுமணம்செய்யலாம். நாமும் அப்படிச்செய்தால் அது தமிழ்ப் பண்பாகுமா? பண்டயத்தமிழ் மக்கள் பண்போடுதான் கல்வி பயின்றனர். வசதியுள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வீட்டிலே வைத்துப் பாடம்புகட்டுவித்தனர். வசதியற்றவர்கள் தன்னாற்றல் படைத்து விளங்கினர். இவர்கள் உலகம் மதிக்க வாழவில்லையா? ஆண்களோடு பழகவில்லையா?

செல்வி
நோ. இராசம்மா

இன்றைய நமது நாட்டு மக்களோ மேல் நாட்டு நாகரீகத்தில் மூழ்கி உடல், உடை அலங்காரங்களில்ஈடுபட்டு,பிஞ்சிலே வெம்பிக் கற்குங்காலத்தையும் மறந்து களியாட்டங்களில் ஈடுபடுகின்றனர். ஆகவே நமது நாட்டிற்கும், சூழலுக்கும் கூட்டுக்கல்வி ஏற்றதாக இருக்கமுடியாது.

ஐந்தாம் வகுப்பிற்கு மேற்பட்டு மாணவர்கள் கூட்டாகக் கல்விகற்றால் அங்கே வளர்வது கல்வியல்ல. ஒரு சில மாணவர்களைத்தவிர பலர் ஆசா பாசங்களுக்கு அடிமையாகின்றனர். சகோதரி இ. சரஸ்வதி கூறியது போல் பெண்களுக்கு வேறு கல்விக்கூடம் இருக்கவேண்டும். பெண் ஆசிரியைகளைக் கொண்டே கல்வி புகட்ட வேண்டும். இப்படி நடந்தால் ஆண்களுக்கும் நல்லது, பெண்களுக்கும் நல்லது.

நாம் அறிந்தவரையில் இப்படிப்பட்ட கல்விக் கூடங்களிற் கற்ற மாணவர்கள் அறிவு பெற்று பட்டதாரிகளாக, நற்பண்புள்ளவர்களாகத்திகழ்கின்றார்கள். மாணவர்கள் அறிவு விருத்தியடைவதற்கும் நற்பண்புள்ளவர்களாக விளங்குவதற்கும் ஆண் பெண் இருபாலருக்கும் வெவ்வேறு கல்விக் கூடங்களே சிறந்ததாகும். அனைவரும் இதனை வரவேற்பார்களென்றே நினைக்கின்றேன்.

## செல்வி அக்காவிடம் 5 கேள்விகள்

கேள்வி 1

காதலித்து மணம் முடித்தோம்.மூன்று வருட இன்பவாழ்வின் பின் பையன் ஒருவன் பிறந்தான். அவனுக்கு இப்பொழுது ஒரு வயதுதான் ஆகிறது. என் கணவர் முன் போல் என்னிடம் பழகுவதில்லை. அவருடைய மனமாற்றத்தை என்னால் சகிக்க முடியவில்லை. என்ன செய்வது என்று தெரியாது தவிக்கும் எனக்கு நல்ல மார்க்கம் காட்டுவீர்களா?

சீ. சோ,
கொழும்பு-5.

மனைவிக்கு குழந்தை பிறந்தவுடனேயே ஒரு ஆணின் மனோநிலையில மாற்றம் ஏற்படுமானால் அதனை உண்மையான காதல் என்று எவரும் கூற முடியாது. புறக்கவர்ச்சி உந்தலில் உண்டான உறவு என்று தான் கொள்ளலாம்.

முதலில் உங்கள் கணவரின் மனோநிலையினைப் பொறுமையுடன் ஆராயுங்கள். அவருடைய போக்குக்கு சிலநாள் விட்டு விடுங்கள். அவருடைய நாட்டம் எத்தன்மையானது என்பதனை அறிந்து நீங்கள் அவருடைய போக்குக்கேற்றபடி உங்களை மாற்றி அமைத்துப் பாருங்கள். உங்களை அவர் வெறுத்து ஒதுக்கினால் சற்று ஒதுங்கியே இருப்பது நல்லது. ஆனால் அவரைவிட்டு அப்பால் செல்லக் கூடாது. அவருடனேயே இருந்து அவருக்காகச் சேவை புரிந்து அவர் அன்பை எட்டத்திலிருந்தே பெற முயலுங்கள். ஏட்டிக்குப் போட்டி போட்டு எதையுமே சாதிக்கமுடியாது.

கேள்வி 2.

எமது உடல் தெரியும்படி உடை அணிவதால், அதை வெறுக்கும் எம் தமிழச் சமுதாயம், தமிழன் கலாச்சாரப்படி உடை அணியும் போது, இவர்கள் பட்டிக்காட்டார் பிற்போக்காளர் என்று கூறுகின்றார்களே. அப்படியானால் நாம் எப்படியான உடை அணியலாம்?

செல்வி இ. சிவஞானவல்லி,
மானிப்பாய்.

தமிழ் மகளிருக்கு உரிய உடை எதுவென்பதை நாம் விளக்கவேண்டியதில்லை. பார்ப்போர் பக்தி கொள்ளும் வகையில் உடை தரிக்க வேண்டுமே தவிர பரிகாசத்துக்கிடமாக அணியலாகாது. பண்டைக்கால நாகரீக நிலை வேறு இன்றுள்ள நிலை வேறு. மறுபாலாரின் கீழ்த்தர உணர்ச்சியைத் தூண்டி அவர்களைக் கவர வேண்டுமென்ற கருத்தை மனதில் தேக்கி அதற்காகவே உடையில் மாற்றம் செய்ய விரும்பினால் அதை யாரும் தடுக்க இயலாது. பண்பான உடை தரித்த எவரையும் பட்டிக்காடு என்று எவரேனும் கூறுவார்களானால், கூறுபவர்களே பட்டிக்காட்டார்கள் என்று துணிந்து சொல்லலாம்.

கேள்வி 3

எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். முதற் குழந்தைக்கு வயது 4. இரண்டாவதற்கு 9 மாதம. மூத்த பிள்ளை மிகவும் குழப்படியாக இருக்கிறான். விளையாட்டுச் சாமான்கள் கொடுத்தாலும் சிறிது நேரம் விளையாடி விட்டு, பின்பு தூர எறிந்து விட்டு குழப்படிகள் செய்கிறான். குழப்படிகள் செய்வதை எவ்விதம் குறைக்கலாம்?

தவமணி துரைசிங்கம்,
கொழும்பு.

குழந்தைகள் செய்யும் குறும்புத்தனம் பெற்றோரின் பொறுமையைச் சோதிப்பதனாலும் போற்றத்தக்கதே. அக் குழந்தைக்குத் தீங்கு ஏற்படாத வகையில் நாம பார்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, கள்ளம் கபடமற்று விளையாடும் குழந்தைகளை அடக்கி ஒடுக்கிவிட நினைப்பது புத்திசாலித்தனமாகாது.

**அடுத்த இதழில்**

டாக்டர் என். கந்தையா
எழுதும்
குழந்தைகளுக்கு வரும்
**வாந்தி ரோகமும் பரிகாரமும்**
இடம்பெறும்

## நீங்களும் நானும்

சகோதரிகளே,

பெண்களுக்குஅத்தியாவசியமான குடித்தனக் குறிப்புகளை எடுத்துக் கூறி, அறிவு புகட்டவே '5 கேள்விகள்' பகுதியினை ஆரம்பித்திருக்கிறோம்.

1. சமூகத்தில் பழகுதல், 2. குடும்ப வாழ்விலீடுபடுதல், 3. குழந்தை வளர்த்தல், 4. ஆரோக்கியம் பேணுதல், 5. போசாக்குள்ள உணவுகளைத் தயாரித்தல் முதலிய துறைகளை அண்டியே உங்கள் கேள்விகள் இருக்க வேண்டும். நகைச்சுவைக் கேள்விகளுக்கு இப்பகுதியில் இடம் இல்லை.

இந்த ஐந்து துறைகளிலும் நாம் விளக்கம் தரத்தக்க வகையில் நீங்கள் கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள். நாம் சுருக்கமான பதிலளிக்கத்தக்கவையாகவே உங்கள் கேள்விகள் இருக்க வேண்டும். விரிவான விடைகள் எதிர்பார்க்கப்படும் போது, உரிய பொருள் பற்றி கட்டுரைகளை வெளியிடுவோம்.

இவ்வாரம் மூன்று சகோதரிகளின் கேள்விகளுக்கே விடை அளித்துள்ளோம. அடுத்த வாரம் முதல் வாரா வாரம் 5 கேள்விகளுக்கு பதில் தருகிறோம்.

—செல்வி அக்கா

ஒருவர் ஒரே தடவை ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம். உறையில் அல்லது அஞ்சலட்டையில் இதனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பவும்:-

5 கேள்விகள்
செல்வி அக்கா,
சுதந்திரன்
த. பெ. எண் 1183
கொழும்பு.

## முகத்தின் அழகும் அகத்தின் அழகும்

### [2] கவலை எனும் வியாதி

முகம் கண்ணாடிக்கு நிகரானது. பெண்களின் கன்னங்களைக் கண்ணாடியெனப் புகழ்வதைக் கொண்டு நாம் இதனைக் கூறவில்லை. உள்ளத்தின் பிரதிபிம்பத்தை அப்படியே வெளிக்காட்டுவதனால்,முகம் கண்ணாடிக்குச் சமமானதாகக் கொள்ளப்படுகிறது.

உள்ளம்தெளிவுடையதாக விருக்குமானால் முகத்திலும் தெளிவினைக்காண முடிகிறது. உள்ளத்தில் சஞ்சலம் புகுந்து விட்டால் முகமும் அச் சஞ்சலத்தை அப்படியே வெளியாக்கி விடுகிறது. ஆகவே முகத்தின் தெளிவுக்கும் உள்ளத்தூய்மைக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பது, வெளிப்படையாகிறது.

முகத்தின் உறுப்புக்கள் ஒழுங்கற்று அலங்கோலமாக விருப்பினும் ஒருவருடைய மனம் களங்கமின்றியிருக்குமானால் அம்முகத்திலும் ஒரு அழகு குடிகொண்டிருப்பதைக் காணலாம்.

உள்ளத்தில் கவலை தேக்கப்படும் வேளைகளில் முகத்திலுள்ள உறுப்புகளுக்கும் இருதயத்துக்கும் இணைப்பை ஏற்படுத்தும் கருவிகளின் சக்தி விரையமாகி விடுகிறது. இதனால் முகத்திலே உள்ள கவர்ச்சி கலைந்து விடுகிறது. ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு உணர்ச்சியை இட்டுச்செல்லும் நரம்புகள் தளர்ச்சி அடைந்து விடுவதனால் முகத்தில் மட்டுமல்லாமல்,உடல்எங்கணுமே பாதிப்பு ஏற்பட்டுவிடுகிறது.

— குணமணி

**சுறுசுறுப்பு மறைகிறது**

கவலை அதிகரித்தால் உணவுச் சத்துக்களிலிருந்து உடல்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரின் எதிர்காலம் என்ன?

## தமிழ் மொழியின் இடம் காப்பாற்றப்படுமா?

மலேசிய மடல்

ஆசியாவில் செங்கொடி உயர்த்தி நிற்கும் செஞ்சீனாவின் கம்யூனிசப் பிரச்சாரத்திற்கு வழிவகுக்கும் 'பாங் ஆப் சைனு'வின் சிங்கப்பூர் கிளையை மூடிவிடும் படி மலேசிய மத்திய அரசின் கட்டளையை சிங்கப்பூர் அரசினர் ஏற்கவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் நடுங்கிக் கொண்டிருக்கையில் அவர்களுக்கு நல்லதோர் வாய்ப்புக்கிடைத்தது; அதுதான் சிங்கப்பூர் பிரிவினை. இரண்டாண்டுகளுக்கு முன் மலேசியா அமைக்கும்போது, மலேசியாவிலிருந்துபிரிந்துபோகும் உரிமையையும் பிரித்துவிடும் உரிமையும் யாருக்கும் இல்லாதிருந்ததினுல் நிச்சயமாக மலேசியா நிலைத்து நிற்கும் என்றிருந்ததோடு மலேசியாவை எதிர்ப்பவர்கள் பத்தாம் பசலிகள், உலகத்தோடு ஒத்து வாழத்தெரியாதவர்கள் என்று தான் உலக மக்கள் நினைத்திருந்தார்கள்.

### பிரிவினைக்கான கரு

ஆனல் 9-8-65ம் தேதி திங்கட்கிழமை 'மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரிந்துவிட்டது'என்ற செய்தி உலக செய்தி நிறுவனங்களுக்கே அதிர்ச்சியை உண்டு பண்ணிவிட்டது.

பிரிவினைக்கான வாய்ப் போராட்டம் மலேசியா அமைக்கப்பட்டதிலிருந்தே தோன்றியது என்றுதான் சொல்ல வேண்டும். மலேசியாவில் சிங்கப்பூர் இணைவதற்கான போராட்டங்கள் எப்படி எல்லாம் நிகழ்ந்தன வென்பது பழைய கதை. ஆகவே இப்போது மலேசியா தோன்றிய பின் வளர்ந்த பிரிவினைக்கான 'கரு'வைப் பற்றி ஆராய்வோம்,

### வாய்ப் போராட்டம்

மலேசியா அமைக்கப்பட்ட நாள் முதல் சிங்கப்பூர் ஆளும் கட்சியாகிய மக்கள் செயல் கட்சியும் மலேசியாவின் மத்திய அரசை தன் வசம் வைத்திருக்கும் கூட்டணிக் கட்சியும் கூட்டாக இந்தோனேசியாவின் வெளி மிரட்டலை எதிர்த்து வந்தன. கம்யூனிஸ்டுக்களிடம் அரசியல் பாடம் படித்தவர்களான மக்கள் செயல் கட்சியினர், மலேசியாவின் பிற மாகாணங்களிலும் கிளைகளை நிறுவத் தொடங்கி, வேகமாக வளரத் தொடங்கினர்கள் என்பதற்கு சென்ற பொதுத் தேர்தலில் பார்லிமெண்டிற்கு பாட்டாளிகள் நிறைந்த தொகுதியிலிருந்து திரு. சி. வி. தேவன் நாயர்- என்ற சிங்கப்பூரில் புகழ் பெற்ற தொழிற் சங்கவாதி அந்தக் கட்சியின் பெயரில்- போட்டியிட்டு சிலாங்கூர் மாகாணத்தில் வெற்றி பெற்ருர் என்ற ஒரு காரணமே போதுமானது.

இந்தக் கட்சியிலுள்ள தலைவர்கள் தர்க்கம் செய்து வெற்றி பெறுவதில் தனித்திறமை பெற்றிருப்பதால் "மலேசியர்-மலேசியா" என்ற தலைப்பினையே பொருளாகக் கொண்டு சொற போரைத் தொடங்கினர்கள். முதலில் ஒதுங்கி நின்ற கூட்டணியினர் சிங்கை ம. செ. க. விற்கு உடனுக்குடன் பதிலளிக்கும் வகையில் மெது மெதுவாக முன்னணிக்கே வந்துவிட்டார்கள். இரு தரப்பாரின் சொற் போரினுல் அதிக நன்மை அடைந்தவர்கள் இந்நாட்டு பத்திரிகையாளர்களே!

### புலியும் புலியும் மோதின

பிரதமர் துங்கு அப்துல் ரகுமானைப் போன்றவர்கள் இதில் வெகுதூரம் ஒதுங்கி நின்ருர்கள் என்ருலும் இந்நாட்டிலுள்ள பத்திரிகைகள், இந்த விவாதங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்ததாலும், சிங்கப்பூர் வானெலி ம. செ. க. வின்கை வசமிருந்தாலும் சுமுகமான தீர்வுகாண வேண்டுமென்ற எண்ணத்துடன, துணைப் பிரதமர் திரு. டுன அப்துல் ரசாக் லீ யுடன் பேச்சு நடத்த சொல்லிவிட்டு, காமன் வெல்த் பிரதமர்கள்மாநாட்டிற்கு சென்றுவிட்டார பிரதமா துங்கு.

காட்டில் புலியும் புலியும் மோதியதைபபோல் லீயும், டுன் ரசாக்கும் அவர்கள் பேச்சில் எந்த ஒரு முடிவும் காண முடியவில்லை. இறுதியாக பிரதமர் துங்கு வரட்டும் என்று காத்திருந்தார்கள். லண்டனில் நோய் வாய் பட்டு மருத்துவமனையிலிருந்த துங்குவிற்கு இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டதும் ஆழ்ந்த சிந்தனையோடு 29-6-65ல் மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரிக்கப் படவேண்டும் என்ற முடிவிற்கு வந்து, டுன் அப்துல் ரசாக் அவர்களுக்கு பிரிவினைக்கான ஏற்பாடுகளைச் செய்வது சம்பந்த மாக த் தொடர்புகொண்டிருந்தார். என்ருலும் 22-7-65ல் பிரான்சில் தங்கியிருந்த போதுதான் மலேசிய 'சீனியர் அமைச்சர்'களின் முழு இணக்கம் பெற்று, பிரிவினைக்கான ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது.

### பிரிட்டினுக்கும் தெரியாது

இதில் ஒரு முக்கிய விடயம் என்னவென்ருல் பிரிவினைக்கான முடிவை லண்டனில் பிரதமர் துங்கு முடிவு செய்திருந்தும் பிரிட்டிசாருக்கு இதுபற்றி ஒன்றும் தெரியாது. 9-8-65 காலை எட்டு மணியளவில் பிரட்டிஸ் தூதர் திரு. கொட் பிரபுவும் ஆஸ்திரேலிய தூதர் திரு. டாம் கிறீச்லி ஆகிய இருவரும் பிரிவினை முடிவை குறைந்தது ஒரு நாளாவது ஒத்திவைக்க வேண்டும் என்று ... ஆனல் ... ஏற்கப்படவில்லை. இங்குள்ள வெளிநாட்டுத் தூதர்கள் சகலருக்கும் பிரிவினை முடிவை தெளிவுபடுத்தி விட்டதால் எங்கள் முடிவை மாற்ற முடியாது என்று சொல்லி விட்டார் பிரதமர்.

இவ்வளவு நடந்தும் இந்நாட்டு மக்களுக்கு 9-8-65 காலை 9-45 மணியிலிருந்து சிங்கப்பூர் வானெலி அரை மணி நேரத்திற்கு ஒருமுறை பிரிவினைக்கான ஒப்பந்தத்தை ஒலிபரப்பிக் கொண்டிருந்த பின்தான் தெரியும். இதே நேரத்தில் மலேசிய நாடாளுமன்றத்தில் பிரதமர் துங்கு அப்துல் ரகுமானும் பிரிவினை மசோதாவை அங்கிகாரத்திற்கு அவையில் சமர்ப்பித்தார்.

### நாளைய நிலை

நாடாளுமன்றஉறுப்பினர்களும் பாமரமக்களும் முதலில் தங்கள் செவிகளில் ஒலித்த இந்தச் செய்தியை நம்பவில்லை. இந்த மசோதாவின்மீது நீண்ட உரை நிகழ்த்திய பிரதமர் துங்கு 'ஒருபிரச்சினை தீர்க்கப்பட்டவுடன்; மற்றெரு பிரச்சினை கிளம்புவதாகத் தோன்றியது. இங்கு ஒரு கிழிசல் தைத்தால் வேறெங்காவது ஒரு கிழிசல் தோன்றியது. ஓர் ஓட்டையை அடைத்தால் இதர ஓட்டைகள் தோன்றின.' என்ற சொற்கள் உண்மையே என்ருலும் சிங்கப்பூர் பிரிவினை அமெரிக்காவுக்கு ஒரு கியூபாவைப் போல் மலேசியாவுக்கு ஒரு சிங்கப்பூர் என்பதை இல்லை என்று மறுக்க முடியாது.

இன்றே இன்னும் சில ஆண்டுகளோ மக்கள் செயல் கட்சி ஆட்சிபுரியும் வரையில் மலேசியாவோடு சிங்கப்பூர் நட்புறவோடு இருக்கலாம்; ம. செ. க. விற்குப் பின் ஆட்சிக்கு வரும் நிலையிலிருப்பது பரிசான் சோசலிசட் என்ற இடதுசாரி நிறுவனம்தான. கம்யூனிஸ்ட் என்ற பெயர்தான இந்தக் கட்சிக்கு இல்லையே தவிர பிற எல்லாமே செஞ்சீனுதான. பரிசான் சோசலிஸ்ட் ஆட்சிக்கு வரும் போது நிச்சயமாக மலேசியாவிற்கு தீங்கையே உண்டு பண்ணும்.

### தமிழின் எதிர்காலம்

சிங்கப்பூர் மலேசியாவில் இணைவதற்குமுன் பிரிட்டனின் ஆணைக்குட்பட்ட அடிமைத் தீவாகத்தானிருந்தது. சிங்கப்பூரை தனிச் சுதந்திர நாடாக்கப் பெரும் முயற்சி செய்த பெருந் தலைவர்களில் சிலர் அரசியலிலிருந்து விலகி வழக்கறிஞர்களாகவே தொழில் புரியும் இப்போது ஆச்சரியப்படக் கூடிய நிலையில் சுதந்திரம் பெற்றிருக்கிறது.

சிங்கப்பூரில் தமிழ், சீனம், மலாய், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளும் நீண்ட நாட்களாக ஆட்சி மொழிகளாயிருந்து வருகின்றன.

உலகில் தமிழ் பிறந்து வளர்ந்து தமிழ் நாட்டில் இல்லாத பெருமை சிங்கையில் இருந்து வருகிறது. ஆனுல் இனியும் தொடர்ந்து நான்கு மொழிகளும் ஆட்சி மொழியாக இருந்து வருமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

## அண்ணு விசயம

இந்நாட்டிற்கு வெளி நாட்டிலிருந்து காலம் சென்ற இந்தியப் பிரதமா நேரு அவர்கள் வந்திருந்த போது திரண்டு நின்ற இந்திய மக்கள்மீண்டும் அறிஞர் அண்ணு—இரா. செழியன் ஆகிய இருவரையும் வரவேற்க ஆயிரக்கணக்கான தமிழர்கள் திரண்டிருந்தார்கள். இந்நாட்டில் தங்கியிருந்த ஒவ்வொரு நாளும் பல கூட்டங்களிலும் பல தேனீர் விருந்துகளிலும் பல உணவு விருந்துகளிலும் கலந்து கொள்ளவேண்டிய நிலையை தட்டிக்கழிக்க முடியாததனுல் ஆங்கில மருத்துவர்களின் உதவியை நாடி குறிப்பிட்டிருந்த பல நிகழ்ச்சிகளையும் ரத்துச் செய்ய வேண்டிய நிலைக்கு ஆளானுர்கள் அண்ணுவும், செழியனும்.

அண்ணுவுக்கும் செழியனுக்கும் மாலைகளும் கைதறி ஆடைகளும மட்டும் மலையாகக் குவியவில்லை; தங்க நகைகள முதல் வைரம் போன்ற விலை உயர்ந்த பொருட்களும் குவிந்தன. இருவரும் சொறபொழிவு நிகழ்த்திய கூட்டங்களில குறைந்தது ஐயாயிரம் முதல் முப்பதுஆயிரம வரை மக்கள நின்றிருந்தார்கள.

இதுவரையில் சொற்பொழிவுக்காக இந்த அளவிலான கூட்டம்—தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளின் கூட்டங்கள் கூட—இவ்வளவு நிறைந்திருந்ததில்லை. மலேசிய மணணில் அண்ணுவின் சொல் மணிகளும் அவர் தம் இளவலின் சாதுர்ய சாதுர்ய சொற பெருக்குகளும் இந்நாட்டில ஓர் தமிழ் நாட்டை உணடு பணணிவிட்டது என்றுகூடச் சொல்லலாம.

பிற நாட்டு தொழிலாளர்களுக்கு இல்லாத நிலை இந்நாட்டு தொழிலாளர்களுக்கு 'வேலை நிறுத்தம் செயவதற்கு தடை' என்ற அரசாங்க அடக்கு முறையால் இங்குள்ள தொழிற சங்கங்கள தூங்கி விழுந்து கொண்டிருக்கின்றன.

அந்நிய நாட்டு பத்திரிகைகளுக்கு நிருபராகவும் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் இயூவிற்கு ஆலோசகராகவும் இந்நாட்டில் வாழ்ந்து வந்த பிரிட்டீஸ் குடியுருமையுடைய திரு. அலெக்ஜோசி என்ற புகழ் பெற்ற பத்திரிக்கை நிருபரை மலேசிய மத்திய அரசாங்கம் 'இந்நாட்டிற்கு விரும்பத்தகாதவர்' என்று காரணம் காட்டி இந்நாட்டைவிட்டுவெளியேற்றி விட்டது.

---

# இலக்கிய உலகு

-"வேதாளம்"-

## 'தேர்'

சிறுகதை யென்ருல் என்னவென்றே தெரியாத, புரிந்துகொள்ளாதவர்களை எல்லாம் இன்று ஈழத்தில் பழம் பெரும் எழுத்தாளர்கள் என்று ஏன்தான் போற்றுகின்ருர்களோ தெரியவில்லை. ஒருவரையொருவர் பழகிய தோசத்திற்காக—தெரிந்த கொண்ட தோசத்திற்காக—இல்லாத முக்கியத்துவத்தை சரக்கற்றவர்களுக்கு அளித்துள்ளதால், ஈழத்து இலக்கியவுலகிற்குத் திராத கறையே ஏற்பட்டிருக்கிறது. நேர்மையுடைய ஒரு விமர்சகன்—அவன் நிச்சயமாக இந்த பழம் பெரும் எழுத்தாளர்களோடு பழகாதவனுக இருக்க வேண்டும்—ஈழத்தில் வெளிவந்த சிறுகதைகள் யாவற்றையும் படிக்க நேரில், அவற்றின் தாரப்பரியத்தை ஆராய நேரில், ஒரு பத்துப்பேரைத் தவிர ஏனையோர் 'சிறுகதை எழுத்தாளர்' என்ற பெயரை வைத்திருக்கவே தகுதியற்றவர்கள் என்பதை உணர்வான்.

தாம் எழுதிய குப்பை களையெல்லாம் தரமான சிறுகதைகளென எண்ணி மயங்கிக்கிடக்கும் இவர்கள், நல்ல சிறுகதை எழுத்தாளர்களின் கதைகளைக் கூடப்படிப்பது கிடையாதா? புதுமைப்பித்தனின் பல கதைகளிலுள்ள ஒரு முழுமை, ஒரு நளினம், ஒரு கிண்டல்,...ஜெயகாந்தனின் கதைகளிலுள்ள ஒரு விறுவிறுப்பு, தத்துவார்த்த உண்மைகள், புதியகோணம் ஒருகழி விரக்கம்...அகிலனின் கதைகளிலுள்ள ஒருசுவை... தெள்ளிய நடை...இவற்றில் ஒன்ருவது தம்மைத் தலை சிறந்த எழுத்தாளர்களாகக் கூறிக்கொள்ளும் இவர்களுக்கு இருக்க வேண்டாமா?

ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்ற காலம் மலையேறிவிட்டது. அதனை இவர்கள் உணரவேண்டும்; உணர்ந்த சிலர் அதனுல்தான் ஒதுங்கியிருக்கிருர்கள் போலும். இன்னும் உணராத சிலர் தான் விழாக்களெடுத்துத் திரிகிருர்கள்.

நல்லதொரு சிறுகதை எவ்வாறு, எப்படி அமைய வேண்டும் என்பதற்கு அண்மையில் வெளிவந்துள்ள 'தேர்' என்ற கதையைக் கூறலாம். 'பழம் பெரும் எழுத்தாளர்' என எண்ணுவோர் அதனை நிச்சயமாகப் படிக்க வேண்டும். 'ராஜ்—மித்ரா' என்ற 'புதிய எழுத்தாளர்' ஒருவரின் சிறுகதை அது. அதனைப் படித்துவிட்டு அத்தரத்தில் எழுதவியலுமானுல் எழுதுங்கள்; இல்லாவிடில் சும்மா விருங்கள்; பழைய குப்பைகளை வெளியிட முயலாதீர்கள்.

—இதுதான் இலக்கிய அன்னைக்கு நீங்கள் ... யக்கூடிய சேவை ...

---

'சுதந்திரன்'

புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி

சுதந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

SUTANTIRAN

1965 செப்டம்பர் மாதம் 5-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் - 3411 த. பெ. 1183


# காஷ்மீர் போர்

காஷ்மீர் பிரச்சினையின் இறுதித் தீர்வு போர் முனையில் தானா? இப்பிரச்சினை கடந்த 18 ஆண்டுகளாக இழுபறிபட்டதிலிருந்தே இது ஒரு பயங்கர மோதுதலிற்தான் போய் முடிவடையுமென பலர் எதிர்பார்த்தனர், நீண்ட கால மனக் கசப்பால் ஒரு மோதுதல் ஏற்படுவது வியப்பன்று.

இன்று இந்திய—பாகிஸ்தான் இராணுவங்கள் நேரடி யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. டாங்கிகள், யுத்த விமானங்கள் முதலியவைகளை இருதரப்பினரும் சண்டையில் உபயோகப்படுத்துவதால் இதனை ஒரு முழு "யுத்தம்'' என்றே கூற வேண்டும். கொரில்லா போரில் தொடங்கி நேரடிப் போரில் வந்து முடிந்துள்ளது.

இத்தகைய இராணுவ மோதுதலை இந்தியா மட்டுமின்றி பாகிஸ்தானும் எதிர்பார்த்திருந்திருக்குமென்பதில் ஐயமில்லை. பாகிஸ்தான் தரப்பிலிருந்து காஷ்மீருக்குள் ஊடுருவல் நடைபெற்றுள்ளது—இன்னும் நடைபெறுகிறது என்பதை இனி மறப்பதிலோ மறைப்பதிலோ பயனில்லை. ஊடுருவலால் ஒரு பெரிய நெருக்கடி தோன்றுமென்பதும், ஊடுருவல் ஒரு நேரடிப் போருக்கு வழி காட்டுமென்பதும் பாகிஸ்தானுக்குத் தெரியாதிருக்க முடியாது.

ஆகவே யுத்த களத்தில் பிரச்சினைக்குத் தீர்வு காணலாமென்று கருதியே பாகிஸ்தான் ஊடுருவலில் ஈடுபட்டது என்று கருதுவதற்கு இடமேற்பட்டுள்ளது. இதனால் இந்தியாவும் அதே நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவு பாரதூரமானது. இது காஷ்மீருடன் நின்றுவிடப்போவதில்லை.

இரண்டும் நேச நாடுகள்—ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நாடாக இருந்த நாடுகள்-சாம்ராஜ்யக் குடும்பத்தில் உறுப்பினர்களான நாடுகள்—இவ்விரு நாடுகளிடையே இன்று நடைபெறும் யுத்தம் ஐ. நா. காரியதரிசி கூறுவதைப் போல உலக சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படுவதோடு நின்றுவிடாது. ஆசியாவிலே ஒரு பெரிய நெருக்கடியையே தோற்றுவிக்கும். சாம்ராஜ்யக் கூட்டுறவுக்கும் அது சாவுமணி அடித்துவிடும். அத்துடன் அது ஒரு பெரிய அளவில் நடைபெறும் யுத்தமாக மாறுவதற்கும் இடமுண்டு.

பாகிஸ்தனுக்கு சீனாவின் ஆதரவு உண்டென்றும், சீனாவின் போர்த் தந்திரங்களைப் பாகிஸ்தானும் கையாளவாமென்றும் கூறப்படுகிறது. சீனா ஓர் ஆழ்ந்த இராணுவத் திட்டத்தின் மீது போரைப் பாகிஸ்தானைக் கொண்டு தூண்டிவிட்டிருக்கலாமென்பதும் சாத்தியமே. ஏனெனில் இந்தியாவுக்கெதிராக காஷ்மீரில் ஒரு இரண்டாவது போர் முனையை ஏற்படுத்த வேண்டுமென்பது சீனாவின் நெடுநாளையத் திட்டமாகும்.

சீனா எதிர்பார்த்தபடி இப்பொழுது அந்தப் போர்முனை ஏற்பட்டுவிட்டது. எனவே காஷ்மீர் போர் உச்சக் கட்டத்தை அடையும்போது சீனா திடீரென மீண்டும் இந்தியாவைத் தாக்குவது சாத்தியமே. சீனாவிடம் அணுகுண்டும் இருக்கிறது. அந்நிலை ஏற்படும்போது இரு போர் முனைகளில் யுத்தம் செய்ய வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கு ஏற்படுமாதலின், இந்தியாவின் இராணுவ சக்தி சிதறுண்டு போகுமென்றும், அதனால் இலகுவாக இந்தியாவுக்குள் பிரவேசிக்கலாமென்றும் சீனா கணக்குப் போட்டிருக்கலாம். இவ்விடயத்தில் சீனாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஓர் உடன்பாடு இல்லையென்று எப்படிக் கூறமுடியும்? இந்தோனேசியாவும் பாகிஸ்தானுக்கு அனுசரணையாக நிற்குமென்றும் கருத இடமுண்டு.

கடந்த உலகயுத்தத்திற்குப்பின்னர் மேலைய ஏகாதிபத்தியங்கள் தங்களின் குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது, அந்நாடுகளில் பலசிக்கல்களைத் தோற்றுவித்து மோதல்கள் ஏற்படக்கூடிய நிலைமையையும் உண்டாக்கி விட்டுச் சென்றன. இதன் விளைவுகளை அண்மையில் விடுதலை பெற்ற அநேக நாடுகளில் இன்றுநாம் பார்க்கின்றோம். பாகிஸ்தானும் இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல.

பொதுவாக உலக நாடுகளிடையேயும், குறிப்பாக ஆசிய—ஆபிரிக்க நாடுகளிடையேயும் இத்தகைய மோதுதல்கள் ஏற்படுவதைத் தவிர்க்கவே நேருஜி சமாதானச் சகவாழ்வு கொள்கையைத் தோற்றுவித்தார். பாண்டுங் மாநாடும் அதனை ஏற்றுக்கொண்டது. இன்று அக்கொள்கை செத்து மடிந்து விட்டதா? சமாதான சகவாழ்வுக் கொள்கையை கைவிட்டு இனி ஆசிய—ஆபிரிக்க நாடுகள் யுத்தத்தின் மூலம் தங்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளப் போகின்றனவா?

யுத்தத்தின் மூலம் காஷ்மீர் பிரச்சினையை மட்டுமல்ல வேறு எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்பதை இந்தியாவும் பாகிஸ்தானும் முதலில் உணரவேண்டும். யுத்தம் அழிவைக் கொண்டு வருமேயன்றி பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொண்டுவராது. பேச்சு வார்த்தைகள் மூலமே பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். ஆயுத உதவிக்கு மேலைய வல்லரசுகளை எதிர்பார்த்து நிற்கும் ஆசிய—ஆபிரிக்க நாடுகள் பேச்சு வார்த்தைகளைத் தவிர வேறு எந்த வழியையும் எக்காரணத்தை முன்னிட்டும் நாடக்கூடாது.

ஐ. நா. பொதுச் சபையில் காஷ்மீர் பிரச்சினை மீதும் விவாதம் நடைபெறலாம். ஐ. நா. பொதுக்காரியதரிசி காஷ்மீர் யுத்தத்தை நிறுத்த பெருமுயற்சிஎடுத்து வருகிறார். யுத்தத்தை நிறுத்துவதுமட்டும் இனிப்போதாது. காஷ்மீர் பிரச்சினையை இறுதியாகத் தீர்த்து வைத்து விடவும்வேண்டும். அதற்கான வேளை வந்துவிட்டது. இல்லையேல் மீண்டும் மீண்டும் மோதுதல் ஏற்படும், ஆசிய நாடுகளின் அமைதியைக் குலைத்து[illegible]டும். ஒரு பிரச்சினையைத் தீர்க்க 18 ஆண்டுகள் போதாதா?

இவ்விடயத்தில் ஐ நா. வைவிட ஆசிய—ஆபிரிக்க நாடுகளுக்கே பொறுப்பு அதிகம். அந்த [illegible]டுகள் உடனடியாக முன்வந்து ஏதோ ஒரு வழியில் காஷ்[illegible] பிரச்சினைக்கு இறுதித் தீர்வைக் காணவேண்டும். இதில் [illegible]மதம் கூடாது.

பாகிஸ்தானும், இந்தியாவும் நம[illegible]அண்டை நாடுகள். எனவே இலங்கை இத்தகராறைத் தீர்த்துவைப்பதில் விசேட சிரத்தை காட்டவேண்டும். சீனா இந்தியாவைத் தாக்கியபோது இலங்கை உடனடியாக ஓர் ஆசிய—ஆபிரிக்க மாநாட்டை கூட்டி போரை நிறுத்த நடவடிக்கை எடுத்ததென்பது குறிப்பிடத்தக்கது.

காஷ்மீர் போரை நிறுத்தி அங்கு அமைதியை நிலைநாட்டவும், அத்[illegible]டு அப்பிரச்சினைக்கே தீர்வு காணவும் ஏனைய ஆசிய—ஆபிரிக்க நாடுகளுடன் சேர்ந்து நடவடிக்கை எடுக்க இலங்கை முன்வரவேண்டும். இவ்விடயத்தில் இலங்கை மௌனம் சாதிக்க முடியாது. ஏனைய நாடுகளை விட இலங்கைதான் இதில் அதிக அக்கறை கொள்ளவேண்டும்.

ஐ. நா. வுக்குச் சென்றுள்ள இலங்கைத் தூது கோஷ்டியினர் ஆசிய— ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளுடன் [illegible] காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான [illegible]கைகளை எடுப்பார்களென்றே எதிர்பார்க்கின்றோம்.

# அமைச்சர் அவைத் தீர்ப்பு— 'செவிடன் காதில் ஊதிய சங்கு'

## காப்புறுதிக் கூட்டரவு
## புகையிரத திணைக்களம்

தமிழுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் அவை ஐயந்திரிபறத் தீர்த்துவிட்ட பின்னரும், அரசாங்கத் திணைக்களங்களில் தமிழுக்கு இடம் கொடுக்க சில ஊழியர்கள் மறுத்து வருவது கவலையைத்தருகிறது. வகுப்புவாதத்தில் ஊறித்திழைத்துவிட்ட ஊழியர்கள் அங்காங்கே கடமை பார்த்து வருகின்றனர். அவர்களின் பழக்கத்தை மாற்றி, 'தமிழ் பேசுவோரும் இந்நாட்டில் சகல உரிமைகளும் பெற்று வாழத் தகுதியும் அருகதையும் உடையவர்கள்' என்பதனை உணரவைத்தாகவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

முன்னர் ஆட்சிசெலுத்தியவர்கள் பச்சை வகுப்புவாதத்தை நாடெங்கணும் பரப்பி வந்தார்கள். சர்வதேசிய வாதிகள் என்றம், இன—வகுப்பு—மதப்பிளவுகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்றும் தம்பட்டமடிப்பவர்கள் ஆட்சியின் லகானைப் பிடிப்பதில் பங்கெடுத்தபோதும் கூட வகுப்புவாத வெறி மாறுமல், மென்மேலும் விருத்தியடைந்தது. இவ்வேளையில் அரசாங்கத்திணைக்களங்களிலும் கூட்டரவுகளிலும் புகுந்து கொண்ட சகல சிங்கள ஊழியர்களும் வகுப்புவாதிகளாகவே மாறிவிட்டனர்.

### காப்புறுதிக் கூட்டரவு

காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஒரு வியாபார நிறுவனம். இனம்—மதம்—மொழி கடந்து பொதுவாகக்கடமையாற்றவேண்டிய இந்நிறுவனம், ஒரே மொழியில் மட்டும்சேவையாற்ற முனைந்தால்—ஒரே இனத்தாருக்கு மட்டும் கருமங்களை முடித்துக் கொடுக்கவிரும்பினால்-ஏனைய மக்களின் புறக்கணிப்பைத் தானே பெறமுடியும்? வர்த்தகம் லாபகரமாக நடைபெறுவது எங்கனம்?

ஊர்காவற்றுறை உறுப்பினர் திரு. வி. நவரத்தினம் கடந்த 20ம் திகதி பாராளுமன்றத்தில் உரைநிகழ்த்தும்போது, பலதிடுக்கிடும் சம்பவங்களை எடுத்துக் கூறினார். சாவகச்சேரியைச் சேர்ந்த ஒரு தமிழர் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் தமது தாய்மொழியாகிய தமிழில் தொடர்பு கொண்டமைக்காக அவருக்கு சிங்களத்தில் வசவு கிடைத்திருக்கிறது. 'பற தமிழா' என்று வர்ணித்து தகாத வார்த்தைகளையும் சேர்த்து அவருடைய கடிதத்துக்கு பதில் எழுதப்பட்டுள்ளது. இச்சம்பவம் பாராளுமன்றத்தில் வெளியாகி இரு வாரங்கட்கு மேலாகியும், இக்கடிதத்தை எழுதிய நபர் யார் என்பதனைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று தெரியவருகிறது.

இரு சகோதரர்கள் தங்கள் தவணைக் கட்டணங்களை காசோலைகளாக தமிழில் அனுப்பி வைப்பதுண்டாம். ஆனால் வேண்டுமென்றே இவ்விருவருடைய கணக்குகளில், கொழும்பு தலைமைக் காரியாலயம் குளறுபடி செய்து வருகிறதாம்.

சுதந்திரன் அரசியல் நிருபர்

தமிழிலே தொடர்பு கொள்ளும் தமிழ் பிரதிநிதிகளுக்கு தமிழில், அல்லது ஆங்கிலத்தில் தானும் பதிலளிக்கப்படுவதில்லை என்ற தகவல்கள் கிடைத்துள்ளன. ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளும் பிரதிநிதிகளுக்கும் ஆங்கிலத்தில் பதிலளிக்க அதிகாரிகள் விரும்புவதில்லை. திரும்பத் திரும்பக் கோரிக்கை விடுத்தாலும் 'செவிடன் காதில் ஊதிய சங்கெ'னவேயாகிறது.

புகையிரதத் திணைக்களத்திலிருந்து, ஒரு நிலைய அதிபர், சிங்களத் தேர்ச்சி பெறாத காரணத்துக்காக வேலையிலிருந்து நீங்க கட்டாய ஓய்வுக் கட்டளையைப் பெற்றார். சிங்களக் கெடுபிடி தற்போது தளர்ந்துள்ளமையினால் அவருடைய சேவை தொடர்ந்து நீடிக்கலாம் என்று புகையிரதத் தலைமை நிலையம் சிங்களத்தில் கட்டளை பிறப்பித்திருக்கிறது. சிங்களத்தில் அனுப்பப்பட்ட கட்டளையைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் திருப்பி அனுப்பி விட்டார்.

முன்னமேயே பெற்றஓய்வுக் கட்டளையின் பிரகாரம் அந்நிலைய அதிபர் ஓய்வு பெறவிருந்தார். கொழும்பிலுள்ள தலைமை நிலையம் சென்று தமது சேவை முடிவு பற்றிய பத்திரங்களைச் சமர்ப்பிக்க ஆயத்தமான போது, அவருடைய சேவை நீடிப்புப் பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்பட்டனவாம். ஆனால் அவருக்கு அளிக்கப்படும் கட்டளைக் கடிதங்கள் அனைத்தும் சிங்களத்திலேயே இருப்பதாகவும் அவற்றை அவர் ஏற்க மறுத்து வருவதாகவும் தெரிகிறது. மேலதிகாரிகள் வரை பிரச்சினைகள் சென்றும் சிங்களக் கெடுபிடி தளர்ந்ததாகத் தெரியவில்லை.

தமிழிலும் கருமமாற்ற அமைச்சர் அவை முடிவெடுத்துவிட்ட பின்னரும் இத்தகைய சிங்களக் கெடுபிடிகள் தொடர்ந்து நீடித்தால் தமிழ் பேசும் மக்கள் கவலைகொள்ளாதிருக்க முடியுமா?

# தொழில் வளர்ச்சிக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டரசாங்க அமைச்சர்களின் யாழ்ப்பாண வருகையின் போது கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடாத்திய வேளையில் டாக்டர் பொலிசாரினல் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இத்தாக்குதல்கள் அனைத்தும் டாக்டர் நாகநாதனின் உடலில் பலவிதமான ரோகங்களையும் ஏற்படுத்திவிட்டன.

இரண்டரை மாதங்கள் சிகிச்சை பெற்ற டாக்டர் இன்று பூரண குணத்துடன் நாடு திரும்பியுள்ளார். பழைய தெம்பையும் உற்சாகத்தையும் டாக்டரிடம் காண முடிந்தது.

உடல் நலம் சரியானதும் டாக்டர் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் பலரையும் பிரதமர் வில்சன், எதிர்க்கட்சித் தலைவர் முதலானோரையும் கண்டு கலந்துரையாடியுள்ளார். லண்டனிலிருந்து திரும்புகையில் சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், ஐக்கிய அரபுக் குடியரசு, தமிழ் நாடு ஆகிய இடங்களுக்கும் சென்றுள்ளார்.

சுவிட்சர்லாந்து நாட்டில் பல்வேறு மொழிகளைப் பேசும் பல இனத்தவர்கள் வாழ்ந்தாலும் சமஷ்டி ஆட்சிமுறையினால் வேற்றுமையிலும் ஒற்றுமைகண்டு, அந்நாட்டவர்கள் சிறப்பாக வாழ்வதாக டாக்டர். கூறினார்.

பிரான்ஸ் நாட்டின் நிதி அமைச்சரைக்கண்டு பேசியபோது, இலங்கைக்கு பொருளாதார உதவிகள் செய்ய பிரான்ஸ் ஆயத்தமாகவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளாராம்.

ஒரு பிரபல நிறுவனம் இலங்கையில் மின்சார உற்பத்திகளைச் செய்து கொடுக்கவும் தண்ணீர் விநியோக வசதிகளை ஒழுங்கு செய்து தரவும் ஆயத்தமாக விருப்பதாக டாக்டர் அவர்களிடம் கூறியிருக்கிறது. இது போன்று இந்நாட்டின் கைத்தொழில் பொருளாதார வளர்ச்சிக்கான பல திட்டங்களை தாம் கொண்டு வந்திருப்பதாகவும், தமிழரசுத் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் பிரதமர் டட்லி சேனநாயக்காவிடமும், அமைச்சர் அவையினரிடமும் சகல திட்டங்களையும் சமர்ப்பிக்கப் போவதாகவும் டாக்டர் நாகநாதன் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சாகித்திய மண்டலம்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் தாராளமாகப் படியுங்கள்’ என்றார்.

‘இன்றுஅரசகருமமொழித் திணைக்களத்தில் நடப்பதென்ன? பல்கலைக் கழகம் வரை சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தங்கள் தாய் மொழிகளில் படிக்கலாமென்று அரசாங்கம் விதித்திருந்த போதிலும், சிங்களத்திலே மொழி பெயர்ப்புச் செய்யப்படுகின்ற ஆங்கிலப் புத்தகங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படுவதில்லை. சிங்கள மொழி பெயர்ப்பைக் கண்காணிப்பதற்கு இரண்டு பேர் இருந்தால் தமிழுக்கு ஒருவர்தான் இருக்கிறார். எனவே பெரும்பாலும், சிறுபான்மை என்ற வேறுபாட்டைக் கலை கலாசார, மொழிவளர்ச்சியிலெல்லாம் காட்டுவது சிறுபான்மை இனத்துக்குச் செய்யும் தொண்டாகாது. இத்தகைய செயல்களைச் சிறுபான்மை இனம் ஒரு துரோகமான செயலாகவே கணிக்கும். இத்தகைய செயல்களை அரசியற் சூதாட்டமாக ஆக்கி வைத்துக் கொண்டிருந்தாலும், ஆட்சியிலே இருப்பதற்கு அப்படிச் செய்தாலும், கலை, கலாசாரம், மொழி, பாடசாலை நூல்கள் இவற்றிலெல்லாம் தமிழ் இனம் ஒதுக்கப்படுவது முறையாகாதென்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

### இதுதான் சாகித்திய மண்டலம்

‘எல்லாக் காலமும் இதனைத் தமிழ் இனம் பொறுத்துக் கொண்டிருக்காது. தன்மானம் படைத்தவன், சுயமரியாதை உள்ளவன் இத்தகைய செயல்களைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. உண்மையிலே நாகரீகம் படைக்தவர்கள் சமதர்மம் பேசுகிறவர்கள், தொழிலாளி முதலாளிக்குச் சமமானவன், அரசன் ஆண்டிக்குச் சமமானவன் என்று சொல்லுகிறவர்கள் கலை, கலாசாரம், மொழி ஆகியவற்றிலும் சமத்துவத்தைக் காட்ட வேண்டும்; ஏற்றத்தாழ்வை அகற்றுவதற்கு முன் வரவேண்டும். இது தான் இயற்கையான நியதி என்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்;

‘கௌரவ உபசபாநாயகர் அவர்களே, சென்ற பல ஆண்டுகளாகச் சாகித்திய மண்டலத்தார் பல பரிசுகளை அளித்தார்கள். சிங்களத்திலே பல துறைகளிலே பரிசுகள் அளித்தவர்கள் தமிழுக்குச் சில துறைகளில் பரிசளித்தார்கள். ஒரு சிலரின் முயற்சியால் தமிழுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது உண்மைதான். என்றாலும் உண்மையிலே தமிழ்ப் பொது மக்கள், தமிழ் அறிஞர்கள் திருப்திப்படக் கூடிய முறையிலே பரிசில்கள் வழங்கப்படவில்லை. ஏதோ ஒரு பட்டத்தைச் சாகித்திய மண்டலம் கொடுக்க இருக்கிறது. இது மூன்றாந்தரமான பட்டம். அதனை மூன்றாந்தரமான ஆளை, அல்லது கடைசித் தரமான ஒருவரைத் தேடிப் பிடித்து அவருக்குக் கொடுக்கப் போகிறார்கள், இந்த நாட்டிலே, சாகித்திய மண்டலத்திலே உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு உண்மையான தமிழ் அறிஞர்கள் யார், மதிப்புக்குரியவர்கள் யார் என்பதை அறிய முடியாமல்—அவர்களுக்கு மதிப்பைக் கொடுக்க முடியாமல்—போய்விட்டது. இது சாகித்திய மண்டலம் கடந்த காலங்களில் ஆற்றிய தொண்டாகும்.

### விந்தையான குற்றச்சாட்டு

‘எத்தனையோ இலட்சம் ரூபா பணத்தை ஆண்டு தோறும் செலவு செய்யும் கலாசாரத் திணைக்களத்தை எடுத்துப் பார்த்தால், அங்கே தமிழ் தெரிந்தவர்கள் தமிழ் அறிந்தவர்கள் யாருமில்லை என்பதைக் காண முடியும். தமிழ்மொழி தெரிந்த ஒருவர் அந்தத் திணைக்களத்திலே இல்லையென்றால், தமிழ் மொழியை தமிழ்க் கலையை, கலாசாரத்தை எப்படி அவர்களால் வளர்க்க முடியும்?

‘முன்னைநாள் அரசாங்கத்தின் கல்வி அமைச்சராக இருந்தவர், தாம் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் தமிழ்ப் பாடசாலைகளைப் பரிபாலிப்பதற்காக உதவிக் கல்விப் பணிப்பாளரொருவரை நியமிக்க இருந்ததாகவும், அதை இந்த அரசாங்கம் செய்யவில்லை என்றும் கூறினார். ஆனால், அவர் அமைச்சராக இருந்த காலத்தில் அவரது நிர்வாகத்தின் கீழிருந்த கலாச்சாரத் திணைக்களத்தில் தமிழ் தெரிந்த ஒருவரை அவர் வைத்திருக்கவில்லை. தான் அதிகாரத்தில் இருந்தகாலத்தில் தமிழ்தெரிந்த ஒருவரை தனது அதிகாரத்தின் கீழிருந்த கலாசாரத் திணைக்களத்தில் வைத்திருக்கவிரும்பாதவர், தாம் எண்ணியதை இந்த அரசாங்கம் செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டுவது விந்தையாக இருக்கிறது.

### பிரச்சினை என்ன?

‘கடந்த ஒன்பது ஆண்டு காலமாகத் தமிழருக்கும், தமிழுக்கும், தமிழ்க் கலைக்கும், கலாசாரத்திற்கும் சென்ற அரசாங்கம் செய்த கொடுமைகளை பல இடங்களில் எடுத்துக்கூறிய போதிலும் இதுபோன்ற பொறுப்பான இடங்களில் எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை. ‘கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்’ என்பதற்கிணங்க இருந்தோம். காலம் மாறியது, சந்தர்ப்பம் கிடைத்தது. அன்று சொன்னோம்; இன்று சொல்கிறோம். சமஉரிமை பெறும் வரையும் சொல்லிக்கொண்டே இருப்போம்.

‘மொழி கருதியும், சமயம் கருதியும் கலையிலும், கலாசாரத்திலும் பேதங் காட்டினால் இந்த நாட்டிலே ஒரு போதும் தேசிய ஒற்றுமை ஏற்படாது; கலையும் கலாசாரமும் வளரஇடமேற்படாது என்று கூற விரும்புகிறேன். மொழிப் பிரச்சினையை பட்டும் தீர்ப்பதனால் முழு ஒற்றுமை உண்டாகாது.

### கல்வி அமைச்சரின் பொறுப்பு

‘எனக்கு முன் பேசிய அங்கத்தவர் ஒருவர் குறிப்பிட்டார். இப்பொழுது அரசாங்க உத்தியோகத்தவர்கள் சரிவர நடப்பதில்லை; கொழும்புக்கு அனுப்பும் கடிதம் கண்டிக்குப் போகிறது, கண்டிக்கு அனுப்பும் கடிதம் கொழும்புக்கு வருகிறது என்று. இதற்குக் காரணம் யார் என்று கேட்டார். நான் அவரைக் கேட்க விரும்புகிறேன், இவற்றுக்கெல்லாம் பொறுப்பாளர் யார்? முந்திய அரசாங்கமே இதற்குக் காரணம். இந்த நாட்டிலே, பகைமைச் சிங்களவர்கள் என்றும், தமிழர்கள் என்றும் முஸ்லீம்கள் என்றும் கத்தோலிக்கர்கள் என்றும் பௌத்தர்கள் என்றும் பிரிக்கும் நிலையில் அரசாங்கம் நடந்த காரணத்தினாலே தான் இன்று ஒன்றுமே நடைபெற இயலாமல் இருக்கின்றது. எனவே சென்ற காலத்தில் படித்த பாடங்களைப் பயன்படுத்திக்கொண்டு இந்த நாட்டிலே மக்களிடையே ஒற்றுமையையும், நல்லெண்ணத்தையும் வளர்க்க வேண்டுமானால், கலையையும் கலாசாரத்தையும் வளர்ப்பதில் எத்தகைய வேறுபாடுமில்லாமல் செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இதைச் செய்ய முன்னைய சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் தவறி விட்டது என்று நான் குற்றஞ் சாட்டுகின்றேன். நான் இது சம்பந்தமாகக் கூட்டரசாங்கத்தைக் குறை சொல்லவில்லை. இரண்டு, மூன்று மாத காலமாகத் தான் அவர்கள் இவர்களுடன் சேர்ந்திருந்தார்கள். மொழி, இன, மத வேறுபாட்டை வளர்த்து, வகுப்புவாதத்துக்கு வித்திட்ட சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்துடன் சேர்ந்த காரணத்தினாலே தான் அவர்களும் அழிந்தொழிந்தார்கள். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டே, சாகித்திய மண்டலம் இனிமேலாவது சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் எத்தகைய பேதமும் இன்றி நல்ல முறையில் பணியாற்றுவதற்கான பொறுப்பினைக் கௌரவ கல்வி அமைச்சரவர்கள் ஏற்றிருக்கிறார்கள்.

### கவிஞர்கள்

‘பொதுநல நாடுகளின் கலை விழாவுக்காகச் சிங்களப் புலவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியதாக அண்மையில் பத்திரிகைகளில் வெளிவந்த ஒரு செய்தியை எல்லோரும் படித்திருப்பார்கள். அதற்குத் தமிழர்கள் ஒருவராவது தெரிந்தனுப்பப்படவில்லை. ... கவிஞர்கள் தெரிந்தனுப்பப் பட்டிருக்கி றார்கள். மூன்று பேர்களை அல்ல, முப்பது பேர்களை அனுப்பினாலும் எங்களுக்குக் குறையில்லை. எங்களுக்குள்ள ஒரேயொரு குறை அக் குழுவில் தமிழ்ப் புலவர் ஒருவராவது இடம் பெறவில்லை என்பது தான். இக்குறை நீக்கப்பட வேண்டும் என்பதே எங்களது விருப்பம். இனிமேலாவது, இத்தகைய குறைகளுக்கு இடம் கொடுக்காமல் சாகித்திய மண்டலத்தை நல்ல முறையில் அமைத்து நடத்த வேண்டும். கௌரவ அமைச்சருடைய திருத்தத்தில் கூட, பழைய மரபைத் தழுவித் தான் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு திருத்தப் பிரேரணையைக் கொண்டு வருவதற்காக நான் அதை என்னுடைய கட்சியின் பாராளுமன்றக் குழுவிற்குச் சமர்ப்பித்திருக்கிறேன். இத் திருத்த விரைவுச்சட்டம் குழு நிலையில் ஆராயப்படும் பொழுது நான் அத்திருத்தத்தை மொழிவேன்.

‘எனவே, கௌரவ அமைச்சரவர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கும் இத் திட்டத்தை வரவேற்று, சென்ற காலங்களில் இந்நிறுவகம் தமிழருக்குச் செய்த துரோகங்களையெல்லாம் நீக்கிநல்ல முறையில் இதனை இயங்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், இரண்டு இன மக்களும் சமாதானமாக வாழ்வதற்கு வேண்டியவற்றைச் செய்ய அமைச்சர் துணிந்து முன்வர வேண்டும்.’

# தமிழ் மொழி நிர்வாகத்திற்கு தயாராகும் திணைக்களங்கள்

## தனிப் பகுதி நிறுவி தீவிரப்படுத்த முயற்சி

அரசாங்க திணைக்களங்களில் தமிழ் மொழி நிர்வாகம் குறிப்பிடக் கூடியளவிற்குமுன்னேறி வருவதாக அறியப்படுகிறது. பெரும் பாலான திணைக்களங்களில் தமிழ் மொழி நிர்வாகத்திற்கென தனிப்பகுதிகள் நிறுவப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை தமிழ் மொழி நிர்வாகத்திற்கு வசதி செய்யப்படாத திணைக்களங்களில் விரைவில் அவ்வசதிகள் செய்யப்படுமென்று நம்பப்படுகிறது. தமிழ் மொழியிலான அலுவல்களை விரிவுபடுத்தும் பொறுப்பு தமிழ் மக்கள் கையிலேயே தங்கியுள்ளது.

கூட்டரசாங்க காலத்திலும் அதற்கு முந்திய காலங்களிலும் தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்கதிணைக்களங்களால் அனுப்பப்பட்ட பெரும் பாலான கடிதங்கள் தனிச்சிங்களத்திலேயே இருந்து வந்தன. சிலதிணைக்களிலிருந்து மட்டும்சிங்களக் கடிதங்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்புக் கொடுத்திருந்தன. இந்த நிலைமை இன்றும் நீடித்த பொழுதிலும், எழுதிய மொழியிலேயே கடிதங்களைப் பெறுவதற்கான வசதிகள் செய்யப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் நிலவிய தனிச் சிங்களக் கெடுபிடி நீங்கி நிர்வாகத்தில் தமிழ் மொழிக்கு சமத்துவம் கொடுப்பதற்கான முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டன எனத்தெரிகிறது. சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் இருந்த சகல வடிவங்களையும் அழித்து விட்டு, வருமானவரித் திணைக்களத்திற்கான சகலபடிவங்களும் மும்மொழியிலும் அச்சிடப்படுவதாக அவ்வட்டாரங்களிலிருந்து செய்தி கிடைத்துள்ளது.

வரிசெலுத்துபவர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தமிழில் தொடர்பு கொண்டால் அவர்கள் சம்பந்தப்பட்ட சகலவிபரங்களும் தமிழிலேயே பதிவு செய்யப்படுமெறதாம். அவர் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கவனிப்பதற்கு தமிழ் ஊழியர்களே பொறுப்பாக இருக்கவேண்டிய நிலை இதனால் உருவாக்கப் படுகிறது.

வரிசெலுத்தும் ஒவ்வொரு தமிழ் வரியிறுபாளர்களும் தங்கள் தொடர்புகளைத் தமிழில் வைத்துக் கொண்டால்உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் எழுதுவினைஞர்களின் சேவை தேவைப்படும் என்றும் ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ்த் தட்டெழுத்தாளர்களைப் புதிதாக நியமனம்செய்யவேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைச் சேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் கூறினார்.

## முகத்தின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் பூதச் சத்துக்கள் யாவும் எரிந்து போகின்றன. நரம்புகளின் கடமைகளில் தமுக்கம் ஏற்பட்டு விடுவதனால் எக்காரியத்தைச் செய்யவும் மனிதன் இயலாதவனாகிவிடுகிறான். பொலிவோடு இருக்க உடல் மெலிவடைந்துவிடுகிறது. சிந்தனை செய்யவும் முடியாத நிலையினை அவன் எய்துகிறான். அவன் செயல்கள் குன்றி சோம்பல் தன்மை அடைகிறான். சுறுசுறுப்பு மறைந்து பல ரோகங்களையும் அவன் உடல் வருந்தி அழைத்துக் கொள்ளுகின்றது.

மனதில் கவலை படிந்துவிட்டதும் முகம் அதனைப் பிரதிபலித்துக்காட்ட ஆரம்பித்து விடுகிறது முகத்தைச்சிராக்க எத்தனை செயற்கைக் களிம்புகளை உபயோகித்தாலும் எதுவும் செய்ய முடியாது. ஆகவே கவலைகளை உள்ளத்தில்தேக்காமல் இருப்பதுவே முகத்தின் அழகைப் பாதுகாக்க உரிய ஒரே ஒரு வழியாகும்.

## ‘கவலை என்பது என்ன’

அடுத்தவாரம் ஆராய்வோம்


**ஜீ. சீ. ஈ. (சா. த.)**

வினாவிடை பயிற்சிக் கோவைகள்:

| | |
|---|---|
| ● தமிழ் பாஷை | 5-00 |
| ● எண் கணிதம் | 5-00 |
| ● குடியியல் | 5-00 |
| ● உடனலவியல் | 5-00 |
| ● சரித்திரம் | 5-00 |
| ● இஸ்லாம் | 5-00 |
| ● பொது அறிவும் விவேகமும் | 5-00 |

101 கட்டுரைகள் ரூ. 7-50
தபால் செலவு -/50

**சர்வகலாசாலை போதனா கழகம்**
540, காலிதானை வீதி,
கொழும்பு.
த. பெ. 1079.




**‘மாயஜோதி’ ஊதுபத்திகள்**

“பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை”
விரும்புவது “மாய ஜோதி” ஊதுபத்திகளே!
ஏன்?

★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் ‘மாய ஜோதி’
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றிஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மானம்

ஐயிட்டி - இராசதுரை

கைம்பெண் மீனாட்சியின் நினைவில் பணக்கார வைத்திலிங்கம் ஒரு தெய்வமாக வந்து காட்சி கொடுக்கின்றார். மீனாட்சியின் இதயம் அவருக்கு ஆயிரம் தடவை நன்றி சொல்லுகிறது.

வயித்திலிங்கம் மீனாட்சியின் நினைவில்பேசுகின்றார். 'மீனாட்சி...! இந்த ஊரடங்குச்சட்ட நேரத்தில் நீ ஒரு குமர் பிள்ளையையும் இந்தக் கோட்டில் வீட்டிலே தனியாகவைச்சுக் கொண்டு எப்படி துணிஞ்சிருக்கிறாய்....... ராத்திரி நேற்று ராத்திரியெல்லாம் ஆமிக்காரங்கள் குமர்பிள்ளையள் இருக்கிற வீடு வீடாய் உள்ளட்டு செய்த தொந்தரவுகளெல்லாம் உனக்கும்தான் நல்லாய் தெரியுமே ...... நீ தான் வாழ்ந்து கெட்டு நாளைக்கி சாகிறனி... இந்தக்குமர்ப் பிள்ளை நாளைக்கி ஒரு நல்லவன்ரை கையிலை போகப் போறது. ஒரு கெட்டகாலத்துக்கு ஆமிக்காரங்கள் உன்ரை இந்தக் கொட்டிலுக்கை வந்து உள்ளட்டு இந்தப் பெட்டையையும் தொட்டுப்போட்டா......? நீ என்ன மீனாட்சி செய்வாய்...? உன் மகள் என்ன செய்வாள்...? ஊர் என்ன சொல்லும்....? உலகம் என்ன சொல்லும் ......? அதுதான் இந்த ஆமிக்காறங்களின்ரை தொந்தரவுகள் முடியிறவரைக்கும் இரவுக்கு நீயும் மகளுமாக என்ரை வீட்டிலை வந்து தங்கிறது எல்லாத்துக்கும் நல்லது'.........'

மீனாட்சியின் நினைவிலிருந்து வயித்திலிங்கம் மறைந்து விடுகின்றார். மீண்டும் அவள் இதயம் அவருக்குப் பலதடவை நன்றி கூறுகின்றது.

'ஆமாம் வயித்திலிங்கம் எவ்வளவு தங்கமான மனுசர். அவர் செல்லுறது நூற்றிற்கு நூறு வீதமும் சரிதான். எனக்காகவும் என் மகளுக்காகவும் உருகுகிற ஒரு மனுசர் இந்த உலகத்திலே வயித்திலிங்கம் தான். வயித்திலிங்கத்திடம் பணமிருந்தாலும் நல்ல குணமுமிருக்கிறது. இந்தப்பட்டாளச் சாதியின்ரை கொடுமையைப் பாத்து நானா இந்த கொட்டிலுக்கையிருந்து பெறியிலே, அகப்பட்ட எலிபோல இரி முழிசி முழிசிப் பரிதவிக்க வயித்திலிங்கமும் தெய்வம் மாதிரி வந்து என் உள்ளத்திலே பாலை வார்த்தார். காசு உள்ளவங்களின்ரை இடத்திலே ஒன்று வந்திட்டா அதை எப்படியோ சரிப்படுத்திப் போடுவாங்கள். ஆனால் இந்த ஏழையின்ரை இடத்திலே அப்படி ஒன்று நடத்திட்டா.......?

மிலிட்டரி ஜீப்பின் பயங்கர இரைச்சல்...... பூட்ஸ் கால்களின் ஓங்கார ஒலிகள்... வீட்டிற்குள் பத்துப் பன்னிரண்டு பட்டாள வீரர்கள் ஓடிவருகின்றார்கள்...... வீட்டிற்குள் அல்லோல கல்லோலம்.........

மீனாட்சியின் மனப் பிரமை கலைகின்றது. அவள் நினைவில் மறுபடியும் வயித்திலிங்கம் தெய்வமாகக் காட்சி கொடுக்கின்றார்.

அன்றுபொழுதுமறைந்ததும் மீனாட்சியும் அவள் மகள் ரேவதியும் பணக்கார வயித்திலிங்கத்தின் வீட்டிற்கு இரவுத்தங்கலுக்குப் போகின்றார்கள். அன்றிரவு அந்த வீட்டில் உள்ள எல்லோரும் ஊரடங்குச்சட்ட வேளையில் நடந்து முடிந்த இராணுவ வெறியர்களின் சம்பவங்களைப்பற்றி பேசிப் பொழுது போக்கிவிட்டு நித்திரைக்கு ஆயத்தமானார்கள். வயித்திலிங்கம் மீனாட்சியின் மகள் ரேவதியை தாயற்ற தனது நான்கு பெண்பிள்ளைகளோடும் ஒரு அறைக்குள் படுக்கவிட்டுவிட்டு மீனாட்சியின் படுக்கைக்கு ஒரு தனிஅறையைக்கொடுத்து விடுகின்றார்.

இன்னொருவர் வீட்டிற்கு பட்டாளகாரர்களின் கொடுமைக்குப் பயந்து இரவுத் தங்கலுக்கு வந்த மீனாட்சிக்கு நித்திரையே வரவில்லை. வில்லங்கமாக கண்களை மூடி மூடிப்பார்த்தாள். நித்திராதேவி வர மறுத்தாள். அந்த ஊரடங்குச்சட்ட வேளையில் வெளியில் ஏதேச்சாதிகாரம் செலுத்திக்கொண்டிருந்த மிலிட்டரி ஜீப்புக்களின் பயங்கர இரைச்சல் மீனாட்சியின் இதயத்திற்குள்ளும் உறுமி இரைந்து ஒரு பயங்கர உலகத்திற்குள் அவளை அலைய வைத்துக்கொண்டிருந்தன.

இந்தக் கோட்டை போன்ற வீட்டிற்குள் எப்படி அந்தச் சனியங்கள் வரமுடியும்...அப்படித்தான் வந்தாலும் வயித்திலிங்கமிருக்கிறார்... வயித்திலிங்கத்தின் துப்பாக்கி இருக்கிறது...மீனாட்சி தனைக்குத்தானே மன ஆறுதல் கூறினாள்.

வயித்திலிங்கம் வீட்டுக் கட்டிலில் அங்குமிங்கும் புரண்டு உருண்டு படுத்தாள் மீனாட்சி. கட்டிலில் படுப்பது அவளுக்கு இது தான் முதற்தடவை. மனதிற்குள் அடிக்கடி மின்னி முழங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பயத்தினால் அந்தப் பஞ்சணையின் சுகத்தைக் கூட அவளால் அநுபவிக்க முடியவில்லை. மிருகவெறி பிடித்த ஒரு பெரிய பட்டாளக் கூட்டமே எப்படியும் நினைத்தது முடிக்க வேண்டுமென்று இறுக்கமாகத் தீர்மானித்து விட்டால்...வயித்திலிங்கத்தின் கோட்டைவீடு எம்மட்டு... வயித்திலிங்கம் என்ன செய்வார்...அவர் துப்பாக்கி என்னசெய்யும்...? மீனாட்சியினால் அதற்கு மேல் சிந்தித்துப் பார்க்கவே முடியவில்லை.

அவள் உடலும் உள்ளமும் பூகம்பமாக நடுங்கின. மிலிட்டரி ஜீப் வீட்டிற்குள்ளே வந்து நுழைந்து விட்டது போன்ற பயங்கரநினைப்பு. மீனாட்சி எழுந்தாள். வயித்திலிங்கத்தைக் கூப்பிட வேண்டும் போல் அவளுக்கு மன அவதியாயிருந்தது.

'பாவம்...தூக்க நேரம் அவர் தூங்கட்டுக்கும்... இந்த நேரத்தில் என் மனப்பயத்திற்காக நான் அவரைக் கூப்பிட்டால் அவர் என்னைத்தப்பாக நினைத்துக் கொள்ளப் போகின்றார்.' இப்படி நினைத்த மீனாட்சி மறுபடியும் போய் படுத்துக் கொள்கிறாள்.

மனதோடு எவ்வளவோ போராடி மனதை வேறு பாதைக்குத் திருப்பிவிடுகின்றாள். நித்திராதேவி மீனாட்சியின் கட்டிலருகே அன்ன நடை போட்டு வருகிறாள். மிலிட்டரி ஜீப்புக்கள் வயித்திலிங்கத்தின் வீட்டிற்குள் பறந்து நுழைகின்றன. வீட்டிற்குள் கிடந்த தளபாடங்களெல்லாம் நொருங்கிச் சிதறுகின்றன. வயித்திலிங்கம் ஓடுகின்றார். வயித்திலிங்கத்தின் பெண்களும் ரேவதியும் அறைக்குள் ஒளித்துக் கொள்கிறார்கள். மீனாட்சி படுத்திருக்கும் அறையின் கதவை ஒரு இராணுவ வீரன் பூட்ஸ் காலினால் ஓங்கி உதைகின்றான். கதவு படாரென்று பிளந்து விழுகின்றது. ஒரு இராணுவ வீரன் மீனாட்சியை அப்படியே கட்டிப் பிடிக்கின்றான் ...'ஆ... ஐயோ....விடு.....விடு.....'... மீனாட்சி திடுக்குற்று விழிக்கின்றாள்...கனவு...கனவு... அவள் மனதில் ஏதேதோ குழப்பங்கள் அவள் கட்டிலில் எழும்பி உட்கார்ந்திருந்தாள்; வெளியில் இரைந்து கொண்டிருந்த மிலிட்டரி ஜீப்புகள் அவள் இதயத்திற்குள்ளால் ஓடுவதுபோன்றபயத்தை அவளுக்கு வளர்கின்றன. டக் ...டக்... டக்...யாரோ கதவில் மெதுவாகத் தட்டும் ஓசை.

மீனாட்சியின் இதயத்தில் பயத்தீ சுவாலித்தெரிகின்றது. மெதுவாக லைட்டைப் போட்டுவிட்டு மீனாட்சி கதவை தயங்கித் தயங்கித் திறக்கின்றாள். மீனாட்சி அசந்தே போனாள். அவள் எதிரில்—

வயித்திலிங்கம் ஒரு மாதிரியாக நின்றுகொண்டிருந்தார். அவர் முகம் விகாரமாகவும் பயங்கரமாகவுமிருந்தது. ஒருவித வெறித்தன்மை அவர் முகத்தில் ஊழிக்கடலாக் குமுறிக் கொண்டிருந்தது. ஒரே நேரத்தில் பத்து இராணுவ வீரரைப் பார்க்கவேணடி வந்திருந்தாற் கூட மீனாட்சி இப்படிப் பயப்பட்டிருக்க மாட்டாள். வயித்திலிங்கமா இப்படி...?வயித்திலிங்கமா இப்படி...? மீனாட்சியின் இதயம் பலமுறை இப்படிக் கத்துகின்றது.

அடுத்த நிமிடம் மீனாட்சி வயித்திலிங்கத்தையும் இடறி வீழுத்திவிட்டு மகளையும் கூட்டிக்கொண்டு அக்கணமே அந்த ஊரடங்குச்சட்ட நேரத்தையும் பொருட்படுத்தாமல் வெளியேறுகின்றாள். மிலிட்டரி ஜீப்பின் இரைச்சல் வயித்திலிங்கத்தின் குமுறிக் கொண்டிருக்கும் இதயத்திலும் பலமாக விழுகின்றது.

வயித்திலிங்கம் சந்தோசப்படுகின்றார். மீனாட்சி தனக்குச் செய்த வேலைக்கு அவள் நல்லாகப் பட்டுத தொலைக்கப் போகின்றாளென்று வயித்திலிங்கம் தான் செய்ததையும் மறந்து சந்தோசப்பட்டு நடக்கப்போவதை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். ஜீப்வண்டி மீனாட்சிக்கும் ரேவதிக்கும் பின்னால் வந்து நின்றது. அந்தப் பொல்லாத மனிதரிலும்பார்க்க அந்த இராணுவ வீரர்கள் மீனாட்சிக்கு கேவலமானவர்களாக தெரியவில்லை. மீனாட்சி நடந்ததை அப்படியே அவர்களிடம் சொன்னாள்.

அந்த ஜீப்பிற்குள்ளிருந்த மூன்று நான்கு நல்ல மனம் படைத்த தமிழ் இராணுவ வீரர்கள் அதை சிங்களத்தில் மேலதிகாரிக்குச் சொன்னார்கள். அடுத்த சில நிமிடங்களில் மீனாட்சியும் ரேவதியும் அன்பாகவும் ஆதரவாகவும் அவர்களது கொட்டில் வீட்டிலேயே கொண்டு போய் விடப்பட்டார்கள். மானம் பறிபோன வயித்திலிங்கம் மறுநாள் இரவு ஊரடங்குச்சட்ட வேளையில் ஒரு பயங்கரத்திருப்பத்தில் போய் நின்று விரைந்து வந்த இராணுவ ஜீப்பிற்கு முன்னால் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.



**நரிகளுக்குப் பயந்து புலியின் குகையில் புகுந்ததுபோல் அவர்களது நிலை—**

**அவள் எதிரில்—**

**வயித்திலிங்கம் ஒரு மாதிரியாக நின்றுகொண்டிருந்தார்! மானம் பறிபோனது ஏதோ உண்மைதான்!**

**—யாருக்கு......**

## 32. சரோஜா...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தைரியமாகச் சமாளிக்க வல்ல சக்தியைக் குன்றினும் உயர்ந்த அவருடைய தீரம் எனக்குத்தந்து கொண்டிருப்பதை அன்றும் உங்களிடம் கூறினேன்; இன்றும் கூறுகின்றேன். நான் முன்பே கூறியிருந்தபடி என் கணவர் தீரருள் ஒரு தீரர்! 'தீரருள் ஒரு தீரர்' என்று ஏன் நான் அப்படிக்கூறுகின்றேன் என்றால், என்னைப் பற்றி நான் அவரிடம் கூறிய அந்த ஊமைப் பிறவி யெடுத்த உண்மை அத்தனை குரூரம் மிக்கது! என் கணவரைப்போன்ற ஒரு சத்தியவந்தர் எனக்குக் கணவனாக வாய்த்திருக்காமற்போயிருந்தால், அந்த ஊமைப் பிறவி எடுத்த உண்மை என்றுமே ஊமையாய் இருந்து என்னோடேயே அது மடிந்தும் விட்டிருக்கும்' அந்தப்பயங்கர உண்மையை உங்களுக்கும் கூறிவிட்டு அப்பால் என் கணவரின் மிகுதி வரலாற்றையும் சுருக்கமாகக் கூறிமுடித்து விடுகிறேன்!

"வாழ்க்கை நம் உள்ளத்தை விரிவு படுத்துவதை விட, இலக்கியம் நம் உள்ளத்தை மிகமிக விரிவுபடுத்துவதாக உள்ளது."

—எலியட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மொழி, கலை, கலாசாரத்துறைகளில் பேதங் காட்டும் வரை இந்நாட்டில் ஒற்றுமை என்ற பேச்சுக்கே இடமில்லை. மொழிப் பிரச்சினையை மட்டும் தீர்ப்பதனாலும் இந்நாட்டில் ஒற்றுமை ஏற்பட்டுவிடப் போவதில்லை. எதிர்க்கட்சியினர் இந்நாட்டில் தமிழுக்கு இடமில்லையென்று கூறுகிறார்கள். ஆனால் கடைசித் தமிழ் மகன் ஒருவன் இருக்கும் வரை தனது உரிமைக்காகப் போராடியே தீருவான்'

# 'சாகித்திய மண்டலம் சாதித்தது என்ன?'

# கலை, கலாசாரத் துறையில் பேதமை

## காட்டுவதை நிறுத்தவும்

## பாராளுமன்றத்தில் பண்டிதர் இரத்தினம்

இவ்வாறு சாகித்திய மண்டலச் சட்டத்தை திருத்துவதற்கான வரைவுச் சட்டத்தையொட்டி கடந்த 27ம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் திரு. கா. பொ. இரத்தினம் கூறினார்.

திரு. இரத்தினம் நிகழ்த்திய உரையின் விபரம் வருமாறு:

"சாகித்திய மண்டலச் சட்டத்தைத் திருத்துகின்ற வரைவுச் சட்டத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் கூறியதுபோல இச் சாகித்திய மண்டலத்தின் நடவடிக்கைகள் சென்ற பல ஆண்டுகளாகச் சிங்கள மக்களாலும் தமிழ் மக்களாலும், சிறப்பாக இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றவர்களால் பல கோணங்களிலிருந்தும் கண்டிக்கப்பட்டு வந்தன. சிங்கள இலக்கிய வளர்ச்சிக்கும் சிங்களக் கலை வளர்ச்சிக்கும் சிங்களக் கலாசார வளர்ச்சிக்கும் இந்தச் சாகித்திய மண்டலம் ஓரளவுக்குத் தொண்டு செய்திருக்கலாம். ஆனால், தமிழைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களைப் புறக்கணிக்கின்ற முறையில் சென்ற அரசாங்கத்தினால் தொடக்கிவைக்கப்பட்ட இந்த சாகித்திய மண்டலம் நடந்து வந்திருக்கின்றது என்பதை நான் கூற விரும்புகின்றேன். அவற்றுக்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம். நேற்று இங்கே பேசிய தொம்பே பிரதிநிதி (திரு. எப். ஆர். டயஸ் பண்டார நாயக்க) அவர்கள் கூறியது போல, ஒரு நாடு, ஓர் இனம் ஒரு மொழி, ஒரே கலாசாரம் என்ற நோக்கம்தான் சாகித்திய மண்டலத்துக்கும் இருந்திருக்கின்றது.

### போராட்டம் ஓயாது

'எனவே, இந்தச் சாகித்திய மண்டலத்தை மாற்றியமைக்கும் முறையில் அமைச்சர் அவர்கள் அதிகாரத்தைத் தாம் கையேற்பதை நாம் வரவேற்கின்றோம். எனினும் இந்த சாகித்திய மண்டலம் இதுவரை நடந்து வந்த முறையை நான் இங்கு எடுத்துக்காட்டுவது எனது கடமையெனக் கருதுகின்றேன்.

'ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி தொடங்கிய காலம் தொடக்கம் இந்தநாட்டிலே தமிழ் மொழி ஒதுக்கப்பட்டு வந்தது. நேற்றைய தினம் தொம்பேப் பிரதிநிதி அவர்கள் பேசும் போது, 'தமிழ் மொழிக்கு இந்த நாட்டிலே இடமில்லை, ஏதோ சில காலத்துக்கு மட்டும் சிறிது இடம் கொடுப்பதை நாம் விட்டுவைப்போம்' என்ற முறையில் பேசினார். ஆனால், இந்த நாட்டிலே தமிழ் மகன் கடைசி ஒருவன் இருக்கும் வரைக்கும் இதனை எதிர்த்தே தீருவோம் என்பதை அவருக்குக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

### பாகுபாடு வேண்டாம்

'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கலையையும் கலாசாரத்தையும் வளர்க்க நிறுவிய தாபனங்கள் பல. அந்த தாபனங்கள் பெரும்பாலும் தமிழை ஒதுக்குகின்ற முறையில் தான் இயங்கி வந்தன. அரசகரும மொழித் திணைக்களமென்றால் என்ன, கலாசாரத் திணைக்களமென்றால் என்ன, சாகித்திய மண்டலமென்றால் என்ன அவைகள் எல்லாம் தமிழை ஒதுக்குகின்ற முறையிலேயே இயங்கி வருகின்றன. இதனை நீக்கி, இந்தப் புதிய முறைப்படி அமைச்சர் அவர்கள், இந்த நாட்டிலே தமிழும் தமிழ்க் கலாசாரமும் தமிழ் இலக்கியமும் வாழ வழி செய்ய வேண்டும், இந்த முறையிலே அவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

'1956 ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் 1958 ஆம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத்தின் 7 ஆம் பிரிவிலே f என்ற பத்தியிலே பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. Two Representatives of the Tamil Community.

'நீதிமன்றத்திலே தமிழினம் என்று ஒன்றுள்ளதா என வாதாடப்பட்டதென அறிகிறோம். இச்சட்டம் தமிழினத்தைப் பிரித்துக் காட்டுகிறது. சிங்கள இனத்துக்கு 27 பிரதிநிதிகளும் தமிழ் இனத்துக்கு இரண்டு பிரதிநிதிகளும் என்ற முறையிலே இந்தச் சட்டம் முன்னர் ஆக்கப்பட்டுள்ளது. இதனை நீக்க வேண்டியது இந்தத்தேசிய அரசாங்கத்தின் கடமையாகும்.

### அமைச்சர் ஆவன செய்வார்

'இப்படியாக இன வேறுபாட்டுக்கு அடி கோலிய இந்தச் சாகித்திய மண்டலத்தின் சட்டங்களை மாற்றுமபடி பல தமிழ் எழுத்தாளர்களும் தமிழ் அறிஞர்களும் பல முறை கேட்டும் மாற்றம் எதுவும் நடைபெறவில்லை. ஆனால், இந்தத் தேசிய அரசாங்கம் தொடங்கியவுடன் இந்தச் சட்டத்தை மாற்ற முன் வந்தது பாராட்டத்தக்கதாகும். அமைச்சர் அவர்கள், தமிழ்ச் சமூகத்துக்கும் சிங்களச் சமூகத்துக்கும் இடையில் வேறுபாடில்லாமல் ஒரு நடுநிலைப் பண்போடு செயல் புரிவதற்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். எனவே, அவர் காலத்திலே இந்த இரண்டு மொழிகளுக்கிடையேயும் எந்தவிதமான பாகுபாடும் காட்டாமல், மொழி, இலக்கியம், கலை, கலாசாரம் ஆகியவற்றை வளர்க்க அவர் ஆவன செய்வார் என எண்ணுகின்றேன்.

### தமிழர்கள் மதிக்க[illegible]

'தமிழ் படித்த மக்களும் அறிஞர்களும் எவ்விதம் இந்தச் சாகித்திய மண்டலத்தை இதுவரை மதித்து வந்தார்கள் என்பதையும் நான் கூற கடமைப்பட்டிருக்கின்றேன். சிங்கள மக்கள் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தை எப்படி மதித்தார்கள் என்பதைப் பற்றி நான் இங்கு அதிகம் கூற வேண்டியதில்லை. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் அவர்கள் இந்தச் சாகித்திய மண்டலத்தை ஒரு சிறிதும் மதிக்கவில்லை என்றுதான் நான் கூற விரும்புகிறேன். தமிழ் தெரியாதவர்கள் அல்லது அரைகுறையாகத் தமிழ் தெரிந்த ஒரு சிலர் புகுகின்ற இடமாகத்தான் சாகித்திய மண்டலம் இதுவரை இருந்து வந்தது. இம்மண்டலம் நூல்களுக்கும் பரிசில்களை வழங்கியபோது கூடச் செம்மையான முறையில் தமிழ் நூல்களை ஆராய்ந்து பரிசில்களை வழங்கவில்லை. பரிசில்கள் கொடுக்கப்பட்ட சில நூல்களைச் சிறந்த நூல்கள் என்று தமிழ் மக்களோ தமிழ் அறிஞர்களோ போற்ற முடியாது. அரசியற் காரணங்களுக்காகவும், ஒரு சிலருக்கு மண்டலத்திலுள்ள தமிழ் உறுப்பினர்களோடு இருந்த தொடர்பு காரணமாகவும் சில நூல்கட்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இதன் மூலம் தமிழினுடை தரம் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மிகுந்த துக்கத்துடன் கூறக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். இந்த நிலையை மாற்றியமைக்க அரசாங்கம் உண்மையில் முன்வர வேண்டும்.

### தமிழ் தெரிந்தவர்கள் வேண்டும்

'இந்தச் சாகித்திய மண்டலம் சிங்கள மக்களுக்கு மாத்திரமன்றித் தமிழ் மக்களுக்கும் அவர்களுடைய கலை கலாசாரத்தை வளர்க்கின்ற ஒரு நிலையமாக இருக்க வேண்டும்.

'இந்த மண்டலத்தில் இன்று தமிழ் தெரிந்தவருவர் கூடக் கடமையாற்றுவதாகத் தெரியவில்லை. எவராவது இந்த மண்டலத்திற்குத் தமிழில் கடிதம் எழுதினால் அவர்களுக்குச் சிங்களத்திலோ அல்லது ஆங்கிலத்திலோதான் இன்று பதில் கிடைக்கின்றது. தமிழ் மொழியை, தமிழ் இலக்கியத்தை, தமிழ்க் கலைகளை, தமிழ்க் கலாசாரத்தை வளர்க்க இருக்கின்ற இம் மண்டலம் தமிழ் மக்களோடு அவர்களுக்குத் தெரியாத மொழியில் தொடர்பு கொள்ளும் அவல நிலை கடந்த காலத்தில் இருந்தது. இந்த விதமாக ஒரு நிலையை உண்டாக்கிக் கொண்டு தமிழ் மக்களுடைய மொழியையோ, கலைகளையோ, இலக்கியங்களையோ நாங்கள் அழிக்க விரும்பவில்லை [illegible] பொருந்திய இந்தச் சபையிலே இவர் கூறுவது வெறும் கேலிக் கூத்தென்றே நான் கூற விரும்புகின்றேன்.

### எமக்கும் உரிய இடம் வேண்டும்

'தமிழ் மக்கள் இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தவராக இருந்தாலும் அவர்கள் தங்களுடைய பங்கைக் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். சிங்களவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒருபடி அரிசி வேண்டும்; தமிழ் மக்கள் சிறுபான்மையினராகையால் அவர்களுக்கு ஒரு நாளைக்கு கால்படி அரிசி போதுமென்று சொல்லுகின்ற குருட்டுக் கொள்கையை கலையையோ கலாசாரத்தையோ மொழியையோ வளர்க்கும் துறையிலே நாங்கள் புகுத்தக் கூடாது.

'இட்லர், சார் போன்றோருடைய உளுத்துப் போன கொள்கையைப் பின்பற்றும் முறையிலே நேற்று இங்கு இந்நாட்டுக்கு ஒருமொழியே இருக்க வேண்டுமென்று கூறப்பட்டது. இந்நாட்டின் கலாசாரம் ஒன்றுதான் என்ற முறையில் முன்னாள் அரசாங்கத்தினர் செயலாற்றியிருக்கிறார்கள். மனித உள்ளம் படைத்த எந்தத் தமிழனும் ஏன் தமிழனாக இருக்க வேண்டியதில்லை; மனிதப் பண்புள்ள எவரும் இக் கொள்கையை மறுப்பர். மொழி வளர்ச்சித் துறையில் காட்டுகின்ற பாகுபாட்டை கலை, கலாசாரத் துறைகளிலெல்லாம் காட்டி, தமிழரை ஒதுக்கி அவர்களுடைய குரல் கேட்காமற் செய்த முன்னைய அரசாங்கம் அழிந்து போனதில் ஒரு வியப்புமில்லை.

### முன்னையவர்கள் கற்றபாடம்

'இந்நாட்டின் கலை, கலாசாரம் நல்ல முறையிலே வளர வேண்டும். சிங்கள மக்களுடைய கலையும் கலாசாரமும் நல்ல நிலையை அடைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவற்றைப் போலத் தமிழும், தமிழ் மக்களுடைய கலை, கலாச்சாரமும் வளர வேண்டும், நல்ல நிலையை அடைய வேண்டும். ஆகையால் இனிமேலாவது சாகித்திய மண்டலத்தில் தமிழ்க் கலை, கலாசாரத்துக்கு இடங் கிடைக்குமென்று நான் நம்புகிறேன். அப்படி இல்லாவிட்டால் சாகித்திய மண்டலமும் எங்களுக்கென அளிக்கும் பணம்கூட எங்களுக்குத் தேவையில்லை. இவர்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தில் பாதியை எங்களுக்கு வேறாகத் தந்தால் இத்தகைய ஒரு தாபனத்தைச் செம்மையான முறையிலே நாங்கள் நிறுவி, அதனை செம்மையாக நடத்துவோம்.

'முன்னாள் அரசாங்கம் இந்நாட்டுக்கு ஒரு பெரிய படிப்பினையைத் தந்திருக்கின்றது. ஒரு சிறுபான்மை இனமாகையால் தமிழ் இனம் அவர்களுக்குக் கிள்ளிக் கொடுப்பதைப் பெற்றுக் கொண்டாற் போதும், அவர்களுக்கென இந்நாட்டிலே எந்த உரிமையுமில்லை, அதிகாரமும் இல்லை என்று அந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் நடந்தமையால் இன்று விழுந்துவிட்டனர். இது ஒரு நாகரிகம் படைத்த நாட்டுக்குரிய செயல் அல்ல என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

### மொழித் திணைக்களம்

'ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி தோன்றிய பின்பு நிறுவப்பட்ட அரசகரும மொழித் திணைக்களம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திலிருந்த காலத்தில் அரசகரும மொழிகள் திணைக்களமாக இருந்தது. சிங்களத்தையும் தமிழையும் அரசகரும மொழிகளாகக் கொண்டிருந்தபடியால் 'அரசகரும மொழிகள் திணைக்களம்' என்று இருந்த இந்தத் திணைக்களம் ஐக்கிய தேசியக் கட்சியை அடுத்து வந்த சுதந்திரக் கட்சியினால் 'அரசகரும மொழித் திணைக்களம்' ஆக, சிங்களத்தை மட்டும் இந்நாட்டிலே பரப்புகின்ற திணைக்களமாக மாறியது. நேற்று கௌரவ தொம்பே அங்கத்தவர் எதிர்க்கட்சிச் சார்பிற் பேசும் போது 'நான் உங்களுடைய மொழி கலை வளர்வதற்குக் குறுக்கே நிற்கவில்லை. உங்களுடைய பாடசாலைகளில் அவற்றை

(9-ம் பக்கம் பார்க்க)


## இதனை வாசித்ததும்....

பரீட்சையில் தேறவேண்டும்—பட்டம் பெற வேண்டும்—பதவி உயர வேண்டும்—பணம் சேர வேண்டும்—படும் துன்பங்கள், துயரங்கள் பனிபோல் மறைய வேண்டும்—பண்பிலா எதிரியை முறியடிக்க வேண்டும்—பழிவாங்கும் கண், வாய் திருஷ்டிக்குப் பரிகாரம் காண வேண்டும்—பாசமிக்க வாழ்க்கைத்துணை அமைய வேண்டும்—பலநாள் குடும்பத் தகராறு சுமுகமாகத் தீரவேண்டும் என்று ஏதாவதொன்று உங்கள் உள்ளத்தில் எழும்!

அதனை நிறைவேற்றித் தர
எனக்கொரு கடிதமெழுதுங்கள்!

**பி. எம். திசாநாயக்க,**

மாந்திரிக கலாநிதி

கண்டி ரோட், கம்பளை.

போன்: 454.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதர் சட்டை கழற்றிய காமராஜர்




அங்கம் இரண்டு



## ஆகட்டும் பார்க்கலாம் என்பார் அதிசயங்களைச் செய்வார்

எழுதுவது:
**'ஈழத்தரசன்'**

புகழேணியின் உச்சத்தை அடைந்து விட்டவர் கலைவாணர். பணவருவாயும் அதிகம்; அத்துடன் பரோபகார சிந்தையும் சேர்ந்துள்ளமையினால் மக்கள் அவரை 'வள்ளல்' என்று புகழ்ந்துரைத்தனர்.

நினைத்த காரியத்தை நினைத்த மாத்திரத்தில் சாதிக்கக்கூடிய சகல வசதிகளையும் பெற்றிருந்த கலைவாணர் தற்கொலை செய்துகொள்ளவேண்டியகாரணம் என்ன நான் இருக்க முடியும் என்று வாசகர்கள் நம்மை நச்சரிக்கலாம்.

கலைவாணரைத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டிய காரணங்கள் பல உள. அவற்றைஅறிவதானால், கலைவாணரின் கடைசிக் காலத்தில் அவர் சார்ந்திருந்த கலை உலகம் எந்நிலையில் இருந்தது—அவருடைய தாயகமான தமிழகம் எப்படியிருந்தது— அந்நாட்டின் அரசியல் நிலை என்ன என்பதனையெல்லாம் நாம் அறிந்தாகவேண்டியிருக்கிறது.

தமிழ் நாட்டு கலைஞர்கள் மத்தியில் போட்டியும் பகையும் பொறாமையும் தலையெடுக்கத் தொடங்கியதனால் கலைஞர்களிடம் ஒற்றுமை சிதறிக்கிடந்தது. ஒரே கருத்துடன் இயங்கி, கலை உலகத்தின் வளர்ச்சிக்குட் பாடுபடவேண்டிய கலைஞர்கள் யாவரும் தத்தமக்கு ஒவ்வோர் கோஷ்டிகளை அமைத்துக்கொண்டு வேற்றுமைகளை வளர்க்க ஆரம்பித்தனர்.

திரை உலகம் ஒரே ஒரு விடயத்தில் மட்டும ஒற்றுமையாகவிருந்தது. அதாவது கலைவாணரின் வார்த்தைக்குக் கட்டுப்படுவது. கலைவாணர் கூறும் சொல்லுக்குக் கட்டுப்படாத எக்கலைஞரும் இருக்கவில்லை. அவரைப்பகைவராக எவரும் கருதவேயில்லை என்று துணிந்து கூறலாம்.

ஒருவன் பூரணத்துவம் பெற்றவனாக வேண்டுமானால், அவன் உலகில் மனிதனுக்காக விதிக்கப்பட்டுள்ள சகல இன்ப துன்பங்களுக்குள்ளெல்லாம் ஆட்பட்டாகவேண்டும் என்பது நியதி. இதனால்தானோ என்னவோ, கலைவாணர் கொலைக்குற்றவாளிக் கூட்டிலும் ஏறி சிறையிலும் இருந்தார். கலைவாணரின் அறிவொளி பரவத்தொடங்கிய பின்னர் நடைபெற்ற ஒரே ஒரு துர்ப்பாக்கியமான நிலை—'சிறை சென்றார்' என்பதைத் தவிர-வேறு ஏதாவது இருக்க முடியாது.

கலை உலகம் இப்படியிருக்கும்போது, தமிழகத்தின் அரசியல் நிலை மிகவும் மோசமாகக்கிடந்தது. தமிழகத் தலைவர்கள் அனைவரும் வேற்றுமையின் சின்னங்களாக விளங்கினர். பேசும் மொழியால், இனத்தால் ஒன்றுபட்டவர்கள் என்பதனைத் துளி கூட அவர்கள் ஞாபகத்தில் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. ஒருவரை ஒருவர் திட்டித்தீர்ப்பதில் காலத்தைக் கடத்தினர். தன்னிச்சையுடன் தன் கலை கலாச்சார மேம்பாட்டுக்கு உழைக்க முடியாது தமிழகம் தடுமாறியது.

கலைவாணர் காலத்தில் வாழ்ந்து அவருடன் நெருங்கி உறவாடிய கலைஞர்களும் அரசியல்வாதிகளும்தான் கலைவாணரைத் தற்கொலை செய்யத் தூண்டினர். ஆகவே தமிழக அரசியற் தலைவர்களையும் கலைஞர்களையும் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டியது நமது கடமையாகிறது.

தமிழ்கத்தின் முதல் அமைச்சராக அன்றிருந்த திரு. காமராஜ் அவர்களை முதலில் தரிசிப்போம்.

### காமராஜ தரிசனம்

கலைவாணர் மறைந்து சரியாக ஒருவருடம் பூர்த்தியான பின்னர் தமிழகம் சென்ற நமக்கு தமிழக அரசின் முதல் அமைச்சர் பதவியிலிருந்து திரு. கே. காமராஜ் அவர்களின் தரிசனமே முதன் முதலில் கிடைத்தது. நமது பயணத்தில் ஓரளவு அரசியலும் சேர்ந்திருந்தமையினால், அவருடன் எடுத்த எடுப்பிலேயே அரசியலைப்பேச ஆரம்பித்தோம்.

இலங்கை அரசியல் நிலையினை நாம் அவரிடம் எடுத்துக் கூறினோம். 1958 ம் ஆண்டு மேமாத இறுதியில் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி மாநாட்டைத்தொடர்ந்து ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களையிட்டும் தமிழரசுத் தலைவர்கள் தடுப்புக் காவலில் இருப்பதையிட்டும் அவரிடம்தெரிவித்தோம்.

'தான் ஆடாவிட்டாலும் தன் தசைஆடவேண்டாமா?' என்று நாம் ஒரு வினவைத் தூக்கிப்போட்டோம். 'ஆகட்டும் பார்க்கலாம்' என்ற பதத்தை அடிக்கடி உபயோகிக்கும் காமராஜ் அவர்கள் தமது கதர் சட்டையை அன்று துறக்கவும் துணிந்தார்.

'டெல்லி லெவலில் செய்ய வேண்டியதெல்லாம் செஞ்சிட்டோம். இதற்குமேல் நான் ஏதாவது செய்ய வேணுமானா, இந்த சொக்காயைக் கழற்றி விட்டுத் தான்செய்யவேணும்' என்று கூறிக்கொண்டே தமது கதர் சொக்காயை காமராஜ் அவர்கள் கழற்ற எத்தனித்தார். அருகிலிருந்த டி.. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் தடுத்தமையினால் அன்று காமராஜ் அவர்களின் கதர் சொக்காய் அவர் உடலோடு இருந்தது—இன்றும் இருக்கிறது.

இலங்கைத் தமிழர்களும் காமராஜ் அவர்களின் சகோதரர்கள் தானே. ஆகவே சகோதரபாசம் இல்லாதிருக்குமா? கடல் கடந்த சகோதரர்கள் கஷ்டமுறும்போது உள்ளம் துடிக்காமலா இருக்கும்? இருந்தாலும் காமராஜர் தமது உள்ளத்துடிப்பை அடக்கிக்கொண்டார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமது சொந்தக் கருத்தைத் தெரிவிப்பதானால், நிச்சயமாக, காங்கிரசையும் முதலமைச்சர் பதவியையும் துறந்தாகவேண்டுமே என்பதை விளக்கவே தமது கதர்சொக்காயை ஆகுபெயராக்கினர் திரு. காமராஜ்.

### முன்னிடம் கிடைத்தது

காமராஜ் அவர்களை அவருடைய இல்லத்தில் நாம் காணச் சென்றிருந்தபோது வீட்டு வாயிலில் பல நூற்றுக் கணக்கானவர்கள் பேட்டிக்காகக் காத்திருந்தனர். ஆனல் நாம் போனவுடனேயே முதலமைச்சர் தரிசனத்துக்கு நமக்கு முன்னதாகவேஇடம் தரப்பட்டது.

இத்தனைபேர் காத்திருக்கையில் எமக்கு முன்னிடம் கிடைக்கிறதே!— நமக்கு ஓரளவு தலைவீங்கியது. நடையில் மிடுக்கு ஒரு துளிகூடியது. அவ்வளவு தான்! உடனே எம்தலைக்கனம் மட்டம் தட்டப்பட்டது. கீழே நிலத்தில் கிடந்த விரிப்பிலே காலிடறி விழுந்து பூமாதேவியை முத்தமிடவிருந்த எம்மை அருகே நின்ற ஜனப் முகைதீன் காப்பாற்றிவிட்டார். அவருடைய முகத்தை அசடு வழிய ஒரு முறை பார்த்ததும் எஞ்சிக்கிடந்த கர்வமும் ஓட்டமெடுத்தது.

காலை எட்டுமணிக்கு எம்மை அழைத்து வரும்படி காமராஜ் அவர்கள், முதல் நாளே ஜனப் முகைதீனுக்கு தொலைபேசி மூலம் ஒப்புதலளித்திருந்தார். ஜனப் முகைதீன காமராஜ் அவர்களின் பால்ய நண்பர்.

தம் நண்பரால் ஒழுங்கு செய்யப்பட்டபேட்டி என்பதற்காகத்தான் முன்னமேயே பேட்டியளிக்க காமராஜ் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளார் என்று நாம் எண்ணினோம். ஆனல் அந்த எண்ணமும் நீடிக்கவில்லை. எங்களுக்கு காலை எட்டுமணி முதல் எட்டரைவரை நேரம் கொடுத்திருந்தார். ஏனையோரை அதன்பின்பு வரும்படி கேட்டிருந்தார். ஆனல் முதலமைச்சரைக் காண அவர்கள் முன்னலேயே வந்து காத்துக்கிடக்கும்போது யார்தான் என்ன செய்யமுடியும்.?

### 'ஆகட்டும் பார்க்கலாம்'

நிதான புத்தியுடையவர் காமராஜ். எடுத்த எடுப்பிலேயே எதையாவதுசாதித்துவிடவேண்டும் என்று அவாவுறும் வழக்கம் அவரிடம் கிடையாது. எந்தத் தலைபோற விடயமானலும் ஆறுதலாகச் சிந்தித்துச் செயற்படுபவர். எவ்வளவு அவசரமான பிரச்சினையை அவருடைய சகாக்கள் எடுத்துக் கூறினலும் 'ஆகட்டும் பார்க்கலாம்' என்றுதான் கூறுவார்.


வெறும் வார்த்தைகளை அடுக்கி மேடையில் அழகாகப் பேசும் ஆற்றல் அவருக்கு இல்லை. ஆனல் செயல்வீரர். திடீரென ஒரு செயலைச் செய்யமாட்டார். ஆனல் செயலில் இறங்கினல் எவர் தடுத்தாலும் ஓயமாட்டார்.

காமராஜ் அவர்களின் செயல்திட்டங்களை தமிழகம் தவிர்ந்த ஏனையபகுதிமக்கள் தான் அதிகமாகப் போற்றுகின்றனர். இதனல்தான் காமராஜ் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக முடிந்தது. காந்தி அடிகளும் பண்டிதர்நேருவும் காமராஜ் அவர்களைத்தங்கள் நம்பிக்கைக்குப் பாத்திபதையுடையவராகக் கொண்டாடினர்.

தமிழகத்துக் கிராமங்கள் இன்று நவீன மின்சார ஒளியில் திளைத்திருப்பதற்கு காமராஜரின் செயல் திட்டங்களே காரணமாகும். தமிழகத்தைப்போன்று வேறு எந்த இந்திய ராஜ்ஜியமும் மின்சாரம் பெறவில்லை, மின்சார உற்பத்திச் செலவும் தமிழகத்தில் வெகு குறைவு. காமராஜ் அவர்கள் காரியத்தில் கண்ணுயிருந்து எக்காரியத்தையும் செம்மையாக செய்து முடிப்பவர் என்பதனல்தான் மின்சாரத்திட்டங்கள் வெற்றிபெற்றன.

தமிழ் மட்டுமேபடித்தவர். அதிலும் அதிகம் பாண்டித்தியம் பெற்றவரல்ல. ஆங்கிலமும் இந்தியும் ஓரளவு புரியும். இவ்வறிவுடனேயே இந்திய அரசியல் வானில்

(13-ம் பக்கம் பார்க்க)



வான மண்டலத்தில் தொடர்ந்து எட்டு நாட்கள் சஞ்சரித்து, 121 தடவை பூவலம் வந்து சுகமாக பூமியை அடைந்த அமெரிக்க விண்வெளி வீரர்களான கோர்டன் கூப்பர், சார்ள்ஸ் கோர்னட் ஆகிய இருவரும் இப்படத்தில் காணப்படுகின்றனர். விண்வெளி யாத்திரையின் போது தாங்கள் பாவித்த கருவிகளையிட்டு பத்திரிகை நிருபர்களுக்கு இருவரும் முன்னதாகவே விளக்கம் கொடுத்தபோது பிடிக்கப்பட்டபடம் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் தியேட்டர்ஸ் அளிக்கும்

# சிற்பியின் செல்வன்

**தயாரிப்பு: விக்ரம் புரொடக்ஷன்ஸ்**

கலைஞன் ஒருவன், தன் சந்ததி வளர உருவாகும் ஒவ்வொரு உயிரையும் கலைக்காகவே அர்ப்பணிப்பான். இந்த நியதிக்கு உட்பட்டே, பார்வையினை இழந்துவிட்ட சிற்பக் கலைஞரான மல்லன்னு தன் மகன் ஜக்கன்னுவையும் ஓர் சிற்பக் கலை நிபுணராக்கிவிடுகிறார். அவனறிந்த சிற்பக் கலைக்கு உயிர்கொடுக்கும் ஓவியமாக அமைகிறாள் அவன் காதலி—பேரழகி மஞ்சரி.

மஞ்சரியின் அழகு மன்னன் கோபதேவனை மயக்குகிறது. மண்ணின் அழகு மன்னனின் ரசனைக்கு மட்டுமே என்ற எண்ணமுடைய அம்மன்னன் சூழ்ச்சி செய்து காதலர்களைப் பிரிக்கிறான்.

பிரிவாற்றுமை என்னும் தியால் பொசுங்கும் கலைஞனிடத்திலிருந்து கற்பனையும் கலையும் பொங்கி எழும் என்பதனைக் காட்ட, சென்ன கேசவப்பெருமானின் ஆலயத்தை நிர்மாணிக்கும் பணி ஜக்கன்னுவுக்குக் கிடைக்கிறது. உள்ளத்தில் மஞ்சரியின் உருவை நினைத்தே சிற்பங்களை அழகுடன் வடிக்கிறான் சிற்பி. விதி வசத்தால் ஜக்கன்னுவின் மகன் டங்கன்னு பாட்டனரான மல்லன்னுவுடன் சேர்ந்து சிற்பக் கலை பயின்று வளருகிறான். பாட்டனையும் தந்தையையும் மிஞ்சிய பூரணத்துவமான கலைஞன் என்பதனை இறுதியில் நிலை நாட்டுகிறான். கலைஞன் ஒருவன் தன் கலை முதிர்ச்சியால் மமதை கொண்டால், வீழ்ச்சி நிச்சயம் என்பது, டங்கன்னு தன் தந்தையை வெற்றி கொள்ளும் கட்டத்தில் நிரூபணமாகிறது.



ராமானுஜாச்சாரியாருடைய காலத்தில் சென்ன கேசவப் பெருமாள் கோயில் எழுந்த முறையினையும், அக்காலக் கலைஞர்கள், மன்னர்கள் முதலியோரையும் வைத்து உருவாக்கப்பட்டது இக்கதை. முன் பாதியை விட பின்பகுதி விறுவிறுப்புடன் செல்கிறது. இரசிக்க முடியாத நகைச் சுவைக் கட்டங்களை நீக்கிவிட்டால் படம் உயர்ந்த ரகமானது என்பதற்கு ஐயமில்லை. அழகு வர்ணத்தால் படத்தின் கவர்ச்சி சற்று மேம்பட்டே தோன்றுகிறது.

மஞ்சரியாக சரோஜா தேவி தோன்றுகிருர். ஓரளவு நடனங்களையும் ஆடி ஒப்பேற்றிவிட்டார். ஜக்கன்னுவாக வரும் கல்யாண் குமார் நன்றாகவே நடித்திருக்கிறார். நாகையாவின் நடிப்பும் பரவாயில்லை. தெலுங்கு மூலமானதனால் தெலுங்கு நகைச் சுவையாளர்களின் சேட்டைகள் நமக்கு வாய்ப்பாகத் தோன்றவில்லை. தமிழில் மொழி பெயர்க்கும் போது இந்நகைச் சுவையை நீக்கியிருந்திருந்தால் விசேடமாகவிருந்திருக்கும்.

கலைஞர்களையும் கலா ரசிகர்களையும் கவரத்தக்க பசி அம்சங்களைக் கொண்ட இப்படம் சகலரையும் பரவசப் படுத்தும் என்பதில் ஐயமில்லை.

—நாதன்.



## கலை விழா

கொழும்பு பம்பலப்பிட்டி ரோமன் கத்தோலிக்கதமிழ்ப் பாடசாலை வளர்ச்சி நிதிக்காக கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் எம். திருச்செல்வம் அவர்களின் தலைமையில் இம்மாதம் 25ம் திகதி பம்பலப்பிட்டி சென். பீற்றஸ் கல்லூரி மண்டபத்தில் ஒரு கலை விழா நடைபெற விருக்கின்றது.

மேற்படி விழாவில் பரத நாட்டியம், மயில் நடனம், குறத்தி நடனம், வட இந்திய தீப நடனம், முருகன் வள்ளி நகைச்சுவை, மானும் சீதையும், ஆங்கில சிங்கள நிகழ்ச்சிகள், என்பனவற்றுடன், ஒரு சமூக நகைச்சுவை நாடகமும் இடம் பெறும்.

## ஆசிரிய மாணவர் தமிழக சுற்றுலா

மட்டக்களப்பு அரசினர் தமிழ் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் தமிழக சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். துணை அதிபர் திரு. ஞானசம்பந்தர் தலைமையில் புறப்பட்டுள்ள இக்குழுவில் உடற்பயிற்சிப் பேராசிரியர் திரு. தியாகராசா, இசை ஆசிரியர் திரு. ஆறுமுகம் பிள்ளை முதலியவர்களும் அடங்கியுள்ளனர். சுமார் மூன்று வாரங்கள் இவர்கள் தமிழகத்திலுள்ள முக்கியமான இடங்களுக்கெல்லாம் சென்று பயன் பெற்றுத்திரும்புவர் என்று தெரிகிறது.

போல் தான் நமக்கும் எழுகின்றன. நமது ஆவலைப் பூர்த்தி செய்ய, எதிராஜ் மூவீசார் தயாரிக்கும் 'கமலம்' படம் திரைக்கு வர வேண்டும்.

துரிதமாகத் தயாராகி வரும் கமலத்தில் கோவிந்தசாமியாக வருபவர் பாலையா. சிதம்பரம்—எஸ். வி. சுப்பையா. செல்வனாக நடிப்பவன் மாஸ்டர் ராஜமோகன். நீண்ட நாட்களுக்குப் பிறகு சிதம்பரத்தின் மனைவியாக வருகிறார் எம். என். ராஜம். பி. எஸ். பாரதி எழுதிய கதை இது. தட்சணாமூர்த்தி இசை அமைக்கிறார். தசரதராமையா டைரக்ட் செய்கிறார். வெங்கடேஸ்வரா சினி டோனில் மேற்படி காட்சி படமாக்கப்பட்டது.

## கதர் சட்டை...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

மங்கா ஒளியாகச் சுடர்விடுகிறார் காமராஜர்.

### போட்டோப் பிரியர்

புகைப்படம்பிடிப்பதானால் சிறுகுழந்தைகள் துள்ளிக் குதிக்குமல்லவா? காமராஜ் அவர்கள் ஒரு 'போட்டோப் பிரியர்'. படம் பிடித்துக் கொள்ள அவருக்குள்ள விருப்புப் போன்று தமிழகத்தில் வேறு ஒரு தலைவருக்கும் ஆசை கிடையாது.

இலங்கைத் தமிழர் பிரச்னைகளைப் பற்றித் தமிழ் நாட்டு அரசியற் தலைவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்று நாம் நடாத்திய பரிசோதனையில் முதல் பார்ட் சார்த்தி திரு. காமராஜ் அவர்களே! அவரைப்பரிசித்ததில் காங்கிரசின் கண்ணேட்டம் நமக்குப் புலப்பட்டது.

தமிழக அரசு-தமிழிலேயே ஆட்சி நடாத்தினாலும், தமிழர்களையே சட்டம் செய்வோராகக் கொண்டிருந்தாலும், தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் தன்னிச்சையுடன் எதையும் சாதிக்க முடியாது. தமிழக ஆட்சியின் மூக்கணாங்கயிறு டெல்லியிலிருக்கிறது என்பதை உணர்ந்தோம். திரு. காமராஜ் போன்றவர்கள், தனிப் பட்டவகையில், கடல்கடந்த தமிழர்களுக்காக உள்ளத்துள்ளே அனுதாபப்படலாமே தவிர, உணர்ச்சி உதட்டளவுக்கும் வரமுடியாது என்பதனைக் கண்டோம்.

காமராஜ் அவர்களின் தரிசனம் கிடைத்து அடுத்த நாளே சென்னை நுங்கம் பாக்கம் அவனியு ரோட்டில் அறிஞர் அண்ணாவை நாம் காணச் சென்றபோது துடைப்பக்கட்டு வரவேற்புக்கிடைத்தது.




## கர்ண பரம்பரை

உயிர் பிரிவதற்கு முதல் நாளன்று கலைவாணர் மருத்துவ மனைக் கட்டிலில் இருந்தபடி ஓரளவு கலகலப்பாக தமது உறவினர்களுடன் காணப்பட்டார். அவருடைய இறுதி காலம் நெருங்கிவிட்டதனை உணராத ஒரு வறியவர் கலைவாணரின் அறைக்குள் எப்படியோ நுழைந்து விட்டார். மிகவும் கஷ்டமான நிலையில் தாம் இருப்பதாயும், தனது



மகளின் திருமணத்துக்கு செலவிட பொருளின்றி வாடுவதாயும் தெரிவித்தார். அப்போது அங்கே கூடியிருந்தவர்கள் அவ்வறியவரை விரட்ட முயன்றனர்.

கலைவாணர் அவரை பரிவோடு அழைத்து 'அப்பா எங்கிட்ட இப்ப பணம் எதுவுமே இடையாது. ஆனால் இந்தா இருக்கிற வெள்ளி கூசாவை எடுத்திண்டுபோய் வித்துச் செலவு செய்' என்றார். வறியவர் மருண்டார். கலைவாணர் கூசாவை தன் கைகளாலேயே எடுத்து அவரிடம் கொடுத்து, 'மதுரம் வருமுன்னர் எடுத்துண்டு போயிடு' என்று கூறி அனுப்பி வைத்தார்.

## இளமை தரும் மருந்தை பறிகொடுத்தார் கிழவர்

'பிடி அவனை' என்ற சப்தத்துடன் விழுந்தடித்துக்கொண்டு ஓடுகிறார் ஒரு முதியவர். அவருக்கு முன்னால் ஒரு சிறுவன் ஓடிக்கொண்டிருக்கிறான். அவனுடைய கையிலே ஒரு சிறு புட்டி இருக்கிறது.

முதியவரால் அதிகம் ஓட முடியவில்லை. மூச்சு வாங்க, களைப்படைந்து ஒரு மரத்தடியில் இருந்துவிட்டார். இருந்தார் என்று கூறுவதை விட விழுந்தே விட்டார் என்று கூறலாம். ஏனெனில் சகிக்க முடியாத வேதனையால் அவருடைய முகம் வெதும்பிப் போய்க் கிடந்தது.

அவருடைய உடையிலிருந்தும், மார்பிலே புரண்ட பவுண் சங்கிலியிலிருந்தும் அவர் ஒரு பணக்காரர் என்பதை அறிந்து கொள்ளலாம். பணக்காரரான அவர் ஒரு சின்னஞ்சிறு பையனைத் துரத்திக் கொண்டு ஓடுவதேனோ?

மரத்தடியில் கிடப்பவர் பெயர் கோவிந்தசாமி. அந்தக் கிராமத்திலேயே பெரும் பணக்காரர். அவருக்கு வயது போவதும், உடல் தளர்ச்சியடைவதும் மனதை வாட்டிய பெரு நோய்கள் ஆகும். இந்நோய்களை நீக்கி நித்திய இளைஞராகவிருக்க ஆசைப்பட்டு, மேல் நாட்டிலிருந்து அநேக பொருட் செலவில் ஒரு மருந்தை எடுத்து வைத்திருந்தார்.

அதே கிராமத்திலுள்ள சிதம்பரத்தின் மனைவிக்கு வருத்தம் கடு[illegible] னால் இம் மருந்[illegible] சம் தரும்படி [illegible] வேண்டினர். கோவிந்தசாமி மறுத்துவிட்டார்.

'இந்த மருந்தை நான் மட்டுமே சாப்பிட்டு பல வருடங்கள் இளமையோடு இருந்து சந்தோஷமாக வாழப் போறேன்' என்று கொக்கரித்துவிட்டு மேசைமேல் மருந்துப் புட்டியை வைத்துவிட்டுத் திரும்பினாரோ இல்லையோ, மருந்துப்புட்டி மாயமாக மறைந்துவிட்டது.

செல்வம் என்ற சின்னஞ் சிறு பயல்தான் மருந்தை எடுத்துக் கொண்டோடினான். அவரால் அவனைப் பிடிக்க முடிந்ததா? மருந்துப் புட்டிக்கு என்ன நேர்ந்தது? சிதம்பரத்தின் மனைவி என்ன ஆனாள்? என்ற கேள்விகள் எல்லாம் உங்களைப்



[illegible] கலைக்கு புத்துயிர் கொடுத்தவர் மட்டுநகர் மாஸ்டர் சிவலிங்கம். அதன்பின் இன்று பல வில்லுப் பாட்டுக் குழுவினர் நாடெங்கும் தோன்றி [illegible] செல்வன், முத்தமிழ்க் கலா இரத்தினம், சபா—சதாசிவம் குழுவினர் இதுவரை 28 வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தி புகழீட்டிக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. 'மேல் கழுவிய' குமரன்!

(2-ம பக்கத் தொடர்ச்சி)

கவிதையை இரசிப்பதற்கு கவிதைக்குரிய இலக்கணம் தெரிந்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லை. எந்தக் கவிதை படிக்கும்போது நம் உள்ளத்தைத் தொடுகின்றதோ அப்போதே அது கவிதைக்குரிய அந்தஸ்தைப் பெற்று விடுகின்றது! என்னைப் பொறுத்தவரை இது ஒரு சிறந்த கவிதைதான் என்பதைச் சற்று முன்னால் நான் கண்டுகொண்டேன்.

எப்படி?

'நீங்கள்தான் கவிதையைப் படித்ததும் வெட்கித் தலைகுனிந்து விட்டீர்களே! அந்த ஓர் உணர்ச்சிப் பிரதிபலிப்பே இந்தக் கவிதைக்கு நல்ல பெறுமதியான முத்திரையாக அமைந்து விட்டதே!'

குமரனுடைய வாதத் திறனைக்கேட்டு என் மனம், 'என் கணவருக்கேற்ற தரமான நண்பர்தான் இவர்!' என்று எடை போட்டு வியந்தது.

'இந்தக் கவிதையின் தந்தை யாரோ?'—நான்தான் துணிந்து கேட்டேன்.

'தந்தை என்னவோ அடியேன்தான்; ஆனால் உண்மையில் இந்தக் கவிதைக் குழந்தையைப் பிரசவிக்கும்படி என்னைப் பணித்தவள் ஒரு பெண்—நீங்கள்!'

நல்ல வேடிக்கை! இலக்கியமும் வாழ்க்கையும் ஒன்று என்ற யதார்த்த வாதம் இனி அடிபட்டுப்போக வேண்டியதுதான்!

'ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள்?'

'வாழ்க்கையிலென்றால் பெண்களுடைய பிரசவ வேதனைக்கு முழுக்க முழுக்கக் காரணமாக இருப்பவர்கள் ஆண்கள்! ஆனால் உங்களுடைய இலக்கியத்திலோ விவகாரம் தலைகீழ்! பெண்ணாகிய நான் உங்களுக்குப் பிரசவவேதனையை ஊட்டி இதோ ஒரு "குழந்தை"யையும் பெறச் செய்திருக்கின்றேனே!'

என்னுடைய இந்தப் பதில் சற்று வாயாடித்தனமானதென்பதை இப்பொழுது நான் நன்கு உணருகின்றேன். குமரன் என்னுடன் நெருங்கிப் பழகுவதற்கும்; காரணமாக என்னுடன் 'எதைப்பற்றி'யும் கதைப்பதற்கும் 'திரை நீக்கம்' செய்து வைத்த பெருமை அன்றைய என்னுடைய வாயாடித்தனமான பதிலையே சாரும்!

அப்புறம்?

எல்லாம் வழமைப் பிரகாரம்தான்; ஒன்றும்புதுமை இல்லை! சூழல் என்ற தணல் கொண்டு உணர்ச்சி என்ற நீரைச் சூடாக்கி ஒரேயொரு நாள் 'மேல்கழுவி'க்கொண்டார் குமரன்!

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், என்னையும், அவரையும் தம்பதியாக்கி விடுவதில் எங்களைவிட அவசரப்பட்டவர் குமரன்தான்!

எனக்கும், அவருக்கும் திருமணம் முடிந்த ஒருமாத காலத்துள் காரியங்கள் மிகத் துரிதமாக நடைபெற்றன. அந்த ஒருமாத இடைவெளியில் என்னையும் அவருடைய மலையகப் பாடசாலைக்கே மாற்றிக்கொண்டு இருவருமே மலையகத்தில் குடிபுகலானோம். ஊரில் நின்ற காலத்தில் அவர் தம்முடைய நண்பன் குமரனுடன் எந்த விதக் கசப்புமின்றி மிக அன்னியோன்யமாக நடந்துகொண்ட பாங்கினை இன்று நினைத்தாலும் என்னுள் வியப்பு மேலிடுகின்றது. எனக்கு அவர் அளித்த மன்னிப்பு என்னைச் சதா அரித்துக்கொண்டே இருந்தது. என் மனம் சாந்தியடைய வேண்டுமானால், ஒன்றில் அவர் என்னைத் தண்டித்தாக வேண்டும்; அல்லது நான் விட்ட பிழைக்குச் சமதையாக அவர் ஏதாவது தவறு விடவேண்டும் என்று என் மனம் அழுதது. என் மனத்தின் அழுகை நாங்கள் புதிதாகக் காலடி எடுத்து வைத்த அந்த மலையகத்தில் ஓயக்கூடியதான பலசந்தர்ப்பங்கள் வாய்க்கப்பெற்றன.

தாம் அதற்குள் பழகிப் பரிச்சயமாகியிருந்த மலைநாட்டு நண்பர்களையெல்லாம் எனக்கு நல்லமுறையில் அறிமுகம் செய்துவைத்தார் என் கணவர். அவ்விதம் அவரால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டவர்களில் தாமரகுமாரி என்ற சிங்களக்கன்னி முதன்மைபெற்று விளங்கியதற்குக் காரணம் அவளிடத்தில் பொதிந்து குலுங்கிய பேரழகுமட்டும் காரணமல்ல; நாங்கள் குடியிருந்த வீட்டுக்குப் பக்கத்திலேயே அவள் வசித்ததால், எந்த நேரமும் எனக்கு மனநிறைவோடு அவள் உதவி புரிந்து கொண்டு வந்ததும் ஒரு காரணம். இவ்விதம் என் கணவரால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டவர்களுள், எனக்கு மலைப்பைத் தந்த ஒருவரைப் பற்றியும் இங்கு நான் குறிப்பிடவேண்டும்.

செம்பட்டை மயிரும் வெள்ளைக்காரரின் மேனி போன்று சிவந்த நிறமும் கொண்ட ஓர் இளைஞரைக் காண்பித்து, 'இவர்தான் நம் தாமரகுமாரியின் ஒன்றுவிட்ட அண்ணன்; பெயர் அமரசூரியா' என்று என் கணவர் அந்தவிசித்திரமான மனிதரை அறிமுகம் செய்து வைக்கவும் ஆச்சரியத்தால் அப்படியே அதிர்ந்து போனேன் நான். 'தாமரகுமாரிக்கு இப்படியொரு பூனைக்கண் அண்ணன் எப்படி வந்து முளைத்தான்?' என்று நான் வியந்துகொண்டிருந்த போது, அந்த இளைஞனைப் பற்றி என் கணவர் கூறிய விபரம், அந்த இளைஞரின் தோற்றம் எனக்கு ஏற்படுத்தியிருந்த வியப்பைவிடப் பெருவியப்பையூட்டியது!

குமரன் என் கணவருடைய அதிதியாக இந்த மலையகத்துக்கு வந்திருந்த சமயம், ஏற்கனவேயே எங்களுடைய கணவருக்கு அறிமுகமாகியிருந்த தோட்டத் துரையின் பங்களாவுக்கும் அவரை அழைத்துச் சென்றிருந்தார். அப்பொழுது அதுவரை என் கணவருக்குக் குழப்பமூட்டியிருந்த தாமரகுமாரியின் மர்மமும், அந்தச் செம்பட்டை இளைஞனைப்பற்றிய மர்மமும், ஏன்; அந்தத் தோட்டத்துரை பற்றிய மர்மமும் எதிர்பாராத விதமாகத் துலாம்பரமாகக் கூடிய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

பங்களாவுக்கு வந்த விருந்தினர்கள் இருவரையும் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றார் தோட்டத்துரை. வழமைப் பிரகாரம் மூவருக்குமிடையில் பல தத்துவச்சர்ச்சைகள் மிகக் கருசலாக நடைபெறலாயிற்று. மேல்நாட்டுச் சலாச்சாரத்துக்கும், கீழைத்தேசப் பண்பாட்டுக்குமுள்ள தாரதம்மியங்களை மூவரும் மனம்விட்டு அலசலாயினர். விருந்தினர்களின் சுவாரஸ்யமான அந்தச் சர்ச்சைக்கு மேலும் சுவையும், வீறு விறுப்பும் ஊட்ட விரும்பிய தோட்டத்துரையின் அழகிய வெள்ளைக்காரமனைவி உயர்தரமான மதுவை அழகாக விநியோகித்துக்கொண்டேயிருந்தாள். சர்ச்சைகளை கட்ட ஆரம்பிக்கவே நேரம் போனதே தெரியாமல் அவர்கள் இந்த உலக பந்தத்தை விருந்து விட்டு, உலகாதுப வ்சித்திர

# அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர்

ஈழத் திருநாட்டின் முஸ்லிம் பெருமக்களுடைய இலக்கிய முயற்சிகளின் கொடுமுடியாகத் திகழ்பவர் அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் அவர்களாவர். குடத்துள் விளக்காக அரும் பெரும் இலக்கியப்பணியாற்றிய இவரைப்பற்றி கற்றோரும், தக்கோரும் அறிந்திருந்தனரேயன்றி பொதுமக்கள் நன்கு அறிந்திருக்கவில்லை. இவருடைய இலக்கியப் படைப்புகளாம் அற்புதக்கருவூலங்கள் கிடைப்பதற்கு அரிதாகியமையும், மறு பிரசுர பதிப்புக்கள் வெளிவராமையும் இவ்வறியாமைக்கு ஏதுக்களாம்.

ஆ. பி. அப்துல் காதிறுப் புலவர் கண்டிக்கு அணித்தாயுள்ள போப்பிட்டி, தெல்தோட்டையில் 1866-ம் ஆண்டில் பிறந்தார். இவர் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றி வெளியிட்டுள்ளார். அச்சேறாத நூல்களும் பலவுள. சைவத் தொண்டாற்றிய ஆறுமுகநாவலரைப் போன்றே தமிழ் நாடு சென்று, மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு கொண்டு, அங்கேயே பல ஆண்டுகள் வாழ்ந்து, பல நூல்களைத் தமிழ் நாட்டிலேயே வெளியிட்டுள்ளார். தமிழ் நாட்டில் வாழ்ந்த புலவர்களோடும், யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த புலவர்களோடும் பல போட்டிகளிலும், கவியரங்கங்களிலும் கலந்து வெற்றிவாகை சூடியுள்ளார். இவரது பாடற்றிறமையைப் பாராட்டி யாழ்ப்பாணப் புலவர் பெருமக்கள் 'வித்துவ தீபம்' என்னும் பட்டத்தை வழங்கினர்.

இவரது நூல்களுள் ஒன்றான சந்தத் திருப்புகழ் நபி பெருமான் (ஸல்) அவர்களின் அற்புதப் பெருமைகளை நூறு வண்ணங்களிலே தீந்தமிழ்த் திரட்டாகத் தருகின்றது. இவர் செய்யுள் இயற்றுதலையே இலக்கிய வழியாகவும் மேற்கொண்டார். தமிழின் செய்யுள் மரபைப் பூரணமாக உணர்ந்து, மாலை, பதிகம் கும்மி, அந்தாதி, கலம்பகம், குறவஞ்சி, புராணம், சிந்து முதலிய வகைகளில் தன் புலமையை வெளியிட்டுள்ளார்.

அருள்வாக்கியரின் 'சந்தத் திருப்புகழ்' என்னும் நூல் 1909-ம் ஆண்டில் வெளியிடப்பட்டபோது புலவர்களாலும், அறிஞர்களாலும் இவர் போற்றிப் பாராட்டப்

## எம். ஏ. ரஹ்மான்

பட்டார். மதுரை முத்துவாலை வெண்பாப்புலிக் கவிராயர் அளித்த சாற்றுக் கவியில்:

சீருலவு மூமற் புலவர் சீறு
நூலும்
சிறந்த விரா மாயணங்கம்
பன்சொன் நூலும்
பேருலவு மருணகிரி
புகழுங் காசிம்
பெரும் புலவோ ரவர்
கடிருப் புகழும் போல
மேருலவு புயத்தனல்வா
பிச்சை செய்த
வேள்வியப்துல் காதிறியற்
கவிஞன் சொன்ன
வேருலவு திவ்ய சந்தத்
திருப்புகழ்ப்பா
வினியநவ ரசமதுரத்
தின்ப மாதோ;

என்று சீறாதந்த உமறுப் புலவருக்கும், இராமாயணம் தந்த கம்பனுக்கும்நிகராக்கி இவரைப் புகழ்கின்றார்.

இரசிகமணி கனக செந்திநாதனின் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' நூல் வெளி வந்த பின்னரே இப்புலவர் பெருமகனின் பெருமை தெரிவதாயிற்று. இதற்காக முஸ்லிம் சமுதாயம் இரசிகமணிக்குக் கடமைப்பட்டுள்ளது. அப்துல்காதிறுப்புலவர், 52 ஆண்டுகள் வாழ்ந்து 18-9-1918ம் ஆண்டிற் காலமாகி, கண்டி முஸ்லிம் மையவாடியில் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளார்.

23-5-64ல் வந்தாறுமூலை காப்பியப் பெருவிழாவில் 'மரபு' வெளியீட்டு விழா அருள்வாக்கி அப்துல்காதிறுப் புலவர் அரங்கில் மிக ஆடம்பரமாக நடைபெற்றது. ஏறாவூர்ப் பகுதி முஸ்லிம் பெருமக்கள் அன்னாரது இலக்கிய சேவையைப் பேசும்பொழுதுமெய்சிலிர்த்தனர். இவருடைய புகழ் மேலும் பரவத் தொடங்கிற்று.

பின்னர் மூதூரில் நடைபெற்ற ஈழத்து இலக்கிய வரலாற்று விழாவான இரண்டாவது தமிழ் விழாவில், அன்னாரின் பேரில் நிருமாணிக்கப்பட்டுள்ள அரங்கில் 'கங்கா தீரம்' என்னுந் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. அப்துல்காதிறுப் புலவரின் கவிதா சக்தியையும், புலமையையும் வெளிக்காட்ட கருப் பொருட்களாம் எழில் வனப்புகளூடே தவழ்ந்து வளைந்து வளைந்து நீளும் மாவலி கங்கையை மையப் பொருளாகக் கொண்ட கவியரங்கிற்கு அன்னாரின் பெயரைச் சூட்டியது வெகு பொருத்தம். இவ்வித அரங்கிற்கு ஒழுங்கு செய்து தமது முஸ்லிம் பெரும் புலவரைக் கௌரவித்த மூதூர் வாழ் பெருங்குடியினருக்கும் விழாக் குழுவினருக்கும் தமிழ் பேசும் முஸ்லிம் பெருங்குடியினர் நன்றி செலுத்தவும் கடமைப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர் சிவாபம் தமிழ் விழாவிலும் அன்னாரின் பெயரில் அரங்கு நிருமாணிக்கப்பட்டு புலவரின் புகழ் பேசப்பட்டது. இப்பொழுது அன்னாரின் நூற்றாண்டுப் பெருவிழா நாடெங்கும் நடைபெறவிருக்கின்றது. அவ் விழாக்கள் சிறப்புற அமைய எல்லாம் வல்ல அல்லாஹ்வை இறைஞ்சுகின்றோம்!

# பாரதி விழா

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்கள தமிழ் இலக்கிய மன்றம், 10-9-65 வெள்ளிக்கிழமையன்று 'பாரதி விழா' கொண்டாடுகிறது. வெள்ளவத்தைசைவமங்கையர்கழக மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில், பட்டிமன்றம், கவியரங்கம், இசைக்கச்சேரி, சிறப்புச் சொற்பொழிவு ஆகியன இடம் பெறுகின்றன.

விழா மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். பட்டிமன்ற 'பாரதி ஒரு இந்தியத்தேசிய வாதியா — அன்றி தமிழின எழுச்சிவாதியா?' என்பதைப்பற்றி ஒட்டியும் வெட்டியும் பேச்சுக்கள் நடைபெறும். இதில் திருவாளர்கள் எஸ். பொன்னுத்துரை, பி. ஏ, யோகா வல்லிபுரம், பொ. சிவப்பிரகாசம், க. நவசோதி பி. ஏ.(ஆனர்சு)சற்சொரூபவதி நாதன்பி.எஸ்ஸி, எழுவேந்தன் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

கவியரங்கத்தில் 'பாரதியைக் கண்டேன்' எனும் தலைப்பில் திருவாளர்கள் மகாகவி, தான்தோன்றிக் கவிராயர், முருகையன், மு. பொன்னம்பலம், பா. சத்தியசீலன் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

செல்வி கௌரீசுவரி கனகரத்தினத்தின் இசைக்கச்சேரியும் இடம் பெறும்.

மட்டக்களப்புப் பாரதா மன்றப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை அவர்கள் 'ஒரு சொற்கேளீர்!' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுகின்றார். கவியரங்கத்திற்கு திரு. நாவற்குளியூர் நடராசன் தலைமை வகிக்கின்றார். கருத்தரங்கத்திற்கு திரு. கருணாலய பாண்டியனார் தலைமை வகிக்கின்றார்.

## புதிய உலக சாதனை

ஜெர்மன் சனநாயகக் குடியரசைச் சேர்ந்த சிக்பிரீட் ஹர்மன் என்னும் விளையாட்டு வீரர் 7 நிமிடம் 46 விநாடிகளில் 3000 மீட்டர் தூரம் ஓடி ஒரு புதிய உலகசாதனையை நிலை நிறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வகுப்பில் நடந்தது

[2]

காலை வேளை. பாடசாலையில் பாடங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. வெளியே வெயில் காய்ந்து கொண்டிருந்தது. ஆனால் எமது வகுப்பிற்கு அடுத்த வகுப்பில் மட்டும் மாரி பொழிந்து கொண்டிருந்தது. அது வசை மாரி. ஆசிரியையொருவரின் வாயிலிருந்து வசை மொழிகளாச் பொழிந்து கொண்டிருந்தது. முதலாவது பாடம் முடியும் நேரம்.

மணியின் ஒலி 'கண கண' வென ஒலித்தது. அரசு செலுத்திய அமைதி சில நிமிடநேரம் கலைந்தது. மீண்டும் அமைதி. எமதுவகுப்பிலிருந்த ஆசிரியர் வெளியேறச் சரித்திர ஆசிரியை உள்ளே வந்தார். 'வணக்கம்' மாணவிகளனைவரதும் கரமலர்கள் மொட்டித்தன, 'வணக்கம்' ஆசிரியை கரம் குவித்தார்.

அந்தக்குரல்? ஆம், அடுத்த வகுப்பில் வசை மாரி பொழிந்த அதே குரல்! முழக்கமாக மலர்ந்திருக்கும் அந்த முகம் கறுத்திருந்தது. குரலிற் குளிர்மையில்லை. கண்களிற் கனிவில்லை. நம் முகங்களையும் அகங்களையும் அச்சம் ஆட் கொண்டது. அறையை அமைதி ஆட்சி புரிந்தது.

ஆசிரியையின் உத்தரவு பிறந்தது. 'விமலா நேற்று எழுதிய குறிப்பை வாசிக்கலாம்.' விமலா எழுந்தாள் அப்பியாசப் புத்தகத்தைப் புரட்டினாள் பயமும் தயக்கமும் தாண்டவமாட ஆசிரியையைநோக்கினாள். 'வாசிக்கலாம்' ஆசிரியையின் குரல் கடுமை கலந்தொலித்தது. அடுத்தது எனது முறை. அமைதியின் நடுவே 'டக் டக்' கென்று என் இதயம் துடிதுடிப்பது அடித்தாற் போற் கேட்டது. ஆசிரியர்களின் கோபத்திற்காளாகும் கடைமாவிகளுட் தலை சிறந்தவ ளல்லவா நான்? என் உயிர் இறைவனை எட்டிப் பார்த்து மீண்டது.

அதே சமயம் 'மலர்! விமலாவின் குறிப்பை வாசி.' என்றார் ஆசிரியை. மலர் ஆசிரியர்களனைவர்களதும் அன்பிற்குரியவள்; திறமை மிக்கவள்; குறும்புக்காரியும் கூட. அவள் எழுந்தாள் குர

**ஈஸ்வரி**

லைச்சரி செய்துகொண்டாள். அவளது கணீரென்ற குரல் எப்பொழுதுமே எம்மைக் கவர்ந்து விடும். கருங்கண் வண்டுகள் மலரை மொய்த்தன. அவள் வாசிக்கத் தொடங்கினாள்.

'வங்காளக் கடலிற் தங்களது ஆதிக்கத்தை பலப்படுத்துவதற்குக் கொழும்புத் துறைமுகக் கைப்பற்ற அயமெனப் போர்த்துக்கீசர் உணர்ந்தனர் பைய'

ஆசிரியையுட்பட அனைவரும் கொல்லென்று சிரித்து விட்டோம். 'என்ன நாய் பூனை போலே உறுமுகிறீர்?' என்றார் ஆசிரியை. மலர் சிரிக்கவுமில்லை. பதிலளிக்கவுமில்லை. அவள் தொடர்ந்தாள். சிரிப்பைச்சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு கேட்டோம்.

'இப் பாடலின் பொருள் யாதெனில் 'வங்காளக் கடலிற்கங்களது அதிக்கத்தைப் பலப்படுத்துவதற்குக் கொழும்புத் துறைமுகக் கைக் கைப்பற்றுவது அவசியமெனப் போர்த்துக்கீசர் உணர்ந்தனர். தர்மபராக்கிரமபாகு போர்த்துக்கீசர்களுடைய......' என்பதாகும். இப்பாடலின் மிகுதி எழுதப்படாதது எம் துர்ப்பாக்கியமே'

மீண்டும் கொல்லென்ற சிரிப்பும், 'கர் புர் சர்' என்ற ஒலிகளும் எம்மிடையே எழுந்தன. விரைவாகக் குறிப்புகளைக்கூறியபொழுது இடையிடையே விட்டு விட்டொழிந்த இத்தகைய ஒரு நிகழ்ச்சியை ஏற்படுக்கிவிட்டது. ஆசிரியையின் கோபத்திற் காளாக உதவிய விமலாவின் குறிப்பை, அவரைச் சிரிக்கவைப்பதற்கே மலர் பயன்படுத்திவிட்டாள். வல்லவனுக்குப் புல்லுமாயுதமன்றோ.

பென்ஸ்
கார்
போட்டி
அடுத்த இதழில்
இடம்பெறும்

# உங்களுக்குத் தெரியுமா?

**சர்வகலாசாலை:-**

மேற்கு ஜெர்மனியில் உள்ள ஹெயிடல்பர்க நகரப் பல்கலைக் கழகம் தனது 575வது ஆண்டு விழாவை தற்போது கொண்டாடியது. ஜெர்மனியில் உள்ள பதினெட்டுச் சர்வகலாசாலைகளிலும் மிகவும் பிரபல்யம் பெற்றது இதுவே. 1901-ம் ஆண்டில் 'அல்ற் ஹெயிடல்பர்க்' என்ற நாடகத்தை தயாரித்து அளித்த பின்னரே இச் சர்வகலாசாலைக்கு உலகப் புகழ் கிடைக்கலாயிற்று

**இனிப்பான தீவு:-**

இந்து சமுத்திரத்தில் மடகஸ்கார் தீவிலிருந்து 500 மைல்தூரத்தில் மாறிஷியஸ் என்றழைக்கப்படும் தீவொன்றுளது. இங்கு 5 லட்சத்துக்குமதிகமான மக்கள் வசிக்கின்றனர். இவர்களின் ஜீவியம் மிக இனிப்பானது. ஆம் சீனிச் செய்கையே இம்மக்களைக் காப்பாற்றுகிறது. சீனி உற்பத்தியினால் இங்கு வசிக்கும் மக்கள் அனைவரும் பிழைக்கின்றனர். சாறு எடுக்கப்பட்டபின் எஞ்சிய கருப்பஞ்சக்கைகளும் விளக்கெரிப்பதற்கும் மற்றும் பல தேவைகளுக்கும் உபயோகிக்கப்படுகிறதாம்.

**பன்றி-குதிரைப் பந்தயம்:-**

சுமார் 200 ஆண்டுகட்கு முன்னர் ஒல்லாந்து தேசத்தில் நடாத்தப்பட்ட ஓர் ஓட்டப் பந்தயம்பற்றிய செய்திகள் மிக சுவாரஸ்யமானவை. 6 மைல் தூர ஓட்டப்போட்டியொன்றில் ஒரு குதிரையும் பன்றியும் அமர்த்தப்பட்டன. வெற்றியடையும் விலங்கின் சொந்தக்காரர் 1000 கில்டர்ஸ்பரிசுத் தொகையை பெறுவர். பந்தயத்தின்போது குதிரைமீது இருவர் அமர்ந்திருக்க வேண்டும் என்பது ஒரு பிரதான விதியாகும்.

பன்றியின் சொந்தக்காரர் பந்தயம்தொடங்குவதற்குப் பதினைந்து தினங்கட்கு முன்பிருந்தே ஓட்டப்பந்தயத்திற்குத் தயார் செய்ய வாரம்பித்தார். பகல் முழுவதும் பன்றி உணவின்றி விடப்படும். மாலையில் குறிப்பிட்ட அரைமைல் தூரத்திற்கும் பன்றியை ஓட்டிச் செல்வார். முடிவில் பன்றிக்கு மிக பிடித்தமான உணவு அளிக்கப்படும். தினசரி இப் பயிற்சி நடைபெற்றது. பந்தயத்தின்போது பன்றி தனது உணவைத் தேடி மிக வேகமாக ஓடியது. அரை மைல் தூரத்தால் குதிரையையும் வென்றது.

**வீதிபாதுகாப்பும் சுண்டெலியும்:-**

இங்கிலாந்தில் 'உவால்சால்' என்னும் பகுதியை சார்யண்ட சிமோல் என்ற பொலிஸ்காரர் வீதி பாதுகாப்பியக்கத்தின் நிர்வாகியாக கடமையாற்றுகிறார். இவர் பாடசாலைகட்கு அடிக்கடி விசயம் செய்து மாணவர்கட்கு வீதியொழுங்குகள் பற்றி விளக்கம் தருகிறார். அங்ஙனம் செல்லும்போது வீதியொழுங்கு நடைமுறைகள் பற்றிய காட்சி ஒன்றையும், நடாத்துகிறார். இக்காட்சியில் 'பெஞ்சமின்' என அழைக்கப்படும் சுண்டெலியொன்று பிரதான நடிகனை விளங்குகிறதாம். பாடசாலை குழந்தைகள் இச்சிறு பிராணியின் அதிசய செயல்களை காண்பதற்காக அடிக்கடி வீதியொழுங்குக் காட்சிகளைப் பார்ப்பதற்குச்செல்லுகிறார்களாம்.

தொகுப்பு:
ச. சந்தனசாமி.

## பாரோர் போற்றும் பெரியார்கள் (1)

# காந்திமகான்

—அன்ரனி பெர்ணண்டோ—

அன்பு, அகிம்சை, சத்தியம் என்பவற்றின் அளப்பரிய ஆற்றலை விளக்குவதற்கு காந்திமகானின் வாழ்க்கை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்த அருங்குணங்களின் அற்புத சக்தியை அண்ணல் காந்தி தன் இளம் பருவத்திலேயே நன்கு உணர்ந்திருந்தார்.

பாரத நாட்டில் போர்பந்தர் என்னுமிடத்தில் 1869ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ம் நாள் காந்தி பிறந்தார். கரம்சந்திர காந்தியும் புத்லிபாய் அம்மையாரும் இவரது பெற்றோர்கள். குடும்பத்தில் கடைக்குட்டியான காந்தி தன் குழந்தைப் பருவத்தைப் பிறந்த ஊரிலேயே கழித்தார். பள்ளிப் பருவத்தில் இவர் தன் பாடங்களை அதிக அக்கறையுடன் கற்றுப் பல பரிசுகளையும் பெற்றார். இவர் தனது பதினெட்டாம் வயதில் சட்டம் பயின்று நியாயவாதியாவதற்கு இங்கிலாந்து சென்றார்.

காந்தி வளரும்போது இவரிடம் இயல்பாகவே ஊறிக்கிடந்த அருங்குணங்களும் வளர்ந்து வலுப்பெற்றன. இங்கிலாந்து செல்லும்போது தன் தாயார் சொல்லிய பக்திமதிகளை நினைவில் நிறுத்தி மேல்நாட்டு வாழ்க்கையிலே இவர் மதுவையும், மங்கையையும், மாமிசத்தையும் நாடாமல் தளராத உறுதியுடன் இருந்தார். நியாயவாதியாகப் பட்டம் பெற்றுத் தாய் நாடு திரும்பிய காந்தி பின்னர் தென்னாபிரிக்காவுக்குச் சென்று தொழில் செய்தார்.

காந்தி தன் சிறு வயதிலிருந்தே நல்லவர் கெட்டவர் என்ற வேறுபாடின்றி எல்லா உயிர்களிடத்தும் மிகுந்த அன்பைச் சொரிந்தார். மற்றவர்களுக்கு எள்ளளவேனும் துன்பம் விளைவிக்க எண்ணாத அகிம்சை வழியிலே இவர் வாழ்ந்தார். என்ன நேரினும் உண்மையே பேசுவதென உறுதிபூண்டு தன் வாழ்நாள் முழுதும் சத்தியத்தைக் கடைப்பிடித்து வந்தார். கணவன் கருத்தறிந்து நடந்துகொள்ளும் குணமுள்ள கஸ்தூரிபாய் காந்தியின் மனைவியாக வந்து வாய்த்து இவரது இல்லறவாழ்வை இன்பமயமாக்கினாள்.

அகிக்க வெறிபிடித்தவெள்ளையர்கள் தென்னாபிரிக்காவில் வாழும் இந்திய மக்களை மதிக்காது கேவலமாக நடத்தினர். அவர்களை அடிமைகளாக்கித் துன்புறுத்தினர். கருணைமூர்த்தியான காந்தி இந்தக் கொடுமைகளைக் கண்டு கண்கலங்கினார். இவரைக்கூட அந்த அகிக்க வெறியர்கள் பலமுறை அவமதித்தனர். இந்த அநியாயங்களை இப்படியே நீடிக்க விடுவதா? பாரத மக்கள் மனிதர்களில்லையா? அவர்கள் ஏன் இந்த வெறியர்களுக்கு அடிமைகளாக வாழவேண்டும்? இனியொரு கணமேனும் நமது பாரத நாடு அந்நியரின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கக்கூடாது. என்ன நேரினும் உயிருள்ளவரையில் போராடி நமது நாட்டையும் மக்களையும் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கவேண்டுமென்றும் மனவுறுதியோடு இவர் தாயகம் திரும்பினார். அகிக்க வெறியரை எதிர்த்து கத்திகள், துப்பாக்கிகளின்றி இரத்தம் சிந்தாத அறப்போரிலே குதித்தார். மற்றவர்களும் சுதந்திரவேட்கை மேலிட அண்ணல் காந்தியைப் பின்சென்றனர்.

அறப்போரின் விளைவாகக் காந்திமகான் பலமுறை சிறைசெல்ல நேர்ந்தது. உண்ணாவிரதம் இருந்தும், அடிகள் உதைகள் வாங்கியும் உருக்குலைய நேர்ந்தது. எனினும் காந்தி மகானின் அறப்போரின்முன் வெறியர்களின் துப்பாக்கிகள் செயலற்றுப்போயின. ஈற்றில் 1947ம் ஆண்டு அறம் வென்றது. ஆம், பாரதநாடு சுதந்திர நாடாகி, எங்கும் விடுதலைக் கீதம் ஒலித்தது.

நாட்டின் விடுதலைக்காகவும் மக்களின் நலனுக்காகவும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த காந்திமகான் 1948ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் நாள் மதவெறிபிடித்த ஒருவனின் துப்பாக்கிக்குப் பலியானார். அண்ணல் காந்தி இறந்துவிட்டார், எனினும், உலக மக்களின் உள்ளங்களிலே இவருக்கு ஓர் உன்னத இடம் கிடைத்துவிட்டது.

## புதிய மருமக்கள்

129 பொ. சுந்தா அனந்தா, இந்துக் கல்லூரி, கொக்குவில். 130யே. அாசரத்தினம், செட்டிபாளையம், குருக்கள் மடம் 131 கெங்வேந்திரம் கலைமகள், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

132 நா. நகுலேந்திரன், இந்துக்கல்லூரி, கொழும்பு 133 த. சிவராசா, அல்வாய் வடக்கு 134 இ. குலசேகரன், 'வளர்மதி' கரவெட்டி கிழக்கு. 135 யோ. சந்திரா, அம்பனை, தெல்லிப்பளை 136யே. மகாலிங்கம், அரசினர் கல்லூரி, மட்டக்களப்பு 137 ச. பாக்கியசாமி, ஊவாக்கல்லூரி, ஊவாகட்டவளை 138 ச. சிவாஞ்சலி, சித்தங்கேணி.

## நூலறிவு

தமிழன்னையின் சிறந்த அழியா அணிகலன்களாக விளங்கும், கீழ் வரும் சில முத்தமிழ் நூல்களை யார் யார் ஆக்கினார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

1. சிலப்திபகாரம்.
2. மணிமேகலை.
3. சீவகசிந்தாமணி.
4. தொல்காப்பியம்.
5. திருமுருகாற்றுப் படை.
6. மதுரைக் காஞ்சி.
7. முதுமொழிக் காஞ்சி.
8. குறிஞ்சிப் பாட்டு.
9. நன்னூல்.

விடைகள்

1. இளங்கோவடிகள்.
2. சீத்தலைச்சாத்தனார்.
3. திருத்தக்கதேவர்.
4. தொல்காப்பியர்.
5. நக்கீரர்.
6. மாங்குடி மருதனார்.
7. கூடலூர்க் கிழார்.
8. கபிலர்.
9. பவணந்தி முனிவர்.

—தொகுப்பு—
சி. சுந்தர ராஜா,
தாவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்ப்போரை பரவசமாக்கும் 3வது வாரம்!

**செல்லமஹால்** (கொழும்பு) **வின்சர்** (யாழ்ப்பாணம்) **இம்பீரியல்** (மட்டக்களப்பு) **நெல்சன்** (திருகோணமலை)

சிற்பக் கலைக்காக தன் குடும்பத்தையே தத்தம் செய்யும்
தூய கலைஞனின் தித்திப்பான காவியம்

**கல்யாண்குமார்-சரோஜாதேவி-நாகையா**
**கிரிஜா-புஷ்பவல்லி-உதயகுமார்**

முதலியோர் நடித்த

# சிற்பியின் செல்வன்

[ஈஸ்ட்மென் கலர்]



**எதிர்பாருங்கள்!**
ஜெமினி கணேசன், தேவிகா, மனோகர், முத்துராமன், ரங்கராவ் பாலாஜி
நடித்த
ஜெமினியின் உன்னத சித்திரம்
## வாழ்க்கைப் படகு

**எதிர்பாருங்கள்!**
பத்மினி பிக்சர்சாரின் தயாரிப்பு
எம். ஜி. ராமச்சந்திரன், ஜெயலலிதா, நம்பியார், நாகேஷ்
தோன்றும்
## ஆயிரத்தில் ஒருவன்
[ஈஸ்ட்மென் கலர்]

---

★ ★ ★ மக்கள் இதயத்தில் இடம் பிடித்து விட்ட ★ ★ ★

**வெற்றி முரசம் கொட்டும் 2வது மாதம்!**

**சென்ட்ரல்** (மருதானை) **ஈரேஸ்** (பாமன்கடை) **ராணி** (யாழ்ப்பாணம்) **ராஜேஸ்வரா** (மட்டக்களப்பு) **ஜோதி** (திருமலை) **லிபேர்டி** (ஹட்டன்) **லிபேர்டி** (பதுளை) **ஆனந்தா** (கம்பளை)

'சாந்தி' தரமான படம்.

'செந்தூர் முருகன் கோவிலிலே' என்ற பாடல் உள்ளத்தைத் தொடுகிறது. முழுப் படமே உள்ளத்தைத் தொடுகிறது எனக் கூடக் கூறலாம்.
—தினகரன்

நல்ல கருத்துக்இனிய கீதங்களும் அழகான காட்சிகளும் நிறைந்த இப்படம் காட்சிக்குக் காட்சி விறு விறுப்பாகச் செல்கிறது.
மொத்தத்தில் 'சாந்தி' மிகவும் நல்ல படம்.
—வீரகேசரி



நடிகர் திலகம்
**சிவாஜி கணேசன்**
**விஜயகுமாரி, எஸ்.எஸ். ஆர், தேவிகா, எம். ஆர். ராதா, நாகையா, சகஸ்ரநாமம், சந்தியா, நாகேஷ், மனோரமா**
நடித்த
ஏ. எல். எஸ்.

# சாந்தி

பாடல்கள்: கண்ணதாசன்
பின்னணி: சுசிலா, ஸ்ரீனிவாஸ், சௌந்தரராஜன்
இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி
டைரக்ஷன்: பீம்சிங்

**வயது வந்த—வயது வராத ஒவ்வொரு பெண்ணும் பார்க்க வேண்டிய படம்!**

---

## 6-வது வாரம்!
# கிங்ஸ்லி
மற்றும்
**சினிமாஸ் திரைகளில்!**

பாசத்தைக் கடந்து நீதியைத் துலக்கி நேர்மையை நிலைநிறுத்தும் உயர்ந்த சித்திரம்!



எம். ஜி. ஆர்., சரோஜா தேவி, அசோகன், நம்பியார், எம். ஆர். ராதா, ரங்கராவ், கன்னம்பா, 'சின்னப்பா' தேவர்
நடித்த
தேவர் பிலிம்ஸ் அளிக்கும்
# நீதிக்குப் பின் பாசம்

---

மகத்தான 2வது வாரம்
**கெப்பிட்டல் — பிளாஸா**
**விஜயா மொடேர்ன் வசந்தா**
[மட்டக்களப்பு] [பண்டாரவளை] [புசல்லாவ]
3வது வாரமாக காண்பிக்கப்படுகிது
**ராஜா** [யாழ்ப்பாணம்]

பாகுபாட்டால் மனிதனைப் பேதம் செய்யும் மடமையை உடைத்தெறியும் ஒப்பற்ற காவியம்!




விஜயபுரி வீரன் ஆனந்தன்
அசோகன்
சந்திரகாந்தா
நாகேஷ்
ஷீலா
பாண்டி-செல்வராஜ்
தோன்றும்

# நானும் மனிதன்தான்

---

## 2வது வாரம்!
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

★ நட்புக்கு இலக்கணம்
★ பாசத்துக்கு எடுத்துக் காட்டு
★ பரிவுக்கு உரைகல்
★ பண்புக்குக் கண்ணாடி



ஜனாதிபதியின் விருது பெற்று தமிழகத்தில் வெற்றிக் கொடி நாட்டிய

# கைகொடுத்த தெய்வம்

சிவாஜி கணேசன்-சாவித்திரி-ரங்கராவ்
எஸ். எஸ். ஆர்.-கே. ஆர். விஜயா
புஷ்பலதா-எம். ஆர். ராதா
நடித்தது

**கிங்ஸ்லி** முதலான சினிமாஸ் திரைகளுக்கு வருகிறது!

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் செப்டெம்பர் மாதம் [illegible]-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org